www.tamilarangam.net


# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 24-02-1995



உள்ளே...
- பேச்சுவார்த்தையில் கட்டங்களை நோக்கிய கட்டாயம்
- அனர்த்தங்களும், அபிவிருத்தியும்
- சிறுகதை: - வைகறைப் பூக்கள்
- சந்திரிகா அரசை பொறிக்குள் சிக்கவைத்து விட்ட இராணுவம்
- அல்ஜீரிய விமானக் கடத்தலும் அரபுலக - மேற்குலக பண்பாட்டு மோதலும்


## நான்கு ஒலி, ஒளி நாடாக்கள் ஒரே நாளில் வெளியீடு

இரண்டு பாடல் ஒலிப்பதிவு நாடாக்களினதும், இரண்டு வண்ணப்பட ஒளிப்பேழைகளினதும் வெளியீட்டு விழா கடந்த மாதம் 11 ஆம் நாள், வல்வெட்டித்துறை நெடியகாடு பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்றுள்ளது. கடற்புலிகளின் ஆதரவுடன் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய 'உயிர்ப் பூ' வண்ணப்பட ஒளிப்பேழையும், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய, 'செவ்வரத்தம் பூ' வண்ணக் குறும்பட ஒளிப்பேழையும், விடுதலைப் புலிகள் (பிரித்தானியக் கிளை) கலை, பண்பாட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்ட கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்கள் அடங்கிய தேனிசைச் செல்லப்பாவின்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

## தமிழர்களுக்காக பேச விடுதலைப் புலிகளே உள்ளனர்

திரு. ஜோர்ஜ் ஆர்னி

"தமிழ் சிறுபான்மை மக்கள் தொடர்பாக பேசுவதற்கு இன்று இருக்கும் ஒரேயொரு அமைப்பாக விடுதலைப் புலிகளே உள்ளனர்" இவ்வாறு பி. பி. சி யின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார்.

அண்மையில் பி. பி. சி யின் சிங்கள சேவையாகிய 'சந்தேசிய'விற்கு வழங்கிய செவ்வியில்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

## யாழ். மருத்துவமனையில் கடந்த ஆண்டில் பிறந்த சிசுக்களில் 119 உடன் இறப்பு

யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த ஆண்டில் பிறந்த குழந்தைகளில் 119 குழந்தைகள் பிறந்து, இருபத்திநான்கு மணிநேரத்தில் இறந்துள்ளதாக யாழ். போதனா மருத்துவமனை எடுத்துள்ள புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

தாய்மார்களுக்கு ஊட்டமின்மையால், குழந்தைகளின் இறப்பு விழுக்காட்டின் அளவு ஐம்பது விழுக்காட்டை உள்ளடக்கியபோதும், மகப்பேற்றுக் காலங்களில் உரியமுறையில் மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்ளத் தவறியமை, இறுதி நேரத்தில் அதாவது மகப்பேறு நடைபெற வேண்டிய நேரத்தில், பிந்திய

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

# 18.02.1995 இல் யாழ்நகரில் நடைபெற்ற மாபெரும் வெகுஜன ஆர்ப்பாட்டப் பேரணி

**யாழ்நகரில் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி சிறீலங்கா அரசு கடைப்பிடிக்கும் திட்டமிட்ட அசமந்தப்போக்கைக் கண்டித்து 18.02.1995 இல் மாபெரும் வெகுஜன ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது. யாழ் மாவட்டத்திலுள்ள வணிகக் கழகங்கள், தொழிற் சங்கங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் கல்லூரி வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட சுமார் 50,000 இற்கு மேற்பட்ட மக்கள் பெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடாத்தினர். மேலும் இதே தினத்தில் கொழும்பிலிருந்து வந்த சமாதானக்குழுக்களை விடுதலைப்புலிகள் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் பற்றியும் குறிப்பாக அரசியல் பேச்சுக்களின் நிலைமைகள் சம்பந்தமாகவும் இரு தரப்பினரும் கலந்துரையாடினர். சுமார் ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பெரும் ஊர்வலமாக நீண்ட நேரம் யாழ் கச்சேரி முன்பாகக் கூடி பின்பு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பினர். அந்த மகஜரின் முழுவிபரமும் 3 ஆம் பக்கத்தில் உண்டு.**

## இலங்கை இன்டர்போலின் பதில் இந்தியாவின் சதியை அம்பலமாக்குகிறது

அமைதிவழித் தீர்வுக்கு சிறீலங்கா அரசு -விடுதலைப் புலிகள் முயன்றுவருவதைக் குழப்பி, பேச்சுவார்த்தைகளை முறியடிக்கக்கூடிய விடயங்களை இந்தியா தூண்டிவருவதற்கான புறச்சான்றாக, கடந்தவாரம் 'இன்டர்போல்' அனைத்துலக பொலிஸ் அமைப்பின் இலங்கைக் கிளை இந்தியாவின் 'இன்டர்போல்' பொலிசுக்கு அனுப்பி வைத்துள்ள பதில் அமைகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், இந்தியாவால் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனையும், புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானையும் கைது செய்வதற்குத் தங்களால் இயலவில்லை என அறிவித்துள்ள இலங்கை இன்டர்போல், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பிரபாகரனும், பொட்டம்மானும்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

## வாசுதேவ நாணயக்காரா யாழ். நகருக்கு விஜயம்

இரத்தினபுரி சிறீலங்காப் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா தலைமையிலான 15 பேர் கொண்ட சமாதானக் குழுவினர் யாழ். குடாநாட்டுக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை 17 ஆம் நாள் யாழ். சென்ற இவர்கள், விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி, உண்மை நிலைகளைத் தெளிந்துகொண்டார்கள்.

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

## உடன்பாடுகள் உதாசீனம்; இராணுவம் மாறாகச் செயற்படுகிறது

மோதல் தவிர்ப்பினை மேற்பார்வையிடும் குழுக்களின் தலைவர்களான நெதர்லாந்தைச் சேர்ந்த போல் கென்றி கோஸ்டிங் (யாழ்ப்பாணம் -மன்னார் பிராந்திய கண்காணிப்புக் குழுத் தலைவர்), கனடாவைச் சேர்ந்த கிளிவ் மில்னே (வவுனியா -முல்லைத்தீவு கண்காணிப்புக் குழுத் தலைவர்), நோர்வேயைச் சேர்ந்த ஆடன் கோம் (திருகோணமலைப் பிராந்தியக் கண்காணிப்புக் குழுத் தலைவர்), நோர்வேயைச் சேர்ந்த ஜோகான் கபிரியேல்சன் (மட்டக்களப்பு -அம்பாறைப் பிராந்தியக் கண்காணிப்புக் குழுத் தலைவர்) ஆகியோர் சிறீலங்கா இராணுவத்தின் பிரிகேடியர் சிறில் பீரிஸ் (சிறீலங்கா அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாம், மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றவர்) சகிதம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர்.

இவ்விஜயத்தின்போது இவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...



விடுதலைப்புலி வீரன் பாதுகாப்பு வழங்கி நிற்க, போர்க் கைதிகளான 'சாகரவர்த்தனா' கப்பல் கப்டன், அவரது உதவி அதிகாரி ஆகியோருடன் பேச்சுவார்த்தையில் (2ம் கட்டம்) கலந்து கொண்ட சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகள்.

## ஆரம்பம் முதலே சில சக்திகள் சமாதானத்திற்கு தடையாக உள்ளன

ரூபவாகினிக்கு திரு.தமிழ்ச்செல்வன்

தமிழ் மக்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு புதிய அரசினால் நல்லதொரு தீர்வுத்திட்டம் முன் வைக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. ஏனெனில் சிங்கள மக்களிடம் தமிழ் மக்களின் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதாகக் கூறியே பெரும்வாக்குப் பலத்துடன் ஜனாதிபதி சந்திரிகா வெற்றி பெற்றிருக்கின்றார். இதனால் இந்தப் பேச்சுவார்த்தை வெற்றி அளிக்கும் என நம்புகிறோம்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அண்மையில் ரூபவாகினிக்கு அளித்த செவ்வியில் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் யாழ். பரி. -யோவான் கல்லூரி மைதானத்தில் அரச தரப்புக் குழுவினை வரவேற்க வருகை தந்திருந்த திரு. தமிழ்ச்செல்வனை ரூபவாகினி நிறுவனத்தைச் சேர்ந்த செய்தியாளர்கள் செவ்வி கண்டனர்.

யு. என். பி. அரசிடம் இல்லாத நம்பிக்கை புதிய அரசிடம் உங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. இது ஏன்? எனச் செய்தியாளர் கேட்டதற்கு, யு. என். பி

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டக்களப்பில் விசேட அதிரடிப் படையினரின் அடாவடித்தனங்கள் தொடர்கின்றன

மட்டக்களப்புப் பகுதியில், சிறீலங்கா விசேட அதிரடிப் படையினர், தமிழ் மக்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. திருக்கோவில் பகுதியில், ஒவ்வொரு கடைகளிற்கும் செல்லும் அதிரடிப்படையினர், அங்கிருந்து தலா ஐந்து பைகள் சீமெந்தை கட்டாயமாகப் பெற்று, பதுங்குகுழிகளை அமைத்து வருகின்றனர். தரமறுக்கும் கடைக்காரர்கள் மிரட்டப்பட்டும் உள்ளனர். "இப்போது நாங்கள் கேட்டால் தரமறுக்கிறீர்கள்; எங்களின் காலம் மீண்டும் வந்தால் ஒரு கை பார்ப்போம்" எனப் பல வர்த்தகர்கள் மிரட்டப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முகாம்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளிலும், முகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகளைத் துப்பரவு செய்யும் வேலைகளிலும் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினர், அப்பகுதி மக்களைப் பிடித்துவந்து முகாமைச் சுற்றி துப்பரவாக்கும் வேலையில் ஈடுபடுத்தினர். கடந்த 7 ஆம், 8 ஆம் நாட்களில் ஊரணிப்பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த பொதுமக்களைக் கொண்டு சென்று தம் முகாம்களை பலப்படுத்தும் வேலையில் அதிரடிப்படையினர் ஈடுபடுத்தியுள்ளனர். இதுபோன்று மட்டக்களப்புப் பகுதிகளில் படைமுகாம்களை அண்மித்துள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு வேலை வாங்கப்படுகின்றனர்.

இதேவேளை அக்கரைப்பற்றில், அதிரடிப்படையினரும், ஈ. பி. டி. பி யினரும் இணைந்து அப்பகுதியில் நடமாடும் பொது மக்களை, புகைப்படம் எடுத்தும் வருகின்றனர். ■

# எமது மக்கள் தமது முதலீடுகளை தமிழீழ வைப்பகத்தில் வைக்கட்டும்

**வே. பாலகுமாரன்**

தமிழ்மக்களால் கொழும்பு வங்கிகளில் முதலீடு செய்யப்படும் பணம் தமிழினத்தை அழிப்பதற்கே உதவும் என விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திரு. வே. பாலகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ வைப்பகத்தில் நடைபெற்ற மாவீரர் நிதியத்தின் தொடக்க விழாவில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் தலைமையில் நடைபெற்ற விழாவில், திரு. பாலகுமாரன் தொடர்ந்து பேசுகையில்;

கொழும்பு வங்கிகளில் தமிழ் மக்களால் வைப்பிலிடப்படும் பெருந்தொகையான பணம் சிங்கள அரசிற்குக் குண்டு வாங்கவே உதவும். இக்குண்டுகள் தமிழர் மீது தாக்குதல் நடத்தவே உதவும்.

ஆகவே நாம் விழிப்பாக இருக்கவேண்டும். இந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

எமது மக்கள் தமிழீழ வைப்பகத்தில் முதலீடு செய்ய வேண்டும். இதன் மூலம் எமது தேசத்தை அபிவிருத்தி செய்யவும் மேம்படுத்தவும் அந்த நிதி பயன்படும்.

மாவீரர்கள் தக்கென எதையும் எதிர்பாராமல் நாட்டுக்காகத் தம் முயிரை அர்ப்பணித்தவர்கள். இந்த புதிய மாவீரர் நிதியத்தின் மூலம், மாவீரர்களின் உறவினர்களுக்கு உதவி செய்யலாம் என்பதே நோக்கமாகும்.

இச் சந்தர்ப்பத்தை எமது மக்கள் பயன்படுத்தி இத் தேசத்தின் விடுதலைக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றார். ■

# பொருண்மியத் தடையினாலேயே வளங்கள் வெளியே வந்தன

□ வன்னி அரசியற் பொறுப்பாளர்

"இன்று சிறீலங்கா அரசினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் என்ற அம்சத்துக்குள் அடங்கும் பொருண்மியத் தடையினால் எங்களுடைய மண்ணிலே இருந்த வளங்கள் ஒவ்வொன்றும் வெளியே கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த அனர்த்தங்கள் ஒவ்வொன்றும் எங்களை, எமது மக்களை மண்ணிலே சுதந்திரமாக சொந்தக் கால்களில் வாழ்வதற்கு வழிவகுக்கின்றன என்பதைத்தான் நாங்கள் இந்த இடத்திலே விளங்கிக்கொள்ள வேண்டுமென வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. நீகன் அவர்கள், கடந்த மாதம் 4 ஆம் நாள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற திணைக்களங்கள் இணைந்து நடாத்திய அனர்த்தங்களிற்கான அபிவிருத்தி திட்டங்களை இனங்காணலின் கட்டம் இரண்டிற்கான ஆய்வுப்பட்டறை நிகழ்வில் சிறப்புரையாற்றும்போது கூறினார்.

கிளிநொச்சித் திட்டப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. ஐங்கரன் உரையாற்றும்போது, "இன்று எமது போராட்டம் எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கின்றதோ அதேபோல் ஏனைய துறைகளும் இங்கு வளர்ச்சி அடையவேண்டும் என்ற நோக்கத்திற்காக, எமது தேசியத் தலைவர் இங்கு பல துறைகளாகப் பிரித்து படை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்" என்றும் கூறினார். தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி உரையாற்றுகையில், "எங்களுடைய மக்களையும், எங்களுடைய மண்ணையும் தலைதூக்கிவிடுகின்ற பொறுப்பு எங்களுடைய ஒவ்வொருவரின் கையில்தான் இருக்கின்றது; இதை நாங்கள் ஒவ்வொருவரும் ஆழமாக உள்வாங்கிக் கொள்ளவேண்டும் என்று கூறினார். இந்நிகழ்வில் முல்லைத்தீவு அரச அதிபர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். ■

# உடன்பாட்டின் வெற்றி தோல்வி இராணுவத்தின் கையிலேயே உள்ளது

**– கலாநிதி அன்ரன் பாலசிங்கம்**

இம்முறை உருவாகியுள்ள தாக்குதல் நடவடிக்கை நிறுத்த உடன்படிக்கையின் வெற்றி தோல்வி சிறீலங்கா ஆயுதப்படைகளின் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. விடுதலைப் புலிகள் இம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை இறுதி வரை உறுதியாக கடைப்பிடிப்பர். தலைவர் சகல படை தளபதிகளுக்கும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்கு விதிகள் குறித்து அறிவித்துள்ளமையை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இவ்வாறு அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சிறீலங்கா இராணுவத்தினர் போர் நிறுத்தங்களை மீறியதனாலேயே சமாதான பேச்சு வார்த்தைகள் கடந்த காலங்களில் குழப்பமடைந்தன.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் நிறுத்தங்களைக் கண்காணிக்க குழுக்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் சிறீலங்கா இராணுவத்தினர் போர் நிறுத்த மீறல்களில் ஈடுபட்டனர். இதனாலேயே இரு தரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் இடையில் முறிந்தன.

திம்பில் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த போது சிறீலங்கா இராணுவத்தினர் வவுனியாவில் 200 தமிழர்களைக் கொலை செய்தனர். இதனால் திம்பு பேச்சுவார்த்தை முறிந்தது.

இதேபோல் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சியின் போதும் சிறீலங்கா இராணுவத்தினர் அத்துமீறல்களில் ஈடுபட்டனர். இதனால் எமக்கிடையிலான சமாதானப் பேச்சுக்கள் குழம்பின.

ஆனால் இம்முறை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரனுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள போர் தவிர்ப்பு ஒப்பந்தமானது முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இம் மோதல் தவிர்ப்புமீறல்களைக் கண்காணிக்க மேற்குலக பிரதிநிதிகளை உள்ளடக்கிய சமாதானக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றார். ■

# "அமைதி தொடரவேண்டும்; அதுவே எமது விருப்பம்"

**கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை**

"சிறீலங்கா அரசுக்கும் எமக்கும் இடையே போர் தவிர்ப்பு ஏற்பட்டுள்ள இந்த நிலையில் தற்போதைய அமைதி தொடர்ந்துகொண்டே இருக்கவேண்டும் என்பதுதான் எமது விருப்பம்; இதற்கு நாம் நேசக்கரம் நீட்டுவோம்."

வல்வெட்டித்துறை நெடிய காடு பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்ற இரு ஒலிப்பதிவு நாடாவினதும் இரு ஒளிப் பேழைகளினதும் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் சிறப்புத் தளபதி திரு. சூசை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசும்போது, "இன்று இந்த மக்கள் இந்தப் போர் தவிர்ப்பு நடவடிக்கையினைத் தொடர்ந்து, தமது தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்; இந்த தொழில் நடவடிக்கைகள் தொடரவேண்டும் என்பதுதான் எமது விருப்பம் ஆனால் அரசினது விருப்பு எதுவோ தெரியாது.

சிறீலங்காக் கடற்படைக்கு எதிராக நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல்களோடு பின்னிப்பிணைந்தவர்களை எடுத்துக்கொண்டால், ஏதோ ஒருவிதத்தில் கடற்படையினது நடவடிக்கைகள் அவர்களைப் பாதித்திருக்கின்றது.

கடற்புலிகளின் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்த சகோதரி நளாயினி தனது தாயாருக்கு எழுதிய கடிதத்தில், இந்த வீதியோரங்களில் -தெருவோரங்களில் சோகமாகத் திரிகின்ற இந்தப் பிள்ளைகளின் அவலம் எப்போது நீங்கும்? எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

'உயிர்ப்பூ' என்கின்ற இப்படத்தில் இந்த நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. சிறீலங்காக் கடற்படையின் அனர்த்தங்கள் தான், கடற்புலிகளை உருவாக்கியது" என்றார். ■

**நோர்வே நாட்டின்**

# உள்நாட்டு அமைச்சரவை அதிகாரிகள் விடுதலைப் புலிகளைச் சந்தித்தனர்

நோர்வே நாட்டின் உள்நாட்டு அமைச்சரவையைச் சேர்ந்த இரு அதிகாரிகள் 15. 02. 95 புதன்கிழமையன்று, யாழ். நகரில் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர். விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்ட அச் சந்திப்பில், இலங்கைத் தீவின் இன்றைய அரசியல் நிலை குறித்து, நோர்வே அதிகாரிகளுக்கு விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டது. அத்துடன் தமிழ் மக்களுக்கு உறுதியான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை, பாதுகாப்பு உறுதிப்படுத்தும் வரை நோர்வேயில் உள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பவேண்டாம் என, அச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர். ■

# தமிழீழ மாணவர்களின் கல்வியில் மிகவும் அக்கறையுடன் இருக்கும் தமிழீழத் தேசியத் தலைவர்

"எமது தேசியத் தலைவர், எவ்வாறு எமது எதிர்கால சந்ததியை ஒரு ஆரோக்கியமான, உயர்வான நிலையை அடையச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தாரோ, அதன் அடித்தளம் திடமாக இடப்பட்டிருக்கிறது; இதனை இங்கே தெளிவாக உணரக்கூடியதாக இருக்கின்றது" இவ்வாறு, விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

10. 02. 95 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற, தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கல்வித் துறை வளர்ச்சியில் எமது தேசியத் தலைவர் மிகவும் அக்கறையுடன் இருக்கின்றார் எனத் தெரிவித்த திரு. தமிழ்ச்செல்வன், எமது மாணவர்களினுடைய, எதிர்கால சந்ததியினுடைய வளர்ச்சிக்காக பல அமைப்புக்களை அவர் தனது நேரடிப் பார்வையில் உருவாக்கியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். ■

# மீண்டும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கல்

கடந்த பத்து ஆண்டுகளாகக் கைவிடப்பட்டிருந்த கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கல் விழா, எதிர்வரும் பங்குனி மாதம் மீளவும் நடைபெறவுள்ளது.

ஒல்லாந்தர் காலம் முதல் உற்சவப் பொங்கலுக்குரிய பண்டங்கள் சாவகச்சேரி சந்தையிலிருந்து மேளதாள வாத்தியங்கள் சகிதம் எடுத்துவரப்படும் வழமை உண்டு. இம்முறை இதற்காகப் பத்துப் படகுகள் கிளாலிக் கடலேரியில் போக்குவரத்தில் ஈடுபடவுள்ளதாகக் கண்டாவளைச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# கடந்த ஆண்டில் பிறந்த 65 விழுக்காடான குழந்தைகள் ஊட்டமின்மையால் பாதிப்பு

யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த ஆண்டு ஏழாயிரம் குழந்தைகள் பிறந்துள்ளன என, யாழ். போதனா மருத்துவமனைப் பிறப்பு, இறப்புப் பிரிவின் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 6500 குழந்தைகளின் பதிவுகள் முடிவடைந்துவிட்டன. 500 குழந்தைகளின் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக மேலும் தெரியவருகின்றது. 65 விழுக்காடு அளவிலான குழந்தைகள் ஊட்டக்குறைவாகக் காணப்பட்டதாக போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "கூடம் கோணலாம்"

"அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான நாளை ஒதுக்கித் தருமாறு அரசு, விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது; ஆனால் அவர்கள்தான் அதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்" என, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தினரிடையே பேசுகையில் கூறியுள்ளார்.

உண்மையில், இன்று முரண்பாடுகளை எவ்வாறு தீர்ப்பது (Conflict Resolution) என ஆய்வுசெய்யும் அனைத்துலக அறிஞர்கள், அமைதிப் பேச்சுவார்த்தையை (Peace Negotiation) தொடங்குவதற்கு முன்னர், அமைதியைக் கட்டி எழுப்புவதற்கான (Peace Building) முயற்சிகள் இடம்பெறவேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இந்த அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளே நீண்டகாலமாகப் புரையோடிப்போயிருக்கும் பகைமை உணர்வுகளையும் பழிவாங்கும் மனோநிலையையும் குறைக்கும் என்பது, ஆய்வாளரின் அடிப்படைக் கருத்து. இந்த அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் நடைபெறமுன், அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது, பேச்சுவார்த்தையின் வெற்றிக்கு உதவாது என்பது, பல அனைத்துலக முரண்பாடுகள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் கிடைக்கப்பெற்ற படிப்பினை.

இந்த வகையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்கள் தொடங்குவதற்கு முன்னர், அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை ஊக்குவித்தனர். மக்களுடைய நாளாந்த வாழ்வுக்கு ஏற்படுத்தப்பட்டுவிட்ட இன்னல்களை மாற்றியமையுங்கள் என்றே கேட்டனர்; கேட்கின்றனர். சிறீலங்காவின் புதிய அரசும் புனர்வாழ்வு (Rehabilitation), புனரமைப்பு (Reconstruction) என்பவற்றுக்கு முதன்மைத்துவம் கொடுக்க, உடன்பாடு தெரிவித்தது. பொருண்மியக் கட்டுப்பாடுகளை பெருமளவில் தளர்த்த இணங்கியது. இருந்தபோதிலும் முற்றான பொருண்மியத் தடை அகற்றலின் அவசியத்தை வலியுறுத்தவேண்டிய கடமையையே விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர். பொருண்மியத்தடை நீக்கப்பட்டவற்றுக்குக்கூட, இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் சுதந்திரமான நகர்வுகள் இடம்பெறவில்லை என்பது கண்கூடு. உடன்பாடுகள் உதாசீனம் செய்யப்படுவதும், இராணுவம் உடன்பாடுகளுக்கு மாறாகச் செயற்படுவதும் அமைதிவழிப் பேச்சுக்கான காலதாமதத்தை ஏற்படுத்துகின்றனவே தவிர, விடுதலைப் புலிகள் இதற்குக் காரணம் அல்ல என்பது நடைபெறும் சம்பவங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றவர்களுக்குத் தெரியும்.

அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கான அமைதியைக் கட்டியெழுப்பும் முயற்சிகளைக்கூட, சிங்கள பெளத்த பேரினவாதத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதுவே காலதாமதத்திற்கான காரணம். இதனை 'பலிப்பான சிறீகுணரத்தின சந்தானந்த மகாநாயக்க தேரோ'-வின், "பிரதான அரசியற் கட்சிகள் பெரும்பான்மை சிங்கள மக்களின் கோரிக்கைகளை வழங்குவதைப் பார்க்கிலும், தமது அதிகாரத்தைப் பாதுகாக்க முயன்று வருகின்றனர்" எனும் கருத்து தெளிவாக்குகின்றது. "பெரும்பான்மை சிங்கள மக்களின் நம்பிக்கையையும் அவர்களின் நீண்டகாலப் பாரம்பரியத்தையும் அடிப்படையாகக்கொண்ட அரசியல் தீர்வுகளையே சிறுபான்மையினருக்கு வழங்கவேண்டும்" என அவர் வலியுறுத்துகின்றார்.

இந்த 'சிறுபான்மை இனப்பிரச்சினை' என்ற தத்துவம் தான் அடிப்படையையே கோணலாக்குகின்றது. தமிழ்த் தேசியத்தை நிராகரிக்கும் எந்த முயற்சியும் ஆரோக்கியமான அமைதிப் பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்காது. 'தேசியவாதம்' (Nationalism) எனும்பொழுது, அது அம்மக்கள் வாழும் ஒரு பரப்பை உள்ளடக்கும் என்பதற்காகவே தேசியவாதம் எனும் சொற்றொடரைப் பலர் எதிர்க்கிறார்கள் எனும் கருத்து அறிஞர்களிடையே உண்டு. இந்த அடிப்படையிலேயே சிங்கள பெளத்த பேரினவாதிகள் 'தமிழ்த் தேசியம்' அதன் வாழும் பரப்பான 'தமிழர் தாயகம்' எனும் கோட்பாடுகளை நிராகரிக்கின்றனர். இந்த நிராகரிப்பை பொதுமைப்படுத்தி, யதார்த்தமான தீர்வினைக் கொண்டுவருவதற்கு சந்திரிகா அரசால் கால இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது. இதனை மறைக்கவே, "விடுதலைப் புலிகள் அரசியல் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான நாளை நிர்ணயிக்கத் தயக்கம் காட்டுகின்றனர்" என சந்திரிகா கூறுகின்றார். உண்மையில் அரசியல் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான சூழ்நிலை உருவாகி வருகிறதா என நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பிலுள்ள விடுதலைப் புலிகள், மக்களின் நாளாந்த வாழ்வுக்கான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடன்பாடுகள் உதவுமென நடைமுறையில் கண்டால் அரசியல் பேச்சுவார்த்தைக்கான நாளை அறிவிப்பார்கள் என்பதை உலகு அறியும். 'ஆட மாட்டாதவன், கூடம் கோணல்' என்ற கதையாக இருக்கின்றது சந்திரிகாவின் பதில். ■

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்
291 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
18.02.1995

**அதி உத்தம சிறீலங்கா ஜனாதிபதி அவர்களுக்கு,
சிறீலங்கா.**

## தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கையை தோற்றுவித்தல், நிரந்தர சமாதானத்திற்கான வழிவகைகளைக் கண்டறிதல்.

தமிழ் மக்களது வெகுஜன அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வெகுஜன மக்கள் ஒன்றியம், 18.02.1995 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் கண்டனப் பேரணியை நடத்தி பின்வரும் மகஜரை தங்களது மனிதாபிமான கவனத்திற்கும் உரிய செயற்பாடுகளுக்குமாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பி வைக்கிறோம். கடந்த காலங்களில் மாறிமாறி வந்த சிறீலங்கா அரசாங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பன்முகப்பட்ட பேரினவாத கோட்பாடுகளினால் தமிழ் மக்கள் அடைந்த சொல்லணா இடர்களும், துக்க துயரங்களும் தாங்கள் அறிந்ததே. போரினால் விளைந்த சமூக, பொருளாதார நெருக்கடிகளினால் பாதிப்புற்ற சிறீலங்கா மக்கள் தங்கள் மேல் நம்பிக்கை கொண்டு பூரண ஆதரவை வழங்கி தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு நிவர்த்தி காணவும் சமாதான வழியிலான அரசியல் தீர்வு நோக்கிய அணுகுமுறையை இனம்கண்டு அதன்மூலம் நீடித்த சமாதானத்தை அடைவதற்காக மக்கள் ஆணையை வழங்கினர். ஆனால் துர் அதிஸ்டவசமாக தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அன்றாடப் பிரச்சினைகளுக்கு நிவர்த்தியை முதலில்கண்டு நிரந்தர சமாதான அரசியல் தீர்வை எட்டுவதற்காக தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்கு ஆக்கபூர்வமாகத் தாங்கள் ஈடுபடாது தயக்கம் காட்டுவதையும், தொடர்ந்து இராணுவ அழுத்தங்களைப் பிரயோகிக்க முனைவதையும் உணர்கிறோம். தயக்கம் அடைவது தடைகளை ஏற்படுத்தும். தங்களது ஆட்சியின் தொடக்க காலத்தில் தாங்கள் தந்த வாக்குறுதிகள் எம்மை உற்சாகப்படுத்தின. இதன்பிறகு சமாதானம் ஏற்படப்போகிறது என நம்பினோம். வரவேற்றோம். தொடர்ந்துவரும் இராணுவ அழுத்தங்கள் எமது நம்பிக்கையைச் சிதறடித்துள்ளன. தமிழ் மக்கள் மீண்டும் ஏமாற்றப்படலாமென அச்சமுற்று வேதனைப்படுகின்றோம். ஏனெனில்

1. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள மக்களின் ஆணையைப் பெற்றுவந்த அரசாங்கமாக இருப்பதாலும்

2. சர்வவல்லமை பொருந்திய ஜனாதிபதியாகத் தாங்கள் இருப்பதாலும்

3. சர்வதேச சமூகம் சமாதான முயற்சிகளுக்கான அங்கீகாரங்களை வழங்கி ஒத்துழைப்பு உதவிகளை அளிக்க முன்வந்திருக்கும் இந்நிலையிலும்/

4. தமிழீழத் தேசியத் தலைவர் தமிழ் மக்களின் வாழ்வில் இயல்புநிலை தோன்றவும், நிபந்தனையற்ற தயார்நிலையில் இருக்கின்ற சூழ்நிலையிலும், பொறுப்புகளையும் நல்லெண்ண வெளிப்பாடுகளைக் காட்டும் நிலையிலும்

தங்களது அரசு ஆக்க பூர்வமான வழியுறுதிகளைக் கைக்கொள்ளாது அசமந்த போக்குகளைக் கடைப்பிடிப்பதுகண்டு கவலை அடைகிறோம். தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானத்தீர்வுக்கான அனைத்து நடைமுறைகளையும் தங்களுடன் ஆராய்ந்து பரிசீலிக்க முன்வந்துள்ள இவ்வேளையில் தமிழ்மக்களின் நியாயமான ஏகமனதான பின்வரும் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

1. தமிழ் மக்களுடைய முழுமையான அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதும் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கூடியதுமான தீர்வுகாண தங்களுடைய அரசு முன்வரவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

2. தற்போது நடைமுறையிலுள்ள பொருளாதாரத்தடையை முற்றாக நீக்குவதன் மூலம் மக்களது அன்றாடப் பாவிப்பு பண்டங்கள் தட்டுப்பாடின்றி தாராளமாக நியாயவிலையில் கிடைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

3. மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக போக்குவரத்துக்கள் மேற்கொள்ளுவதற்காக முதற்கட்டமாக பூநகரிப்பிரதேசத்திலுள்ள இராணுவத்தை முற்றாக நீக்கி சங்குப்பிட்டி கேரதீவுப் பாதையைத் திறந்துவிட வேண்டும்.

4. இராணுவத்தினால் கைக்கொள்ளப்பட்ட தமிழ் மக்களின் பிரதேசங்களிலிருந்து இராணுவ முகாம்கள் சோதனை மற்றும் படைமுகாம்களை அகற்றி இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. தங்களால் முன்னெடுக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்த விதிகளுக்கு அமைவாக சட்டபூர்வமான கடற்தொழிலை மேற்கொள்வதற்காக அனைத்து கடல்வலயத் தடைச்சட்டங்களையும் உடன் நீக்கவும்.

6. வடக்கு கிழக்கில் உடனடியாக புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளை நிரைப்படுத்தி மேற்கொள்ள வேண்டும்.

7. மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை மேலும் விரிவுபடுத்தி நிரந்தர போர்நிறுத்தத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

8. மேற்குறிப்பிட்ட செயல்பாடுகள் மூலம் மக்களது வாழ்க்கையில் இயல்புநிலையைத் தோற்றுவித்து அவர்களது நம்பிக்கையை பெற்றெடுத்து நீண்டகாலமாகப் ஓடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுகாணும் பொறுப்பு தங்களது தலைமையில் சிறீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் முக்கியமாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய நடைமுறைச் சாத்தியத்துடனான தோற்றுவிகள் அனைத்தும் நிரந்தர சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வல்லவை என நாம் உறுதியாக நம்புகிறோம். மக்களது நிம்மதியான அமைதியான வாழ்க்கை ஆகியவற்றில் அக்கறைகொண்டுள்ள உங்களது கவனத்திற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்குமாக எமது நம்பிக்கையெனும் உந்துதலுடன் இந்த மகஜர் தமிழ் மக்கள் சார்பில் எம்மால் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

*நன்றி.*

தலைவர்,
வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியலமைப்பு

## ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய

### அத்தியாயம் - 7

தமிழீழத்திலிருந்து
மு.திருநாவுக்கரசு

## ஜே. ஆரின் சாதக நிலையை உறுதிப்படுத்த மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு முறை

இவ்வரசியல் அமைப்பின் முக்கிய அம்சங்களில் ஒன்று மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பாகும். இலங்கையின் அரசியல் அமைப்பு வரலாற்றில் இது முதல்முறையாக இந்த யாப்பில் சேர்க்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு முதல் முறையாக மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு நடாத்தப்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவ சனநாயகம் மட்டும் போதாது எனக் கருதப்படும் நிலையில் நேரடி சனநாயகத்திற்கான வாய்ப்பைக் குறித்த சில விடயங்களிலாவது ஏற்படுத்த மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு உதவுமெனக் கருதப்படுகின்றது.

மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு முதல் தடவையாக 1778 ஆம் ஆண்டு மசூசெற்ஸ் மாநிலத்தில் எடுக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து 1831 ஆம் ஆண்டு சுவிட்சலாந்திலும் இது பிரயோகம் பெறலாயிற்று. பின்பு இத்தாலி, பிரான்ஸ், அயர்லாந்து, அவுஸ்ரேலியா போன்ற பல நாடுகளுக்கும் பரவலாயிற்று. ஆசியாவில் பிலிப்பைன்ஸ், இலங்கை போன்ற நாடுகளுக்கும் பரவியது.

இந்த வாக்கெடுப்பை இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்துவர். ஒன்று, புதிதாக ஒரு முடிவை எடுப்பதா இல்லையா என்பதற்கான வாக்கெடுப்பு; இது ஏற்பதா இல்லையா என்ற வாக்கெடுப்பு (Obligatory Referendum) எனப்படும். மற்றையது சட்டசபையினால் அல்லது ஜனாதிபதியினால் எடுக்கப்பட்ட ஒரு முடிவினை அல்லது சட்டத்தினை முடிவான பின்பு ஆட்சேபனை அல்லது எதிர்ப்பின் காரணமாக அத்தகைய முடிவினை நிராகரிப்பதா அல்லது ஏற்பதா என்பதற்காக எடுக்கப்படும் வாக்கெடுப்பு. இது நிராகரிப்பதா, அல்லது ஏற்பதா என்ற வாக்கெடுப்பு (Optional) அல்லது (Aeulfatve Referendum) எனப்படும். இந்த இரண்டாவது வகை வாக்கெடுப்பில் இரு அங்கங்கள் உண்டு. ஒன்று சட்டத்தின் மீதான ஆட்சேபனையின் பிரகாரம் அதனை எதிர்த்து குறிப்பிடத்தக்க தொகையினரின் கையெழுத்துடனான மக்கள் விண்ணப்பத்தின் பேரில் வாக்கெடுப்பு நடாத்தப்படுதல். இரண்டு ஜனாதிபதியின் முடிவை சட்டமன்றம் ஆட்சேபிப்பதன் மூலம் அல்லது சட்டமன்றத்தின் முடிவை ஜனாதிபதி ஆட்சேபிப்பதன் மூலம் வாக்கெடுப்பு நடாத்தப்படுதல். இலங்கையில் முதலாவது வகையான வாக்கெடுப்பும் (Obligatory) இரண்டாவது வகையில் (Facultative) இரண்டாம் பிரிவும் ஒரளவு அடங்குகின்றன.

மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு என்பது ஒரு சிறந்த அம்சமே. ஆனால் இலங்கையில் இது பிரயோகம் பெற்ற முதலாவது தடவையே துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதுடன் ஜே. ஆர். தனது நலன்களைப் பாதுகாப்பதற்கான உள்நோக்கத்துடனும், அதற்கேற்ப துஸ்பிரயோகம் செய்யக்கூடியதற்கான சட்ட ஏற்பாடுகளுடனும் இதனை உருவாக்கினார்.

1982 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலை நடாத்தாது தனக்குச் சாதகமான நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்குமாக இவ்வேற்பாட்டை அவர் முன்கூட்டியே திட்டமிட்டுப் புகுத்தி இருக்க வேண்டும். ஏனெனில் இதன் முதலாவது பிரயோகமே நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டதனை அவதானிக்கலாம்.

இரண்டாவது நோக்கம் என்னவெனில் மேற்குலகின் நலன்களை உத்தரவாதப்படுத்தியுள்ள இந்த யாப்பை யாரும் இலகுவில் மாற்றிவிடமுடியாது என்ற உத்தரவாதத்தை மேற்குலகிற்கு அளிப்பதற்காக யாப்பின் நெகிழாத் தன்மைக்கான வலுவை மேலும் ஒருபடி அதிகரிப்பதற்கான ஓர் அம்சமாக இதனை மேற்குலகிற்குக் காட்டுவதற்காகவும் ஜே. ஆர். சேர்த்திருக்கலாம்.

மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பானது 1982 ஆம் ஆண்டு துஸ்பிரயோகம் செய்யப்பட்டதனையும் அதற்கான உள்நோக்கத்தினையும் இங்கு ஆராய்வோம். இதற்காக அரசியல் அமைப்பில் ஏற்கனவே இருக்கும் ஒரு சரத்தினைத் தற்காலிகமாக திருத்துவதற்கென மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைமுறையில் இருக்கும் ஒரு சட்டத்தினை தற்காலிகமாக நிராகரிப்பதற்கேற்ற வகையில் இந்தச் சரத்து புகுத்தப்பட்டுள்ளமையால், இது மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பில் இரண்டாவது வகையான, நிராகரிப்பதா அல்லது ஏற்பதா எனும் வகையை (Facultative Referendum) சார்ந்ததாய் உள்ளது.

இலங்கையின் முதலாவது மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பானது அரசியல் அமைப்பில் நடைமுறையில் இருந்த ஒரு சரத்தினை தற்காலிகமாக நிராகரிப்பதற்காக எடுக்கப்பட்ட வாக்கெடுப்பு என்



பதை முக்கியமாக அவதானிக்கவேண்டும். இதற்கான அரசியற் திட்ட ஏற்பாடுகளை ஆராய்வோம்.

"விடயத்திற்கேற்ப,.... நாடாளுமன்றத்தின் வாழ்க்கைக் காலத்தை ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு காலத்துக்கு நீடிக்கின்ற.... 62 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைத் திருத்துவதற்கான அல்லது நீக்குவதற்கான மாற்றீடு செய்வதற்குமான...." ஒரு சட்டமூலத்தினை மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பின்மூலம் நிறைவேற்ற வழிசெய்யப்பட்டுள்ளது.

அப்படியாயின் திருத்தத்திற்கு உள்ளாக்கப்படக்கூடிய அந்த 62 ஆம் சரத்தின் 2 ஆம் பிரிவினை நோக்குவோம்.

"நாடாளுமன்றமானது கலைக்க வேண்டிய காலத்துக்கு முன்னதாகக் கலைக்கப்பட்டாலொழிய, ஒவ்வொரு நாடாளுமன்றமும் அதன் முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட நாளில் இருந்து ஆறு ஆண்டுகள் கொண்ட காலத்திற்கு தொடர்ந்திருத்தல் வேண்டுமேயொழிய, அதற்கு மேற்பட்டல்ல என்பதோடு சொல்லப்பட்ட ஆறு ஆண்டுகாலம் கழிந்து போதலானது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாகச் செயற்படுதலும் வேண்டும்" (அழுத்தம் எனது)

இதன்படி ஆறு ஆண்டுகாலம் முடிவடைந்ததும் நாடாளுமன்றம் தானாகவே கலந்துவிட்டதாக அரசியல் அமைப்புக் கூறுகின்றது. இதன்படி பார்க்கையில் தனது அரசியற் திட்டத்தின் 62 ஆம் சரத்தின் 2 ஆம் பிரிவை நிராகரிப்பதற்கென 82 ஆம் சரத்தின் (ஆ) பிரிவை [82(ஆ)] உருவாக்கி அதன் மூலம் முதலாவது

**சென்ற இதழ் தொடர்ச்சி**

மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பை அரசியற் திட்டச் சரத்து ஒன்றை தற்காலிகமாக நிராகரிப்பதற்காக, நிராகரிப்பு மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு (Facultative Referendum) நடாத்தியுள்ளார் என்பதில் இருந்து, ஜே. ஆர். எப்படி தனது தேவைக்கேற்ற முன்யோசனையுடன் திட்டமிட்டு இதனை உருவாக்கி நடைமுறைப்படுத்தி உள்ளார் என்பதைக் கண்டு கொள்ள முடிகின்றது.

ஒரு நாடு வெளிநாடுகளுடன் தவிர்க்க முடியாத பெரும் போரில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அல்லது மிகப்பெரிதளவில் ஓர் உள்நாட்டு போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திற்தான் பதவிக்காலம் நீடிப்பது மரபு. ஆனால் 1982 ஆம் ஆண்டு இலங்கை எந்தவொரு வெளிநாட்டுடனும் போரில் ஈடுபட்டிருக்கவில்லை; அத்துடன் உள்நாட்டில் சாதாரண குழப்பம்தானும் இருக்கவில்லை. ஆனால் 1988 ஆம் ஆண்டு தெற்கில் முன்னெப்பொழுதும் இல்லாதளவிற்கு உள்நாட்டு போர் நிகழ்ந்து கொண்டிருந்தது; வடகிழக்கில் விடுதலைப் போராட்டம் பாரியளவில் இடம் பெற்றுக் கொண்டிருந்தது. மொத்தத்தில் இலங்கைத் தீவின் முழுப்பகுதியிலுமே பெரும் போர் நிலைமை; அப்படியான 1988 ஆம், 89 ஆம் ஆண்டுகளில் சில மாதங்களுக்குள் அடுத்தடுத்து இருபெரும் தேர்தல்களையும் நடாத்தமுடியும் என்றால், 1982 ஆம் ஆண்டு ஏன் நாடாளுமன்றத் தேர்தல் நடாத்த முடியாதிருந்தது?

எப்படிப்பட்ட ஒரு கட்டத்தில் இப்படியான பதவிக்காலத்தை நீடிப்பதற்கான மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பை நடாத்த வேண்டுமென்றோ குறித்த சரத்து கூறாதிருப்பதுடன், "விடயத்திற்கேற்ப...." என்ற ஒரு பொதுவான சொல், எவ்வித வரையறையுமின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே பதவிக்கால நீடிப்பை வரையறுக்கக்கூடிய எவ்வித பதத்தையும் பிரயோகிக்காமல் தமது தேவைக்கேற்ப எந்தவொரு விளக்கமும் அளிக்க வல்ல ஒரு பொதுப்பதம் அதாவது, "விடயத்திற்கேற்ப...." என்ற பதம் திட்டமிட்டே அரசியல் யாப்பில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்காக ஜே. ஆர். கூறிய ஒரு விளக்கம் என்னவெனில், தேர்தல் நடாத்தினால் 'நக்சலைட்டுக்கள்' நாடாளுமன்றத்துக்குள் பிரதிநிதித்துவம் பெற்றுவிடுவார்கள் என்பதுதான். அப்படி ஒரு 'நக்சலைட்டும்' இலங்கையில் இல்லை. இது உண்மைக்குப் புறம்பான விளக்கம் மட்டுமல்ல; யார் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறவேண்டும் என்பதைத் தீர்மானிப்பது மக்களே தான். மக்களின் அந்த உரிமையைத் தடுக்கும் செயலாகவே மேற்படி மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பை ஜனாதிபதி நடாத்தினார். [இதற்கேற்ப மேலதிக விபரங்களை ஐந்தாம் அத்தியாயத்தில் பார்க்கலாம்]

"ஜனாதிபதி, நாடாளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட ஏதேனும் சட்டமூலத்தை.... தனது தற்றுணிபின் பேரில் மக்கள் தீர்ப்பிற்கென மக்களிடம் சமர்ப்பிக்கலாம்" என்று எண்பத்தைந்தாம் சரத்தின் இரண்டாம் பிரிவு [85(-2)] கூறுகின்றது.

நாடாளுமன்றம் சட்டமூலம் சம்பந்தமாக எடுத்த தீர்மானத்தை நிராகரிப்பதா இல்லையா என்பதுதான் இந்த மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பின் உட்பொருள். இப்படியான ஒரு வாக்கெடுப்பு நிகழ்த்தப்படுமிடத்துப் பல அடிப்படைச் சிக்கல்கள் எழுகின்றன. மக்களின் இறைமையானது நாடாளுமன்றத்திற்கூடாகவும், ஜனாதிபதிக்கூடாகவும், மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பிற்கூடாகவும் பிரயோகம் பெறுமென நான்காம் சரத்துக் கூறுகின்றது. இறைமையைப் பிரயோகிப்பது பற்றிய உரிமையை மேற்படி மூன்று அம்சங்களும் இடையில் ஒதுக்கீடு செய்த விதத்தில் ஒன்றுடன் ஒன்று போட்டியிடவும், மோதவும் மேற்படி விதி வழிவகுத்துள்ளது.

நாடாளுமன்றத்தினால் நிராகரிக்கப்படும் ஒரு சட்டமூலத்தினை ஜனாதிபதி மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பிற்கெனச் சமர்ப்பிக்கும் போதே நாடாளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் மோதல் தொடங்கிவிடுகின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தினது இறைமையைப் பிரயோகிப்பதற்கான உரிமையை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி மீற முயல்வது முதற்கட்ட முரண்பாடாகும். இங்கு மக்கள் தீர்ப்பானது நாடாளுமன்றத்தின் முடிவிற்கு எதிரானதாக அமையுமிடத்து நாடாளுமன்றத்தின் அடுத்த நிலை என்ன? அதே போல மக்கள் தீர்ப்பு ஜனாதிபதியின் விருப்பத்திற்கு மாறாக அமையுமாயின் ஜனாதிபதியின் நிலை என்ன? என்பது போன்ற குறைகள் கூறப்படுகின்றன. ஏதோ ஒரு வகையில் இதில் ஒன்றை இன்னொன்று புறக்கணிப்பது தவிர்க்க முடியாதது. நாடாளுமன்றத்தின் முடிவை மக்கள் தீர்ப்பு புறக்கணித்தால் நாடாளுமன்றம் கலையுமா? அல்லது ஜனாதிபதியின் விருப்பத்தை மக்கள் தீர்ப்பு நிராகரித்து நாடாளுமன்றத்தின் முடிவை அங்கீகரித்தால் ஜனாதிபதி பதவி விலகுவாரா? இதற்கான எந்தவித அடுத்தகட்ட நடவடிக்கை சம்பந்தமான ஏற்பாடுகளும் அரசியல் அமைப்பில் இல்லை. 1969 ஆம் ஆண்டு பிரான்சின் ஜனாதிபதி டீ கோல் அரசியல் அமைப்புத் திருத்தம் ஒன்றை மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பிற்குச் சமர்ப்பித்தபோது 53% வாக்குகள் திருத்தத்திற்கு எதிராகக் கிடைக்கவே அவர் பதவி விலகினார். அங்கு குறைந்த பட்ச அரசியல் நாகரிகம் உண்டு. ஆனால் சிங்கள அரசியலில் அப்படி ஒரு நாகரித்தினை எதிர்பார்க்க முடியாதே! மரபுகளும் சம்பிரதாயங்களும் வளர்ச்சி அடையாத நாடுகளில் இப்படியான நாகரித்தினைச் சிறிதும் எதிர்பார்க்க முடியாது. மரபுகள் வளர்ச்சி அடைந்த அமெரிக்காவிற்கூட முக்கியமான விடயங்கள் சட்டத்தினால் வரையறுக்கப்படாதவிடத்து மரபு மீறல்கள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக அமெரிக்காவில் ஒருவர் இரண்டு தடவைகள்தான் ஜனாதிபதியாக இருக்கலாம் என்ற மரபே தொடக்கத்தில் இருந்தது. ஆனால் அந்த மரபு பின்பு மீறப்பட்டபோது அரசியற்திட்டத் திருத்தத்தின்மூலம் ஒருவர் இரு தடவைகள் மட்டுமே பதவி வகிக்கலாம் என்று வரையறுக்கப்பட்டது. முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக அடுத்த கட்டம் என்ன என்பதும் அதற்கான சட்ட வரையறைகளும் அவசியம்.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட வகையிலான மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பை நடாத்துவதன் மூலம் ஒரு தேசத்தின் தலையாய மூன்று அம்சங்களுக்கிடையிலும் சிக்கல்களை மூட்டுவதாகவே இது அமைந்துள்ளது. இது ஒரு தேசத்தின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழியல்ல; சிக்கல்களை உருவாக்குவதற்கான வழியாகும்.

நேரடி ஜனநாயகத்திற்காக மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு என்பது, இற்றைவரையான பதினேழு ஆண்டுகால வரலாற்றில், பிழையான ஒரு நடவடிக்கைக்கான விடயத்தில் பிரயோகம் பெற்றதைத் தவிர ஏனைய விடயங்கள் எதற்கும் அது பிரயோகிக்கப்படவில்லை. பொதுவானதும், பிரதானமானதும், சிக்கலானதுமான விடயங்களில் மக்கள் தீர்ப்பு மூலமான சட்ட உருவாக்கம் ஒரு சிறந்த விடயமே ஆயினும், அதற்கேற்றாற் போன்ற நடைமுறைகளை இது கொண்டிருக்கவில்லை என்பதுடன் பாதகமான பிரயோகமே நிகழ்ந்தும் உள்ளது. ■

(தொடரும்...)

---

## வைகறைப் பூக்...

"பிள்ளை... தம்பி இனியன் இண்டைக்கு வரேல்லை" என்ற அம்மாவின் குரல் கேட்டு என் இதயமே வெடித்துவிடும் போன்றிருந்தது. பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டேன். நான் பதிலுக்கு எதுவுமே கூறாததால் அம்மா திரும்பவும்,

"இனியன் தம்பி வரேல்லைப் பிள்ளை" என்றவாறு நான் கொடுத்துச் சென்ற அந்தப் பெயர்ப்பட்டியலை என்னிடம் நீட்டினார். என்னால் எதுவுமே அப்போது பேச முடியவில்லை. என் கரங்கள் மாத்திரம் அம்மா நீட்டிய அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டன. ■

www.tamilarangam.net



# இராணுவத்தின் எத்தடைகளையும் புலிகள் வெற்றிகரமாகத் தாண்டுகின்றனர்

"விடுதலைப் புலிகள் வடக்கு -கிழக்கில் செயற்படும் விதமானது, இப்பகுதியில் இராணுவத்தினரால் விடுதலைப் புலிகள் மீது போடப்படும் எத்தடைகளையும் வெற்றிகரமாகக் கடந்து விடுகின்றனர் என்பதையே படையினருக்குக் காட்டி நிற்கின்றது" என 'சண்டே ஐலண்ட்' செய்தித்தாளில் அதன் கட்டுரையாளர் தாரகி குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் புலிகளின் விசேட படை நடவடிக்கைகள் என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை ஒன்றில், பலாலி இராணுவ முகாமினுள் கரும்புலிகள் சில மாதங்களுக்கு முன் ஊடுருவி நடத்திய தாக்குதல் குறித்து படிப்படியான கட்டங்களாக அதனை விபரித்துள்ளார். இக்கட்டுரையின் இறுதியில் அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் இச்செயற்பாட்டைத் தவிர்க்க ஒரே வழி மேலும் படைகளை அங்கு கொட்டி விடுவதேயாகும். ■

# புலிகளுடனான சமாதான பேச்சிற்கு அவர்களைத் தோற்கடிக்க முடியாமையே காரணம்

### சண்டேரைம்சின் பாதுகாப்பு செய்தியாளர்

"தம்மை இராணுவ ரீதியாக முறியடிக்க முடியாது என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகள் உணர்ந்ததாலேயே, அவர்கள் இப்போது சமாதானத்தை இரந்து கேட்கின்றனர் என்பது விடுதலைப் புலிகளுக்குத் தெரியும்; விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக அழிக்கப்படுவார்களேயானால் அரசியல்வாதிகள் அவர்களிடம் சென்று பேசுவோம் வாருங்கள், சமாதான முயற்சிகளை மீளத் தொடங்குவோம் என்று பிச்சை கேட்கமாட்டார்கள்" இவ்வாறு சண்டே ரைம்சின் பாதுகாப்புத்துறை செய்தியாளர் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் மரபு வழி ரீதியிலான போரை மேற்கொள்ளமாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்தபின்பும்கூட, இராணுவம் தனது மரபுவழிப் போரிலிருந்து மரபுவழியற்ற போர்முறைக்குத் தன்னை மாற்றும் கொள்கை மாற்றத்தை மேற்கொள்ளவில்லை. கெரில்லாக் கிளர்ச்சி ஒன்றிற்கு எதிரான போராட்டத்தில் நிலைமைக்கேற்ப மாறல் என்ற போக்கு முதன்மையானது. இதனை இராணுவம் முதன்மையானதொன்றாகக் கருத்திற்கொள்ளவில்லை. இராணுவத் தலைமை சீர்குலைந்து வருகிறது.

1980 ஆம் ஆண்டுகளில் மூத்த இராணுவ அதிகாரி ஒருவரிடம் யாழ்ப்பாணத்திலிருந்து எழுந்துள்ள அச்சுறுத்தல் பற்றிக் கேட்கப்பட்டபோது அவர், "ஓ! அதுவா? கவலைப்படவேண்டாம். அவர்கள் சாரம் கட்டிய சிறு பையன்கள் நாங்கள் மேற்குலகிலும் பிரித்தானியாவின் சான்ட்கோர்ஸ்ட் இராணுவக் கல்லூரியிலும் பயிற்சிபெற்ற அதிகாரிகள்" என்றார்.

"இதில் அரசியல்வாதிகளின் பெருந்தவறும் உண்டு; அவர்கள் இராணுவத்தின் உயர்பீடத்தில் உள்ளவர்களை பலவீனமாக வைத்திருக்கவே பார்த்தனர். இது இராணுவப் புரட்சி ஒன்றைத் தவிர்க்கும்முகமாக அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை. இத்தகைய நடவடிக்கையால் அவர்கள் என்ன நடக்கப்போகின்றது என்பதை அறியும் திராணியற்றவர்களாக, நடந்துவிட்ட சம்பவங்களால் வழிநடத்திச் செல்லப்படுபவர்களாக இருந்தனர்.

தற்போதைய அரசின் சமாதான முயற்சிகளையிட்டு பாதுகாப்புத்துறையில் ஆச்சரியம் எழுந்துள்ளது. 1990 யூலையில் நடைபெற்ற சம்பவங்கள் இதற்குக் காரணம். விடுதலைப் புலிகளுடன் சனாதிபதி சந்திரிகா பேசுவதை இந்திய அரசு விரும்பவில்லை. அதன் அதிருப்தியைப் புதுடில்லி தனிப்பட்ட ரீதியிலும் அறிவித்துள்ளது" என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார். ■

# வெளிநாட்டு மத்தியஸ்தம்; வரையறைக்குள் ஏற்போம்

### ☐ ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கான வெளிநாடுகளின் மத்தியஸ்த முயற்சிகளை குறிக்கப்பட்ட வரையறைக்குள் அரசு ஏற்றுக்கொள்ளும் என, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்கள் தொடங்கும் போது, அனைத்துக் கட்சிகளினதும் ஆலோசனை பெறப்படும்.

புலிகள் ஆயுதங்கள் இன்றி மட்டக்களப்பு நகரினுள் வரலாம்; ஆனால் அவர்கள் ஆயுதங்களுடன் ஏற்கனவே நகரினுள் இருக்கின்றனர். இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயம் குறித்து ஆராயப்படும்போது, புலிகள் கொழும்புக்கு அழைக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். ■

அயல் நாட்டுச் செய்திகள்

# பூநகரி பாதை குறித்து விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் எதுவும் இல்லை

### - ஜனாதிபதி சந்திரிகா

"ஆனையிறவுப் பாதையைத் திறந்துவிட அரசு இணங்கியுள்ளது; பூநகரி -சங்குப்பிட்டி பாதையைத் திறப்பது சிரமம். ஆனாலும் மாற்று வழிகளை திறக்க அரசு இணங்கியுள்ளது. அதுபோல் பூநகரி முகாமை 500 மீற்றருக்கு பின்னால் நகர்த்தி அமைத்துக் கொள்ள அரசு இணங்கியுள்ளது. ஆனால் பூநகரிமுகாம் அகற்றப்படுவது தொடர்பாக எவ்வித ஒப்பந்தமும் செய்யவில்லை". இவ்வாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் மேலும் பேசிய அவர்;

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைக் கண்காணிக்க அமைக்கப்படும் குழுக்களில் வெளிநாட்டவர்கள் இடம்பெறுவதால் இனப்பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையாக மாறிவிட்டது எனக் கருதி விடமுடியாது என்றார்.

அரச குழு யாழ்ப்பாணம் சென்று இந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் பற்றி பரிசீலனை செய்யும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மீறப்பட்டாலும்கூட சமாதானத்தைக் காணும் முயற்சிகள் நிறுத்தப்படமாட்டாது.

திரு. பிரபாகரனை நாடு கடத்தும்படி இதுவரை இந்திய அரசு கோரவில்லை எனவும் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த சனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியப் பிரதமர் ஆர்வம் காட்டுவதாகக் கூறினார். சமாதான முன் முயற்சி குறித்து இந்தியாவுக்கு தெரியப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இறுதி ஒப்பந்தம் செய்யும் போது சகல அரசியற்கட்சிகளினதும் உதவி பெறப்படும். கொழும்பில் இறுதிக்கட்டப் பேச்சில் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் இயக்கம் அழைக்கப்படும் என்றும் சனாதிபதி மேலும் தெரிவித்தார். இதன்போது கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் ஜெனரல் கமில்டன் வணசிங்கா, சமாதான முயற்சிக்கு அரச படைகள் முழு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் எவ்வளவு விரைவில் சமாதானம் வருகிறதோ அந்தளவிற்கு அது நாட்டுக்கு நன்மை என்றும் குறிப்பிட்டார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர்கள் தர்மசிறி சேனநாயக்கா, அநுருத்த ரத்வத்த, ஜி. எல். பீரிஸ், ஜனாதிபதி செயலர் கே. பலபத்த பெண்டி, மற்றும் அரச சமாதானக் குழு உறுப்பினர், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் உடனிருந்தனர். ■

# விடுதலைப் புலிகள் இயக்கம் இலட்சியத்தில் உறுதியாகவுள்ளது

### ■ இந்திய செய்தியாளரிடம் கதிர்காமர்

"விடுதலைப் புலிகள் தமது இலட்சியத்தில் உறுதியாக உள்ளனர்" என சிறீலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். அவர்கள் ஓர் இலட்சியத்திற்காக போரிடுகின்றனர். அவர்களது இலட்சியம் வெற்றி பெறுமா என்பதும் இந்த இலட்சியத்தை போர் மூலமாக எட்ட முடியுமா என்பதும் வேறு விடயம். ஆனால் அவர்கள் தமது இலட்சியத்தில் விடாப்பிடியாக நம்பிக்கை கொண்டு செயற்படுகின்றனர். இத்தகவலை அமைச்சர் அண்மையில் புதுடில்லியில் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரைச் சந்தித்த பின்னர் அவர் இந்தியச் செய்தியாளர்கள் சிலரிடம் இந்தத் தகவலை வெளியிட்டார்.

1987 ஆண்டு முதல் நடைபெற்ற போரில், ஆயிரக்கணக்கான இந்தியப்படையினர் உயிரிழந்தனர். அவ்வாறே சிறீலங்கா பாதுகாப்புப்படையினரும் பலியாகி வருகின்றனர். இவற்றின் மத்தியில் புதிய அரசு சமாதானத்தை உருவாக்குவதில் உறுதியாக உள்ளது என்றும் அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்தார். ■

# சிறுபான்மையினரின் கோரிக்கைகளை ஏற்பதன் மூலம் தமது அதிகாரத்தைப் பாதுகாக்க முயல்கின்றனர்

### ■ சுதந்திர தினச்செய்தியில் மகாநாயக்கதேரோ

"பிரதான அரசியல் கட்சிகள், பெரும்பான்மை சிங்கள மக்களின் கோரிக்கைகளை வழங்குவதைப் பார்க்கிலும், சிறுபான்மையினரின் கோரிக்கைகளை வழங்குவதன் மூலம் தமது அதிகாரத்தைப் பாதுகாக்க முயன்று வருகின்றனர்; இந்தச் சூழ்நிலையின்கீழ், இலங்கையில் சுதந்திரத்தைப் பாதுகாக்க தூர நோக்குடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

பெரும்பான்மை சிங்கள மக்களின் நம்பிக்கையையும் அவர்களின் நீண்டகாலப் பாரம்பரியத்தையும் அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வினையே சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டும். இலங்கையர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, ஒத்திசைவாக வாழக்கூடிய சமாதான சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்".

இவ்வாறு தெரிவிக்கும் சுதந்திரதினச் செய்தியொன்றை வண. பலிப்பான சிறீகுணரத்ன சந்தானந்த மகாநாயக்க தேரோ வெளியிட்டுள்ளார். ■

# தாக்குதல் நிறுத்தம் சிறப்பாக அமுலாகிறது

### - சனாதிபதி சந்திரிகா

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையே ஏற்பட்டுள்ள தாக்குதல் நிறுத்த ஒப்பந்தம் சிறப்பாக அமுல் செய்யப்பட்டு வருவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். இவ் ஒப்பந்தத்தை நேர்த்தியாகவும் நல்லுறவு அடிப்படையிலும் இரு தரப்பினரும் கடைப்பிடித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தாக்குதல் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுவில் அங்கம் வகிக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சனாதிபதி சந்திரிகா இவ்வாறு கூறினார்.

ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்டதிலிருந்து இதுவரை குறிப்பிடத்தக்க அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் கூறியுள்ளார். ■

# தனது மாநிலங்களுக்கு மேற்பட்ட சுயாட்சியை இந்தியா விரும்பாது

### ■ கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம்

இந்திய மாநிலங்களிற்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைவிட, கூடுதலான அதிகாரங்கள் இலங்கையில் வடக்கு - கிழக்கு பகுதிக்கு கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் இந்தியாவின் தலையீடு உச்சக்கட்டத்தை அடையலாம் என கொழும்பு அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் நடந்து கொள்ளும் விதத்தை தற்பொழுது இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

வடகிழக்கிற்கு எவ்வளவு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதைவிட, இந்தியா தனது நலனிலேயே கூடிய அக்கறையாக உள்ளது.

வடகிழக்கு பகுதிக்கு எவ்வளவிற்கு குறைவான அதிகாரங்கள் வழங்க முடியுமோ, அவ்வளவிற்கு இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்படும் என இந்தியா கருதுகிறது.

ஆதலால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை சமாதான வழியில் கிடைக்கப்பெறுவதில் இந்தியாவின் குறுக்கீடும் அதிமாகக் காணப்படலாம் எனவும் மேலும் தெரிவிக்கின்றனர். ■

# பெண்புலிப் போராளிகளிடம் ஆன்மீக சக்தி ஒன்றைக் கண்டேன்

### ▩ பி.பி.சி.யில் வாசந்தி

"நான் யாழ்ப்பாணத்தில் பெண் விடுதலைப் புலிகளைப் பார்த்தபோது அவர்களிடையே ஓர் ஆன்மீக சக்தி இருப்பதைக் கண்டேன்; பெண்களினுள் இருக்கும் அந்தச் சக்தி அம்மாதிரியான அசாதாரண சந்தர்ப்பங்களில் தான் எமக்கே வெளிப்படுகின்றது. அதை அப்போதுதான் நாம் உணர்கின்றோம்" என இந்தியா டுடேயின் தமிழ்ப் பதிப்பின் ஆசிரியர் வாசந்தி பி. பி. சிக்கு அளித்த செவ்வியில் தெரிவித்தார்.

"அண்மையில் நான் அமெரிக்காவில் பெண்களுக்கான கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டேன்; அதிலிருந்து நாம் மேலைநாட்டுப் பெண்கள் சுதந்திரமானவர்கள் என்று கருதுவது முழுத்தவறு எனக் கண்டுகொண்டேன்.

நமது கீழ்நாட்டுப் பெண்களிடையே ஒருவித ஆன்மீக சக்தி இருப்பது போலவே எனக்குத் தெரிகின்றது. இதுதான் எம் பெண்களை தம்காலில் நிற்க வைக்கிறது. இந்தச் சக்தியைத் தான் நான் யாழ்ப்பாணத்தில் கண்டேன்" என அவர் மேலும் தெரிவித்தார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரிகா அரசை தனது பொறிக்குள் சிக்க வைத்து விட்ட இராணுவம்

இனப் பிரச்சினைக்கான அரசியற்தீர்வு குறித்து பலமான ஐயங்களும் கேள்விகளும் எழத் தொடங்கியுள்ளன. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை திட்டமிட்டவாறு நடைபெறாமல், கால இழுத்தடிப்புச் செய்யப்பட்டமை; முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டு, உறுதியளிக்கப்பட்ட அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை; பூநகரிப் பாதைத்திறப்பு விடயமாக நல்லதொரு முடிவு காணப்படும் என எதிர்பார்க்கப்பட்டு, முடிவு எடுக்கப்படாமலேயே நடைபெற்று முடிந்த மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை; இவற்றிக்கிடையில் சிறீலங்கா அரச தரப்பிலிருந்து வெளியாகிக்கொண்டிருக்கும் முன்னுக்குப்பின் முரணான செய்திகள் என்பனவே இந்த ஐயங்களுக்கும் கேள்விகளுக்குமான காரணங்களாகும்.



சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசானது பதவி ஏற்றகாலத்தில் (19. 08. 1994) இருந்து, இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியற்தீர்வு காண்பதே தமது நிலைப்பாடு எனக் கூறிக்கொண்டாலும் சந்திரிகா குமாரதுங்கா அரசு, சனாதிபதிப் பதவியைக் கைப்பற்றுவதற்கு முன்பிருந்த அரசியல் நிலைப்பாட்டிற்கும், சனாதிபதிப் பதவியை ஏற்றபின்னர், தற்பொழுதுள்ள அரசியல் நிலைப்பாட்டிற்கும் இடையில் சில வேறுபாடுகள் தெரிகின்றன.

பிரதம மந்திரியாக சந்திரிகா குமாரதுங்கா இருந்த காலத்தில், (19. 08. 1994 -12. 12. 1994) இனப்பிரச்சினை குறித்த அவரது அறிவிப்புக்கள் எந்தவித அழுத்தத்திற்கும் உட்படாததாக இருந்தன. இதற்கு அதிகாரமற்ற பிரதமர் பதவி, சனாதிபதி பதவியைக் கைப்பற்றுவதற்கான தேர்தல் வாக்குறுதி என்பன அடிப்படையாக இருந்திருக்கலாம்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் -குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும், "இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேசி அரசியற்தீர்வு காணப்படும்" என தேர்தல் பிரச்சாரத்தில் தாம் முன்வைத்தமை, துணிகரமானதொரு செயல் என இன்றுகூற முற்படுகின்றனர். ஆனால் இது அரசியல் யதார்த்தத்தை திரிபுபடுத்துவதற்கானதொரு விளக்கமே ஆகும்.

கடந்த பன்னிரண்டு ஆண்டு காலமாகத் தொடர்ச்சியாக நடந்துவரும் போரினால், சலிப்படைந்துபோய்விட்ட சிங்கள மக்களும் பன்னிரண்டு ஆண்டுப் போரில் வெற்றி காணமுடியாது போய்விட்ட இராணுவமும் போரை நியாயப்படுத்த, சிங்களப் பேரினவாதிகளாலும் மற்றும் பேரினவாத செய்தித்தாள்களினாலும் முடியாதுபோய்விட்ட அவல நிலையுமே சந்திரிகா குமாரதுங்கா அமைதிபற்றி வலியுறுத்தியபோது, அவருக்குப் பெருவெற்றிக்கு வழிவகுத்தன.

இதேவேளை, சந்திரிகாவும் பொதுசன ஐக்கிய முன்னணியும் எடுத்த எடுப்பில் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. முதலில் தெற்கில் ஐந்து மாகாணங்களுக்கும் நடந்த தேர்தலில் பரீட்சித்துப்பார்த்து, பின்னர் பொதுத்தேர்தலில் பரீட்சித்து, அதன்பின்பே சனாதிபதித் தேர்தலில் சமாதான முறையிலான அரசியல் தீர்வுபற்றிப் பேசினர்.

இவ்வாறான பரீட்சிப்பிற்குப் பின்னரும் இறுதி நேரத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் கூட்டுச்சேர்ந்தமைக்கு சந்திரிகா குமாரதுங்கா, சமாதானத்தின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைச் சந்தித்ததே காரணமாகும்.

ஆனால், மக்கள் இதில் குழப்பம் ஏதும் அற்று இருந்தனர். இது சமாதானத்தின் தேவையை சந்திரிகா குமாரதுங்கா கூறியதைவிட, சிங்கள மக்கள் உணர்ந்திருந்ததையே காட்டியது.

அத்தோடு, பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் - சனாதிபதித் தேர்தலுக்கு இடையில் அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகள், சந்திரிகாவின் மீதான நம்பிக்கையை சிங்கள மக்களுக்கு ஊட்டியது. பேச்சுவார்த்தையின் மூலம் பொ. ஐ. முன்னணி அரசு ஒரு தீர்வை எட்டும் என்ற கருத்தை ஏற்படுத்தியது.

இதன்காரணமாக முன்னைய ஐ. தே. க. அரசு நடத்திய போரையும், இராணுவத் தலைமையின் போர் குறித்த விடாப்பிடியான நிலையையும், பௌத்த பேரினவாதிகளின் இனவெறிக் கூச்சலையும் சந்திரிகா குமாரதுங்கா சாடியபோதும் மக்கள் அதை நியாயமானதென்றே ஏற்றுக்கொண்டனர். இதனை காமினி திசநாயக்காவின் கொலைகூடப் பாதிப்படையச் செய்யவில்லை.

இதற்கு ஏற்றாற்போன்றே சந்திரிகா குமாரதுங்கா அரசும் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியபோது, 'ஓரளவு திறந்தமனத்துடன்' இருப்பதாகவே தென்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த, யாழ். வந்த அரசதரப்புக் குழுவிற்கு தலைமை தாங்கிய பலபத்த பென்டி, "தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பதில், புதிய அரசு ஆவலாக இருக்கின்றது" எனத்தெரிவித்தார்.

இதனை உறுதிப்படுத்துமாப் போன்றே முதலாம்கட்டப் பேச்சுவார்த்தையின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையும் அமைந்திருந்தது. இதில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் அவற்றிற்கான தீர்வுகளுக்கும் முதன்மை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், சமாதானம் பற்றியும் விடுதலைப் புலிகளுடன் பேசுவது குறித்தும் அறிவிப்பொன்றை வெளியிடுவதற்கு எவருக்கும் துணிவு தேவையானதாக இருக்கவில்லை. பெரும்பான்மை மக்களின் உணர்வைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் மட்டுமே இருந்திருந்தால் போதுமானதாகும்.

ஆனால் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னர், அரசியற் சூழ்நிலை படிப்படியாக மாறிவந்தது. அரசு 'திறந்த மனத்துடன் பேசுவதைத்' தவிர்த்த அதேவேளை, சமாதான முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவுமில்லை.

முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் முடிவுற்றதைத் தொடர்ந்து, அரசு இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் பற்றிப் பேசினாலும், முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்ட விடயங்கள் எதிலுமே உருப்படியான நடவடிக்கை எதையும் அரசு எடுக்கவில்லை. சந்திரிகா குமாரதுங்கா பிரதமராக இருந்தபோது, பொருண்மியத்தடையில் செய்த சிறுதளர்வு போன்றுதானும் சனாதிபதியான

**தமிழீழத்திலிருந்து**
**ஜெயராஜ்**

போது அவர் செய்யவில்லை. இதில் பொருண்மியத் தடைத் தளர்வை அமுல்படுத்த இராணுவம் தடையாக இருப்பதே முதன்மைக்காரணமாக் கூறப்படுகின்றது.

இதற்குமேலாக சனாதிபதியாகச் சந்திரிகா குமாரதுங்கா பதவியேற்றபோது, நல்லெண்ணநோக்கில் ஒருவாரகால தாக்குதல் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் செய்தபோதும், அரசு அதுகுறித்து மௌனமே கடைப்பிடித்தது.

இவ்வாறு அரசின் நிலைப்பாடு சனாதிபதித் தேர்தலின் பின் மாற்றம் அடைவதற்கு, இராணுவத்துடன் அரசு செய்துகொண்ட விட்டுக்கொடுப்புடன் கூடிய சமரசமே காரணமாகும். அதாவது இனப்பிரச்சினை தொடர்பாக இராணுவம் கொண்டுள்ள நிலைப்பாட்டிற்கு ஏற்ப, தனது கொள்கையில் அரசு இசைவாக்கம் செய்துகொண்டது எனலாம்.

**இராணுவத் தரப்பு, இரு விடயங்கள் விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லாதவை என்று வலியுறுத்தி விட்டது; இதில் முதன்மையானது "தற்பொழுது இராணுவம் நிலைகொண்டுள்ள நிலைகளில் இருந்து ஒரு அங்குலம் தானும் பின் வாங்குவதில்லை" என்பது. அடுத்தது, "பூநகரிப் பிரதேசத்தில் இருந்து பாதை திறப்பதற்காக விலகிச் செல்வதில்லை" என்பதாகும்**

இராணுவத்தரப்பு, "இருவிடயங்கள் விட்டுக்கொடுப்பிற்கு இடமில்லாதவை" என்று வலியுறுத்திவிட்டது. இதில் முதன்மையானது, "தற்பொழுது இராணுவம் நிலைகொண்டுள்ள நிலைகளில் இருந்து, ஒரு அங்குலம்தானும் பின்வாங்குவதில்லை" என்பது. அடுத்தது, "பூநகரிப் பிரதேசத்தில் இருந்து பாதை திறப்பிற்காக விலகிச் செல்வதில்லை" என்பதாகும்.

இன்று இவ்விரு நிபந்தனைகளும் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகவே கருத இடமுண்டு. அதாவது, முன்னர் போல் இராணுவத்தினரின் நிலைப்பாட்டை சனாதிபதி சந்திரிகா விமர்சனரீதியாக நோக்கும் நிலையில் இன்று இல்லை.

இந்நிலையில் முதலாம் கட்டப் பேச்சுக்களில் அரசு ஆராய்வதாக ஒப்புக்கொண்ட விடயங்கள் கேள்விக்குரியதாக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துப்பாதை திறப்பு விவகாரம், அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைக்குறைப்பு முயற்சி, புனர்வாழ்வு, பொருண்மியப் புனர்நிர்மாணம் போன்றவை அரசால் ஊக்கம் அளிக்கப்படாத விடயங்களாக இருந்தன.

**"இராணுவம், அரசினை தனது வழிக்கு திருப்பியுள்ளது என்பதை விட, சந்திரிகா அரசினைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது என்றே கூறலாம்; அதாவது தன்முன் எழுந்த பிரச்சினையை சந்திரிகா அரசின் தலையில் இராணுவம் சுமத்தி உள்ளதெனலாம்"**

இவ்வாறாக அரசின்நிலை மாறியதற்கான சமிக்கைகள் நிறையவே உள்ளன. இதில் பாதைத் திறப்பு விவகாரத்தில் அரசின் நிலைப்பாடானது, சிறப்பான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. முதலாம் கட்டப் பேச்சுக்களின்போது பூநகரிப் பாதை விவகாரத்தை பரிசீலிப்பதாகக் கூறிய அரசதரப்பு, பாப்பண்டவர் வருகையின்போது ஆனையிறவுப் பாதை குறித்துப் பேசியமை இதன்வெளிப்பாடே ஆகும்.

ஏனெனில் யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப்பாதையாக ஆனையிறவுப் பாதையையே திறக்கமுடியும் என்பது, இராணுவத்தின் நீண்டகால முடிவாகும். ஐ. தே. கட்சி ஆட்சிக் காலத்திலும் அதனையே இராணுவம் கூறியது. அதுவே பாதை திறப்பது தொடர்பான முடிவு எதையும் கடந்த காலத்திலும் எடுப்பதற்கு வாய்ப்பில்லாது செய்திருந்தது. இந்நிலையில் புதிய அரசும் அதனையே திருப்பிக்கூறுவது என்பது, அரசும் இராணுவத்தின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப வழிமாறிச்செல்வதையே உணர்த்துகின்றது.

இவ்வாறாக அரசின் மாறிய நிலைப்பாடாகவே கடந்த டிசம்பர் 20 ஆம் நாள் விடுதலைப் புலிகளுக்கு அரசு அனுப்பி வைத்த கடிதம் இருந்ததெனலாம். இக்கடிதம், முதலாம்கட்டப் பேச்சுவார்த்தையில் அரசு ஒப்புக்கொண்ட பலவற்றை மறுதலிப்பதாக இருந்தது. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முதற்கட்டப் பேச்சுக்களின்போது வழங்கப்பட்ட முதன்மைத்துவம், வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இதில் சுட்டிக் காட்டப்படவில்லை.

இக்கடிதமானது பேச்சுவார்த்தையில் அரசு தோற்றுவித்த முட்டுக்கட்டையாக எழுந்தது. இந்நிலையில், தலைவர் பிரபாகரனினால் முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் அரசால் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்கள் ஞாபகப்படுத்தப்பட்டன. கடிதம் கிடைத்த இருநாட்களில் அரசிற்கு தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தில், முதற்கட்டப் பேச்சுக்களின் தொடராக தமிழ் மக்களின் அன்றாட -அத்தியாவசியமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும், பேச்சுவார்த்தைகள் கட்டம் கட்டமாக நடத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். அத்தோடு போர் நிறுத்தத்திற்கும், சமாதானப் பேச்சிற்கும் புலிகள் எந்தவேளையிலும் தயாராக இருப்பதையும் உறுதிசெய்திருந்தார்.

முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின்படி அரசு பல்வேறு செயல்களை ஆற்றவேண்டியிருந்தது. ஆனால் அவை யாவும் இராணுவத்துடன் நேரடித் தொடர்புபட்டவையாகவே இருந்தன. இதில் பாதை திறப்பு, பொருண்மியத்தடை நீக்கம், கடல்வலயத் தடைச்சட்ட நீக்கம், போர் நிறுத்தம் எனப்பல அம்சங்கள் இருந்தன. ஆனால் இராணுவம் வெற்றிகரமாகச் செயற்பட்டு, ஒரு சில விடயத்தில் மாத்திரம் அதுவும் தனக்குச் சாதகமான விடயத்தில் மட்டும் விட்டுக்கொடுப்புச்செய்து, ஏனையவற்றை அரசிடம் 'பொறித்து'விட்டது என்றே கொள்ளமுடியும்.

இந்தவகையில் பார்க்கும் போது 'இராணுவம், அரசைத் தனது வழிக்குத் திருப்பியுள்ளது என்பதைவிட, சந்திரிகா அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது' என்றே கூறலாம்; அதாவது தன்முன் எழுந்த பிரச்சினையை சந்திரிகா அரசின்



இராணுவத் தளபதி யெரிடீ சில்வா

தலையில் இராணுவம் சுமத்தியுள்ளது எனலாம்.

இது ஒருவகையில் போரை நோக்கி அரசைக் கொண்டுசெல்வதான அம்சமாகவும் இருக்கின்றது. எவ்வாறெனில், இனப்பிரச்சினைக்கான அடிப்படைத்தீர்வு ஒன்றை அரசு இன்று உடனடியாக முன்வைக்கும் நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு முன்வைப்பினும், தமிழ் மக்கள் தரப்பில் இருந்தோ அன்றி, சிங்கள மக்கள் தரப்பிலிருந்தோ அது ஆட்சேபனைக்குரியதாகவே இருக்கும்.

இந்நிலையில், அரசு உருப்படியான தீர்வுத்திட்டத்தை வழங்க முன்வராவிடில், தமிழர் தரப்பு ஆட்சேபத்தையோ அன்றி தமிழர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டத்தை முன்வைப்பின், தென்னிலங்கையில் சிங்கள -பௌத்தபேரினவாதிகளால் எழும் நெருக்கடிகளையோ முன்வைத்து, இராணுவம் தனது நிலைப்பாட்டையும் விருப்பத்தையும் நிறைவேற்றிக்கொள்ள முடியும். அதாவது போரைத் தொடர்ந்து நடத்தமுடியும்.

இந்தவகையில் சந்திரிகா குமாரதுங்கா அரசிற்கு, சமாதானத்திற்கான ஒரு காலஅவகாசம் வழங்காது, தனது நிலைப்பாட்டை இராணுவம் உறுதிசெய்துகொண்டுள்ளதெனலாம் இது இராணுவத்தைப் பொறுத்து பெரும் வெற்றியே

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




எமது நாடு

# சுவடுகள் இதயநாதம் எங்கள் தாய்த்திரு நாடு

## - ஒரு மனப் பகிர்வு -



எமது தேசியக்கொடி

"ஒரு சூரியன் மட்டும் தான் உலகில் உண்டு.
ஒரு சந்திரன் மட்டும் தான் உலகில் உண்டு.
ஒரு எவரெஸ்ட் மட்டும் தான் உலகில் உண்டு.
ஒரு பிரபாகரன் மட்டும் தான் உலகில் உண்டு.
உன்னைப் போல் ஒளி கொடுக்க யார் வருவார்"



எமது தேசியத் தலைவர்

"இருளில் ஒளிரும் முத்து அல்ல
கடலில் கலங்கரை விளக்கு
அடிமை விலங்கொடிக்கும் புலி - எம்
நம்பிக்கை எல்லாம் நீ"

சுவடுகள்... இதயநாதம்... எங்கள் தாய்த்திருநாடு.. இது விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் சமீபத்தில் தமிழீத்தில் ஒரே நாளில் வெளியிடப்பட்ட நூல்கள்.

### சுவடுகள்

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மாவட்ட, கோட்டப் பொறுப்பாளராக இருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுடன் -மாணவரமைப்பு உறுப்பினராக, தேச விடுதலைக்கு தம்மாலான பங்களிப்பு செலுத்துகையில் இந்திய -சிறீலங்காப் படைகளின் தாங்குதலினால் மரணமடைந்த மாணவமணிகள் 16 பேரினது வரலாற்றுச் சுவடுகள் இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள 'சுவடுகள்' ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்க்கும் போது -

தேசவிடுதலைப் போராட்டத்தில் மாணவ சமுதாயத்தின் பங்கு பெரியது என்பதை அவதானிக்க முடிகிறது.

எதிரி எங்கும் இருப்பான் என எண்ணிய வண்ணம் சாவை கருத்தில் கொள்ளாமல் இவர்கள் இயங்கியிருக்கிறார்கள்.

இவர்களின் மனோபலம் பெரிது. கொண்டகொள்கையில் உள்ள பிடிப்புப் பெரிது. இதனால்தான் உயிர்மலர் உதிர்வது தெரிந்தும் உறங்காமல் விடுதலைக்கான பயணத்தை தொடர்ந்திருக்கிறார்கள்.

**'மாணவப் பருவம் என்பது மனித வாழ்வின் மகத்தான பருவமாகும்; இப்பருவத்தில் ஏற்படும் சிந்தனையும் வெளிப்படும் ஆற்றலும் அலாதியானவை. உலகில் எந்த விடுதலைப் போராட்ட வரலாற்றைப் புரட்டினாலும் அங்கே மாணாக்கர் புரிந்த தியாகமும் பங்களிப்பும் அளவிடற்கரியதாக இருப்பதைக் காணலாம்'** என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. இன்பன் முகவுரையில் குறிப்பிட்டதற்கிணங்க, எமது மண்ணின் விடிவிற்கான போராட்டத்திலும் மாணவர்களின் பங்கு தியாக உணர்வுடன் கூடியதாக இருப்பதை இந்தச் சுவடுகளில் தரிசிக்கலாம்.

### இதயநாதம்

"ஒரு சூரியன் மட்டும் தான்
உலகில் உண்டு.
ஒரு சந்திரன் மட்டும் தான்
உலகில் உண்டு.
ஒரு எவரெஸ்ட் மட்டும் தான்
உலகில் உண்டு.
ஒரு பிரபாகரன் மட்டும் தான்
உலகில் உண்டு.
உன்னைப் போல் ஒளி
கொடுக்க யார் வருவார்".

"இது திரு. ச. இசைச்செல்வன் எழுதிய கவிதை வரிகள். இதயநாதம் என்ற இந்த நூலில் எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களைப் பற்றிய கவிதைகள் பதிவுசெய்யப் பட்டுள்ளன.

**"காப்பியங்களிலும், இதிகாசங்களிலும் கற்பனைப் பாத்திரங்களாக உலாவந்த வீர புருசர்களுக்கு நிகராக, ஒரு தலைவன் எங்கள் மண்ணிலே உயிரும், சதையுமான மனிதனாக எம்முடன் சேர்ந்து வாழ்ந்துகொண்டே, தமிழர் சேனையை வழிநடத்தும் சேனாதிபதியாகக் கண்டு எம்மக்கள் மெய்சிலிர்த்துப்பாடிப் பரவிப் பரவசமடைகின்றனர்".**

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை இந்நூலுக்கு வழங்கிய வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலில் உள்ள கவிதைகள் அனைத்தும் எமது தேசியத் தலைவரின் உறுதியை, இலட்சியப்பற்றை, சுதந்திர தாகத்தை, கொள்கைப் பற்றைச் சித்தரிக்கின்றன.

எமக்குக் கிடைத்த அற்புதமான தலைவனின் வழிகாட்டலில் எமது தேசம் புதிதாக மலரும் என்பதை இக்கவிதைகள் சுட்டுகின்றன.

"இருளில் ஒளிரும் முத்து
அல்ல
கடலில் கலங்கரை விளக்கு
அடிமை விலங்கொடிக்கும்
புலி-எம்
நம்பிக்கை எல்லாம் நீ".

கவிஞர் எமக்குத் தரும் செய்தி இது. இச்செய்தியினூடே நாம் எமது தலைவனில் வைத்துள்ள நம்பிக்கையை கணித்துக் கொள்ளலாம்.

ஆம்; "எமக்குக் கிடைத்திருக்கும் தலைவனின் காலத்தில், இந்தத் தேசம் சிரித்துக் குலுங்கும்" என இந்த நூல் எமக்குச் சொல்கிறது.

### எங்கள் தாய்த் திருநாடு

எமது தேசத்தைப் பற்றியும், போராட்டத்தைப் பற்றியும் அறியக்கூடிய வகையில் இந்தச் சிறுநூலில் பல செய்திகள் உள்ளன.

**'எமது தலைவர்', 'எமது நாடு', 'எமது தேசியக்கொடி',** என ஒவ்வொன்றைப்பற்றிய விளக்கமும் கூறப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு இந்த நூல் பெரிதும் உதவக்கூடியது.

**"விடுதலை வேட்கை என்னும் ஆன்ம தாகத்தால் அடிமை இருள் தொலைக்க அக்கினிக் குஞ்சுகளாக அணிவகுத்த இவர்கள், பிரபாகரன் என்ற பெருநெருப்பின் பிள்ளைகள்"** என எமது 'போராளிகள்' பற்றி தரப்பட்டுள்ள விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மாதிரி கலைச்சுவையுடன் படிப்பதற்கு சுவையான வரிகளுடன் இந்த நூல் திகழ்கிறது.

- வவுனியா திலீபன் -

# அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி



எனது கிராமம் கிளிநொச்சி, எனது குடும்பம் மிகவும் ஏழ்மையானது, எனக்கு ஏழு சகோதரர்கள். அப்பா, அம்மா எல்லோருமாக ஒன்பது பேரைக் கொண்ட பெரிய குடும்பம் தான் எனது குடும்பம், எனது அப்பா புத்திசுவாதீனம் அற்றவர். எமது ஊரை சுற்றிவளைத்ததன் காரணமாக நாம் அகதியாக்கப் பட்டோம். உணவு, உடை எதுவுமின்றி கஸ்ரப்பட்ட நிலையில் தந்தையற்ற அநாதைகளாக ஆகிவிட்டோம் எனக்கு அக்கா, தம்பி, தங்கை எல்லோரும் இருக்கிறார்கள், ஆனால் என்னைப் பார்க்கவோ வளர்க்கவோ எவருமில்லை, நான் தனிப்பிறவி போல் வாழ்ந்து வந்தேன். ஒரு நாள் எமது உறவினரான அண்ணா ஒருவர் வீட்டிற்கு வந்

**காந்தருபன் அறிவுச்சோலையைச் சேர்ந்த சிறார்கள் சிலர், தாங்கள் ஏதிலிகளாக்கப்படுவதற்குக் காரணமாகவிருந்த மறக்கமுடியாத சம்பவங்களைப் பகிர்ந்துகொண்டபோது பெற்ற விபரங்களே, 'அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்படுகின்றது.**

தொழில் இல்லாமையால் மிகவும் கஸ்ரப்பட்டே வாழ்ந்து வந்தோம். வீட்டுக்கஸ்ரம் காரணமாக நானும் அக்காவும் சங்கக் கடை ஒன்றில் வேலை செய்து வந்தோம், சிறிது காலத்தின் பின் அப்பா லக்ஸ்சபாணாவில் வேலை செய்தார், ஒருநாள் அப்பா வேலைக்குச் செல்லவில்லை அதனால் வேலை நிறுத்தப்பட்டது. அதனால் நாங்கள் மிகவும் கஸ்ரப்பட்டோம், திடீரென இந்திய இராணுவம் கோவில் ஒன்றில் இருந்தோம். பத்து நாட்களாக கோவிலில் தஞ்சமடைந்தோம், சிறிது காலத்தின் பின் எல்லோரும் வீட்டுக்கு வந்தோம். அப்பா தம்பியைக் கூப்பிட்டு நான் இருக்கும் வரை உனக்கு என்ன தேவையோ நான் எல்லாம் வாங்கித் தருவேன் என்று சொன்னார், அப்பா இறந்த பின்னர் அம்மா எம்மை எல்லாம் விட்டு விட்டு வேறொரு திருமணம் செய்து கொண்டார். நாம் தாய், தார். எமக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது, ஒருநாள் என்னை எனது அக்கா பக்கத்து வீட்டில் கிளி பார்க்க அனுப்பினார், அவ்வேளையில் யாழ். மாமா அவர்கள் வந்து என்னைக் கூட்டிச் சென்று தாயகம் சிறுவர் இல்லத்தில் சேர்த்து விட்டார். எனக்கு மிகவும் சந்தோசம், நான் அங்கேயே படித்து வந்தேன். ஆரம்பத்தில் எனக்கு அ, ஆ எழுத்துக்கள் எதுவும் தெரியாமலே பாடசாலையில் சேர்ந்தேன், கஸ்ரம் காரணமாக வீட்டில் எவரும் படிக்கவில்லை, நான் எனது முயற்சியால் ஆண்டு 4 இல் படித்தேன், தாயகத்தில் ஆண்டு 2 படித்து ஆண்டு 3 படிக்காது ஆண்டு 4 இற்கு உயர்த்தப்பட்டேன், எமது மாமா என்னைக் கேட்டார் காந்தருபன் அறிவுச்சோலையில் போய் படிப்போமா என்று. நான் ஆம் என்று சொன்னேன், அன்றிலிருந்து இன்றுவரை மிகவும் ஊக்கத்துடன் அறிவுச்சோலையில் பல்கலை பயின்று, கல்வி கற்று வருகிறேன். ■

- செ. மயூரன்

(தொடரும்...)

www.tamilarangam.net



# சுவிஸ் அரசின் கபட நாடகத்தில் சிக்கிய குடும்பஸ்தரின் கண்ணீர்க் கதை

விசாரணைக்கென அழைத்துச்சென்ற பொலிசார், முப்பத்தியாறு மணிநேரம் இருட்டறையில் பூட்டிவைத்திருந்தபின் கைகளுக்கு விலங்கிட்டு, விமானத்தில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பிவைத்தனர் என, வேதனையுடன் கூறுகிறார் குடும்பஸ்தர் ஒருவர்.

அரசியல் தஞ்சம்கோரி சுவிஸ் நாட்டிற்கு அகதிகளாகச் சென்ற வெளிநாட்டவர்களில், 1992 இற்குப் பின்பு சென்றவர்களை திருப்பி அனுப்புவதில் சுவிஸ் அரசு தீவிரம் காட்டிவருவது தெரிந்ததே.

சுவிஸ் அரசின் இம்முடிவை உலக அமைப்புகள் பல வன்மையாகக் கண்டித்ததுடன், மீள் பரிசீலனை செய்யுமாறும் கோரிக்கைகளை விடுத்திருந்தன.

எனினும் சுவிஸ் அரசு தனது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கியதாகத் தெரியவில்லை. அதன் முடிவிற்கு முதல் இலக்கானவர்தான் சுண்ணாகத்தைச் சேர்ந்த கிருஸ்ணமூர்த்தி.

அண்மையில் சுவிஸ் அரசினால் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அவர், பட்டஅனுபவங்களை எமது வாசகர்களும் தெரிந்துகொள்ளட்டும் என்ற நோக்கில், சுண்ணாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் சென்று சந்தித்தோம்.

**உலக அரங்கிலே மனிதாபிமானம் மனிதநேயம், மனித காருண்யம் பற்றி எல்லாம் போதித்து வரும் "சுவிஸ்" தான் வழங்கிய வதிவிடகாலம் முடியுமுன்னே சத்தம் சஞ்சடி இன்றி இரவோடு இரவாகக் கதவைத் தட்டிக் கையில் விலங்கிட்டு தேசத்துரோகம் இழைத்தவன் போன்று நாட்டை விட்டே வெளியேற்றியமை ஜீரணிக்க முடியாத ஒன்றாகும்.**

"யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு, ஒரு வருடத்திற்கு மேலாக கொழும்பில் தங்கி அலைந்து திரிந்தபின், ஒருவாறாக சுவிஸ் நாட்டிற்குள் நுழைந்தேன்; அங்கு உறவினர் ஒருவருடன் சில நாட்கள் தங்கியிருந்தபின், கடந்த வருட முற்பகுதியில் அகதி அந்தஸ்துக்கோரி விண்ணப்பித்தேன்.

அதன்பின் ஒருசில மாதங்கள் தற்காலிக முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டேன். பின்பு ருதி (Ruthi) எனும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த 'Aufnahmentrum' எனும் முகாமில் தங்கவைக்கப்பட்டேன். இந்த முகாமில் அனைத்து வசதிகளும் இருந்தன. காலையில் பாணும் மதியம் மற்றும் இரவிற்கு சோறு, நூடில்ஸ் போன்ற உணவுவகைகளும் பரிமாறப்படும்.

இம்முகாமில் இருக்கும்போது நான் வெளியே சென்றுவர அனுமதித்தனர். சிலர் வெளியில் வேலைகளும் செய்தனர். வெளியில் செல்லும்போது தங்கியிருக்கும் இடத்தின் முகவரி கொடுக்கப்பட வேண்டும். பதினைந்து நாட்களுக்குள் முகாமுக்குள் திரும்பிவிடவேண்டும். ஏனெனில் மாதத்தில் இருவாரங்கள் நாம் தங்கியிருக்கும் முகாமில் வேலைசெய்ய வேண்டும். முகாமில் உள்ளவர்களின் உடைகளை உலர்த்தி, அழுத்தி, மடித்துக் கொடுத்தல்; முகாமிற்குள்ளும் வெளியேயும் துப்பரவு செய்தல் போன்ற வேலைகளில் முகாமில் உள்ள அனைவரும் சுழற்சி முறையில் ஈடுபடல்வேண்டும்.

முகாமில் பல நாடுகளைச் சேர்ந்தவர்களும் அகதிகளாக தங்கியுள்ளனர். அங்கு சுவிஸ் நாட்டைச் சேர்ந்தவரே பொறுப்பாகவுள்ளார். அவர் எம்முடன் உட்கார்ந்தே உணவு அருந்துவார். எந்தவித பாகுபாடும் காட்டுவதில்லை. மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவார்.

இம்முகாமில் இருக்கும்போது எமக்கு மூன்றுவேளை உணவும் இலவசமாகத் தரப்பட்டதுடன், மூன்று பிராங் (இலங்கை காசிற்கு நூறு ரூபாய்) நாளாந்தம் கைச்செலவிற்கும் தந்தார்கள். பத்து மாதங்கள்வரை இம்முகாமில் வைத்திருந்தபின், இறுதியாக ஸ்ரட்(Staad) எனும் இடத்தில் உள்ள முகாமிற்கு மாற்றினார்கள். அங்கு எமக்கு சகல வசதிகளும் வழங்கப்பட்டதுடன், அகதிப்பணமாக பத்தாயிரம் ரூபா வரையில் தந்தார்கள். நாம் விரும்பினால் வேலைக்குப் போகலாம். அப்படிப் போனால், இவ்வகதிக் காசை நிறுத்திவிடுவார்கள்.

கடந்த மார்கழி மாதம் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் 1992 இன் பின் சுவிஸ் வந்து, அரசியல் தஞ்சம் கோரியவர்களுக்கு புகலிடம் அளிக்கப்படமாட்டாது எனவும், உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறும்படியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை அடுத்து எனக்கு வழங்கப்பட்ட காசும் நிறுத்தப்பட்டது.

அதனால் நான் எனது நண்பர்களின் உதவியுடன் சட்டத்தரணி ஒருவரின் உதவியை நாடினேன். அவர் சில மாதங்கள் தங்குவதற்கு அனுமதி பெற்றுத் தந்தார். இதன்படி கடந்த ஆவணிவரை தங்கமுடிந்தது.

அதன் பின்பு மீண்டும் சுவிஸ் பொலிசாரிடமிருந்து கடிதம் வந்தது. நான் சட்டத்தரணியை அணுகியபோது 1995 சித்திரை வரை சுவிசில் தங்குவதற்கு அனுமதி பெற்றுத்தந்தார். நான் வெளியில் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யத்தொடங்கினேன். வெளிநாட்டவர்கள் மீன் தொழிற்சாலை, நூடில்ஸ் தொழிற்சாலை, கோட்டல்கள், மரக்காலைகள் போன்றவற்றில் வேலை செய்கிறார்கள். சுவிசில் இலங்கையர்களுடன், வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

அகதிகளை வெளியேற்றும் சுவிஸ் அரசின் முடிவுக்கு எதிராக, இங்கு அகதி அந்தஸ்து கோரியிருந்தவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதாக அறிந்தேன். ஆனால் அவர்களுடன் எனக்குத் தொடர்புகள் இருக்கவில்லை.

இலங்கையர்கள் அங்கு கொலைகள்கூட செய்துள்ளார்கள். நான்கு மாதங்களுக்கு முன்னரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கொலை செய்யப்பட்டார். அவர் பல ஆண்டுகளாக சகல வசதிகளுடனும் 'தூண்' எனும் இடத்தில் வசித்துவந்தார். இவரிடம் 60 இலட்சம் ரூபாவை சூதாட்டத்திற்கென யாழ்ப்பாணத்து இளைஞர் ஒருவர் கடனாகப் பெற்றிருந்தார். இவர் அப்பணத்தை சூதாட்டத்தில் இழந்ததினால், கடனைத் திருப்பிக்கொடுக்க முடியவில்லை. இதனால் பிரான்சிலிருந்து தனது இருநண்பர்களை தொலைபேசி மூலம் அழைத்த இவர், குறிப்பிட்ட ஓர் இடத்திற்கு வரும்படி கடன் கொடுத்தவரை அழைத்து, நண்பர்கள் மூலம் இவரை காருக்குள்ளேயே வைத்து சுட்டுக் கொலைசெய்தார். இக்கொலையைப் புரிந்துவிட்டு இவர்கள் தப்பியோட முற்படுகையில், பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தற்போது சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது இதுபோன்ற செயல்களால், வெளிநாட்டவர்களுக்கு அங்கு மதிப்பு குறைவாகவேயுள்ளது. இச்சம்பவம்

**சந்திப்பு - சசீகரன்**

அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. இதுபோன்ற பல்வேறு சம்பவங்களும் வேறு வேறு பகுதிகளில் நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இத்தகைய சூழ்நிலைகளால் நான் எவருடனும் தொடர்புகளைக்கொண்டிருக்க விரும்பவில்லை. எனினும் எனக்கு சித்திரைவரை தங்க அனுமதி கிடைத்த பின்பு நான் துணிந்து வீதிகளில் நடமாடினேன். வேலைக்குப் போய் வந்தேன்.

சம்பவதினம் அதிகாலை நான் தூக்கத்திலிருந்தவேளை யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. எழுந்து கதவைத் திறந்தபோது இரு சுவிஸ் பொலிசார் நின்றனர். அவர்கள் என்னைப் பொலிஸ் நிலையம் வரும்படி அழைத்தனர். அப்போ என்னுடன் தங்கியிருந்த உறவினர் ஒருவர், எதற்காக அழைத்துச் செல்கிறீர்கள் எனக்கேட்டார். அதற்கு பொலிசார், இவர் மீது சிறு விசாரணை உள்ளது. இரு மணித்தியாலங்களுக்குள் திருப்பிக் கூட்டிவந்து விடுகிறோம் எனக்கூறிவிட்டு ஜீப்பில் ஏற்றிப் பொலிஸ் நிலையம் கூட்டிச் சென்றவர்கள் அங்கிருந்த இருட்டறைக்குள் என்னை விட்டுப் பூட்டிவிட்டனர். உணவு எதுவும் வழங்கப்படாத நிலையில் மாலை மூன்று மணிவரை அதற்குள் இருந்தேன். பின்பு அங்கிருந்து விசாரணைக்கென அழைத்துச் சென்று பெயர் மற்றும் வீட்டு விலாசத்தினைக் கேட்டு பதிந்துகொண்டதுடன், என்னைப் படம் பிடித்து கைவிரல் அடையாளத்தையும் எடுத்துக்கொண்டனர்.

அதன்பின் வேறோர் இடத்திற்குக் கொண்டுசென்ற பொலிசார், அங்கிருந்த இருட்டறைக்குள் விட்டுப் பூட்டிவிட்டனர். அன்று மாலை முதல் மறுநாள் மாலை வரையும் அந்த இருட்டறைக்குள்ளேயே காலம் கழிக்க வேண்டியதாயிற்று. அங்கிருந்தபோது பாணும் தேநீரும் தந்தார்கள். மாலை நாலு மணியளவில் அவர்கள் என்னை வெளியேவர அனுமதித்தனர். இருட்றையிலிருந்து வெளியே வந்த நான் அங்கிருந்த பெண்மணியிடம் ஏன் என்னை அடைத்து வைத்திருக்கிறீர்கள்? என்ன தவறு செய்தேன்? என ஆங்கிலத்தில் கேட்டேன். அதற்கு அவர் ஒரு பிரச்சினையும் இல்லை -எங்கள் அரச சட்டப்படி 1992 இன் பின் சுவிஸ் வந்தவர்கள் வெளியேற்றப்படவேண்டும் -அதனை நாம் நடைமுறைப்படுத்துகிறோம் என்றார். நான் எனக்கு அடுத்த சித்திரை வரை தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறி, அந்த அனுமதிக் கடிதத்தினைக் காண்பித்தபோதிலும் அதனை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்துவிட்டார்.

**"விசாரணைக்கென அழைத்துச் சென்ற பொலிசார் முப்பத்தாறு மணி நேரம் இருட்டறையில் பூட்டி வைத்திருந்த பின், கைகளுக்கு விலங்கிட்டு விமானத்தில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பி வைத்தனர்."**

இறுதியாக ஒரு பேனாகூட எடுத்துவர அனுமதிக்கப்படாத நிலையில் உடுத்த உடுப்புடன் கைகளுக்கு விலங்கு மாட்டி, ஜீப்பில் ஏற்றி ரயில் நிலையத்திற்கு கொண்டு வந்தனர். ரயிலில் தனியான ஒரு பெட்டிக்குள் என்னை விட்டுப் பூட்டி பொலிஸ்காரர் ஒருவர் காவல் காத்தார்.

ரயில் வந்து விமான நிலையத்தை அடைந்ததும் அதிலிருந்து இறக்கி விமான நிலையத்திற்குள் கொண்டு வந்துவிட்டனர். அங்கு வைத்து என்னிடம் 300 பிராங் காசும் விமான ரிக்கறும் தரப்பட்டது. விமானத்தில் ஏற கூட்டிச் செல்லும்போதுதான், என் கைகளில் போடப்பட்டிருந்த விலங்குகள் கழற்றப்பட்டன. விமானத்தில் வந்து கட்டுநாயக்காவில் இறங்கும்போதே விமான ஓட்டி ஒருவர் என் அருகில் வந்து, கடவுச்சீட்டு ஒன்றை என்னிடம் நீட்டினார். அதைவிரித்துப் பார்த்தபோதுதான் இவர்கள் எனது புகைப்படத்தை ஒட்டி புதிய கடவுச் சீட்டும் தயாரித்திருந்தது தெரிந்தது.

கட்டுநாயக்காவில் நான் இறங்கியதும் சிங்கள சுங்க திணைக்கள அதிகாரிகள் என்னை மிரட்டினர். அச்சமடைந்த நான் பொலிசார் தந்த பிராங்கை மாற்றி அவர்களுக்கு லஞ்சமாகக் கொடுத்துவிட்டு ஒருவாறு தப்பி வெளியே வந்தேன்.

உலகில் மனித உரிமைகள் பற்றி பெரிதாகப் பேசிக் கொள்ளும் சுவிஸ் அரசு என்னுடன் இவ்வாறு நடந்து கொண்டதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. குழுவாக வெளியேற்றினால் எதிர்ப்புகள் தோன்றும் என்பதாலேயே இவ்வாறு தனித்தனியே பிடித்து வலுக்கட்டாயமாக மனிதாபிமானம் அற்ற முறையில் வெளியேற்ற முற்பட்டுள்ளது.

1983 இற்கு முற்பட்ட காலத்தில் சுவிஸ் சென்றவர்களுக்கு மட்டுமே நிரந்தர வதிவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1992 இன்பின் சென்றவர்கள் அங்கிருந்து விரைவில் வெளியேற்றப்படுவர் என நான் உறுதியாக நம்புகிறேன்.

என்னை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியது எனது முகாமில் என்னுடன் இருந்தவர்களுக்கே தெரியாது. நான் கொழும்பு வந்து சேர்ந்ததும் அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்த போது அவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.

இரண்டாம் உலகப்போரை அடுத்து அடைக்கல நாடுகளாகத் தங்களைப் பதிவு செய்துகொண்ட நாடுகளில் முன்னணி வகிக்கும் சுவிஸ், தான் வழங்கிய அகதி அந்தஸ்து காலம் முடியுமுன்னரே தனது பொலிசாரைக் கொண்டு மிருகத்தனமாக வெளியேற்றிய செயலானது உலக அரங்கில் அதன் கபட நாடகத்தை அம்பலப்படுத்தும்" என்றார் வேதனையுடன். ■

நன்றி: 'ஈழநாதம்'

# மேற்குலகில் ஈழத்தமிழர்...

*நாடுகளின் பண்பாட்டுடன் கீழைத்தேய நாட்டுப் பண்பாடுகளை இணைத்து, அதில் - தீயனவற்றை எமது கலாசாரங்களுக்கு ஒவ்வாதனவற்றைக் களைந்து -நல்லனவற்றைப் புகுத்திக் கொள்ளுங்கள்; மேலைத்தேய நாடுகளின் எல்லாக் காரியங்களையும் அரவணைக்காதீர்கள்.* **நீங்கள் வெளிநாடு வரும்போது தாண்டிக்குளம் முதல் இதுவரை பொய்யான தகவல்களைக் கூறி எமது போராட்டங்களை கொச்சைப்படுத்தியே வந்து சீவியம் நடத்துகிறீர்கள். இதற்குப் பிராயச்சித்தமாக எமது உண்மையான போராட்ட நோக்கை இனியாவது தெளிவுபடுத்தி, உங்களால் ஏற்படுத்தப்பட்ட களங்கத்தைத் துடைக்க முனைய வேண்டும். அத்துடன் எமது போராட்டத்திற்கு உங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும்" எனக் கூறியுள்ளேன்.**

**கேள்வி:-** *எமது மண்ணிலிருந்து கொண்டு மேற்குலக நாடுகளிற்கு செல்லத்துடிக்கும் இளைஞர், யுவதிகளுக்குத் தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?*

**பதில்:- "இக்கரைக்கு அக்கரைப் பச்சை"** *போல், "அங்கு வாழும் தமிழர் அனைத்துச் சுகங்களையும் இழந்து வாழ்கின்றனர்;* **நாம் இங்கு அடிமை வாழ்விலிருந்து விடுபட்டுச் சுதந்திர புருசர்களாக வாழத் துடிக்கும்வேளை, எம்மவர்கள் அங்கு சென்று பழைய காலனித்துவ ஆட்சியில் கொத்தடிமைகள் போன்று வெள்ளையனுக்கு அடிமைச் சேவகம் செய்து வாழ்கின்றனர்.** *அதிலும் எதிர்பார்த்த இலக்கை அடைந்தவர்கள் மிகச் சிலரே. வசதியிருப்பின் மேலைநாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்யலாம். அது வரவேற்கத்தக்கது. ஆனால் அங்கேயே தங்கி வாழ விரும்புவது மடமைத்தனம்" என்றார்.* ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அனர்த்தங்களும் அபிவிருத்தியும்

அவசரகாலப் புனர்வாழ்வுப் புனரமைப்புத் திட்டத்தின் ஆரம்பம் அதனது செயற்பாடு, அவசர புனரமைப்பு அபிவிருத்தித் திட்டம் 11 என்பன பற்றிச் சில விடயங்களை உங்கள் முன் வைக்கவிரும்புகின்றேன். உலகின் பல நாடுகளில் அனர்த்தங்கள் ஏற்பட்டு வருவது உங்களுக்குத் தெரியும். இவ்வனர்த்தங்கள் அதிகமாக இயற்கைக் காரணிகளால், பூமியதிர்ச்சி, வெள்ளம், எரிமலைவெடிப்பு, சூறாவளி, வரட்சி போன்ற காரணிகளால் ஏற்படுகின்றன. இதனைப் போலவே மனித காரணிகளாலும் பல ஏற்படும். உள்நாட்டு யுத்தம், தொழிற்சாலை விபத்துக்கள் என்பவற்றாலும் அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. இவ்வனர்த்தங்களின் பாதிப்புக்கள் பின்வரும் வழிகளிற் காணப்படும்.

01. உயிரிழப்புக்கள், உடல் ஊனமடைதல், அதன் மூலம் உழைக்கும் திறன் குறைதல், இல்லாது போதல்.
02. வீடுகள், கல்வி, சுகாதாரக் கட்டுமானங்களின் அழிவு.
03. வருமானம் இழப்பு, அதாவது உழைப்புக்கான வசதிகள்குறைவடைவதால் வேலையின்மை போன்றவை ஏற்படல்.
04. மக்களுக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளான நீர் வழங்கல், வடிகால் அமைத்தல், தொடர்புசாதனங்கள், போக்குவரத்து. மின்சாரம், ஆகியவற்றின் தேவைகள் இடைநிறுத்தம்.
05.உணவுப்பொருட்கள், விவசாய கைத்தொழில்களின் மூலம் பொருட்களினது தட்டுப்பாடு என்பன ஏற்படுதல்.
06. மக்கள் இடம்பெயர்வு.

**<u>அபிவிருத்தியில் ஏற்படும் பாதிப்பு</u>**

01.வளங்களது அழிவு, இழப்பு.
02.குறுகியகாலத் தேவைகளுக்காக நீண்டகால அபிவிருத்தித்திட்டங்கள் தடைப்படல், வளங்கள் மாற்றுபயோகத்திற்காகப் பயன்படல்.
03. முதலீட்டு முயற்சிகளுக்கான ஊக்கமின்மை
04. முறைசாரா துறைகளில் ஏற்படும் பாதிப்பு

அபிவிருத்தி எனும் பொழுது அதற்குத் தேவைப்படுவது:

01. சமூகத்தின் அடிப்படை மாற்றம்
இது
(அ) நிறுவனரீதியாகவும்
(ஆ)அடிப்படையிலும் ஏற்படுவது
இதுபொருளாதார அபிவிருத்தியை அதிகரிப்பதாகும்.
02. வருமான சமமின்மையைக் குறைத்தல்.
03. வறுமையை ஒழித்தல்.

எனப்பல்வேறு அம்சங்களைக் கொண்டதாகும் எனவே, அனர்த்தங்களும், அபிவிருத்தியும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவைகளாகும்.
ஆனால், அனர்த்தங்கள் காரணமாக ஏற்படும் அழிவுகள் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் பல காரணிகளை உருவாக்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

01. பாதிப்படைந்த பிரதேசத்தில் ஓர் மாற்றத்துக்கான சூழலை ஏற்படுத்துகின்றது.
02. அபிவிருத்திக்கான தேவையை இனங்காட்டுகின்றது. இதற்குத் தொழிற்பயிற்சி, அழிந்தவீடுகளை புனரமைக்கும் திட்டம், என்பவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்
03. மக்களது பங்குபற்றலை ஊக்குவிக்கின்றது.
04.புதிய வேலைவாய்ப்புக்கான தேவையை உருவாக்குகின்றது.

எனவேதான் தற்போதைய திட்டமிடலாளர்கள், அனர்த்தங்களினால் ஏற்பட்ட அழிவுகளை மையமாகக்கொண்டு இவ்வழிவுகளைப் புனரமைக்கும் பணியைத் திட்டமிடும் பொழுது நீண்டகாலப்பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையிற் செய்து வருகின்றார்கள். இதனைநாம் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற எரிமலை வெடிப்பின்போது ஏற்பட்ட பாரிய இழப்புக்களைப் புனர்நிர்மாணம் செய்யும் பொழுது நிதர்சனமாகக் கையாண்டு வருவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

இந்த அடிப்படையில் அதாவது புனரமைப்பும் அபிவிருத்தியும் என்பதை நாம் எண்ணும் பொழுது, எமதுபிரதேசத்தை 1983ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக, ஏற்பட்டுவந்த இராணுவ வன்செயல்காரணமாக வடக்கு-கிழக்குப் பிரதேசம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அனர்த்த அழிவுகள் எல்லாவற்றையும் இப்பிரதேச மக்கள் சந்தித்துள்ளனர். எனவே, அழிவுகள்,அபிவிருத்தி, பிரதேசம் என்ற மூன்று குறிக்கோள்கள் அல்லது பண்புகளைக் கவனத்திற் கொண்டு எமது பிரதேசத்தின், மாவட்டத்தின் புனரமைப்புத்திட்டத்தைத் தயாரிக்கவேண்டிய நிலையிலுள்ளோம்.

இந்நிலையில் கடந்த 10வருட காலப் பொருளாதார அபிவிருத்தியை வடமாகாணத்திற் கவனத்தில் எடுத்தால் பின்வரும் பண்புகள் தெளிவாகின்றன.

01. இலங்கையின் மற்றைய மாவட்டங்களில், மாவட்ட அபிவிருத்திக்காக கொண்டு வரப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் பூரணமாக செயற்படுத்தப்பட்டன. ஆனால், மன்னார், வவுனியா மாவட்டத்தில் செயற்படுத்த ஆரம்பிக்கப்பட்ட பொழுதும் இடைநிறுத்தப்பட்டன. மற்றைய மாவட்டங்களில் திட்டம் தயாரிக்கும் நிலையிலிருந்தே நிறுத்தப்பட்டது.

02. மற்றைய மாவட்டங்களைப் போல விசேட செயற்திட்டங்கள் இனம் காணப்பட்டு நிதிபெறப்பட்டும் அத்திட்டங்கள் கைவிடப்பட்டன. அல்லது நிதி மற்றைய மாவட்டங்களின் திட்டங்களுக்கு மாற்றப்பட்டன. இதற்கு உதாரணமாக பாரிய நீர்ப்பாசன அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இலங்கையில் 7பாரிய நீர்ப்பாசனத்திட்டங்களைப் புனரமைப்பதற்கான 5வருடத் திட்டம் 1984ஆம்ஆண்டில் மற்றைய மாவட்டங்களிற் செயற்படுத்தப்பட்டு இரணைமடுத்திட்டத்தில் மாத்திரம் இடையில் கைவிடப்பட்டது.

03. ஏற்கனவே பல படிமுறை வளர்ச்சியின் முதலீடுகளின் கீழ் செய்யப்பட்ட பொருளாதார உட்கட்டுமானங்கள், சமூக உட்கட்டுமானங்கள், குடியிருப்புக்கள், மரப்பயிர்ச் செய்கைகள் அழிக்கப்பட்டன.

04.அழிக்கப்படாது மீதமாகவிருந்த பொதுபொருளாதார உட்கட்டுமானங்கள், தனியார் உற்பத்திக்கட்டுமானங்கள், குடியிருப்புக்கள் என்பனவற்றுக்குப் போதிய அரச நிதிப்பராமரிப்புக் கிடைக்காமை, பராமரிப்பிற்கான பொருட்கள் தடைவிதிக்கப்பட்டமை என்பன, மீதமாகவிருந்த கட்டுமானங்களும் மீளஅபிவிருத்திச் செயற்பாட்டுக்குள் கொண்டுவரப்படமுடியாத நிலையை எற்படுத்தியது.

இந்நிலையில் கடந்த பத்தாண்டுகளுக்கான இலங்கையின் பொருளாதாரச் சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம் 4வீதம் ஆக கணிக்கப்பட்டிருப்பின் இவ் வளர்ச்சியின் பிரதிபலிப்பு மேற்கு மாகாணத்தில் கூடிய வளர்ச்சி வீதத்தையும், மற்றைய மாகாணங்கள் குறைந்த வளர்ச்சி வீதத்தையும் கொண்டிருப்பதை அவதானிக்கும் பொழுது நாட்டின் வளர்ச்சி மாகாணங்களுக்கிடையே சரியாகப் பகிரப்படாமல் இருப்பது மாத்திரமல்ல, வளர்ச்சி வீதத்திலும் பார்க்கக் கூடியளவுக்கு எமது அனர்த்தங்கள் அழிவுகள் காணப்படுகின்றன.

ஓர் உத்தியோகபூர்வமற்ற (UNICEF) மதிப்பீட்டின்படி நாம் இம்மாவட்டங்களில் இலங்கையின் வளர்ச்சியில் 20வருடங்கள் பின்தங்கியுள்ளதாக அறியப்படுகின்றது. இப்பின்னணியில் விவசாயம், கடற்றொழில், கைத்தொழில், சேவைத்துறை எல்லாவற்றிலும் நாம் தற்பொழுதே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே இப்பாரிய இடைவெளியை ஈடுசெய்து சிறீலங்காவின் வளர்ச்சி வீதத்திலும் பார்க்க இருமடங்காக இருக்க வேண்டியது அவசியமாகும். இந்த அடிப்படையே தற்பொழுது ஆராயப்படவிருக்கும் இரண்டாம் கட்டப் புனரமைப்பு அபிவிருத்தித் திட்டமாகும்.

இந் நிலையில் கடந்த 7 வருடங்களாக செயற்பாட்டிலிருந்த அவசர புனர்வாழ்வு, புனரமைப்புச் செயற்திட்டத்தையும் அதன் கடந்த காலச் செயற்பாட்டினையும் மதிப்பீடு செய்தல் அவசியமாகும். அதனது படிப்பினையே இரண்டாங்கட்டத் திட்டத்தின் தேவைகளை இனங்காணல், திட்டத்தைத் தயாரித்தல், இலக்குகளைத் தீர்மானித்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கியமானதாகும். 1987ஆம் ஆண்டு யூலையில் கையொப்பமிட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினை அடுத்து வடக்கு-கிழக்கு மாகாணங்களது ஓர் அவசரகாலப் புனரமைப்புத்திட்டம், பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பொருளாதார, சமூக உட்கட்டுமானங்களைப் புனரமைப்பதற்காகத் தயாரிக்கப்பட்டு 493மில்லியன் அமெரிக்கடொலர்கள் உடையதாக இத்திட்டம் இருந்தது. இத்திட்டத்தால் யாழ் மாவட்டத்திற்கு ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட துறைகள் பின்வருமாறு

| துறை | தொகை(மில்லியன்ரூபா) |
|---|---|
| 1. வீடமைப்பு | 1043.40 |
| 2. வீதிகள்-பாலம் | 375.00 |
| 3. விவசாயம் | 725.00 |
| 4. கடற்றொழில் | 233.00 |
| 5. தொழில்நுட்பம் | 414.30 |
| 6. கல்வி | 142.85 |
| 7. சுகாதாரம் | 34.93 |
| 8. போதனா வைத்தியசாலை | 6.57 |
| 9. நீர்ப்பாசனம் | 6.00 |
| 10. நீர் விநியோகம் | 89.00 |
| 11. கூட்டுறவுச்சங்கம் | 138.20 |
| 12. வர்த்தகம் | 542.70 |
| | 3750.95 |

ஒரு புனரமைப்பு அபிவிருத்தித்திட்டத்தைத் தயார் செய்யும் பொழுது பின்வரும் விடயங்களைக் கவனத்திலெடுப்பது பொது வழக்கமாகும் அவையாவன:

1. தேவைகளை மதிப்பிடல்
2. நோக்கங்களை எற்படுத்தல்
3. இலக்குகளைத்தீர்மானித்தல்.
4. அதற்கான கொள்கையை வகுத்தல்
5. பொதுத் தேவைகளது அமைப்பை உருவாக்கல்
6. திட்டத்தைச் செயற்படுத்தல்
7. அளவிடல், மதிப்பிடுதல் என்பனவாகும்

ஆனால் எமது அனுபவத்தைக் கொண்டு அவதானித்த பொழுது முதலாவது அவசரகாலப் புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டம் தயாரிக்கும் பொழுது இலக்குகளைத் தீர்மானிக்கும் போதும் அதற்கான மற்றைய படிமுறைகளின் பொழுதும், உண்மையான நிலைகள் அவதானிக்கப்படாமை, பாதிக்கப்பட்ட மக்களது புனரமைப்பு அவர்களுக்கான அபிவிருத்தி பற்றிய கூடிய அக்கறை காட்டப்படவில்லை. இது காலக்கிரமத்தில் ஒதுக்கப்பட்ட நிதி அம்மாவட்டங்களுக்குப் பதிலாக மற்றைய மாவட்டங்களுக்கு திருப்பப்பட்டு செலவு செய்யப்பட்டது
பொதுவாக இத்திட்டம் பற்றி மதிப்பீடு பின்வருமாறு
01. திட்டம் நடைமுறையிலிருந்தாலும் இம்மாவட்டங்களுக்கான பொருட்களைக் கொண்டு செல்வதற்கான கட்டுப்பாடு இருந்தமையால் இத்திட்டத்தை செயற்படுத்த முடியவில்லை
02. நிர்வாகத்துறையில் ஏற்பட்ட பல மாற்றங்கள், சிக்கல்கள் இத்திட்டத்தை இலகுவில் நடைமுறைப்படுத்த முடியவில்லை.
03. வரையறுக்கப்பட்ட நிதி காரணமாகவும், இறுக்கமான நடைமுறை காரணமாகவும் இருப்பிடங்களைத் திருத்துவதற்கான உதவிகள் பூரணமாக பெறமுடியவில்லை.
04. கட்டட மூலப்பொருள் தட்டுப்பாடும், ஒப்பந்தகாரர்,

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேச்சுவார்த்தையில் கட்டங்களை நோ

## பேச்சுவார்த்தையின்நிலையும்நிலபரமும்:-

உலகின் அரசியல் வரலாறுகளில், அரசுகள் தம்முட்கொண்ட வேறுபாடுகளைக்களைய பேச்சுவார்த்தைகளை நடாத்துவதும் அவை கட்டங்கட்டமாக முன்னேறுவதும் புதிய செய்தியல்ல. ஆனால் சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் உருவாகும் கட்டங்களுக்கான கட்டாயம்தான் என்ன? அதுவும் குறுகிய காலச்சூழ்நிலைகளுக்கிடையே, குறிப்பிட்ட சில பிரச்சனைகளிலேயே நின்று நிதானித்து நகர வேண்டியது ஏன்? எவ்வளவுதான் முனைப்புடன் பேச்சுவார்த்தைகளையும், அதற்கான சூழ்நிலைகளையும் செவ்வனே நகர்த்தியும் தடங்கலாய் வரும் காரணிகள் என்ன? இதில் சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் கொண்டுள்ள இலக்குகள் என்ன? இப்படியான பலவிடயங்களை ஆராயுமிடத்து பேச்சுவார்த்தையின் தற்போதைய சூழ்நிலையை நன்கு விளங்கிக்கொள்ள முடியும்.

### முதலாங் கட்டம்:

சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான முதலாங்கட்டப் பேச்சுவார்த்தைகள் இவ்வருடந் தைமாதம் 13ம் திகதி காலை 9.30க்கு ஆரம்பமானது. இம்முதற்சுற்றுப் பேச்சுவார்த்தை 12.30மணி வரையும், இரண்டாம் சுற்றுப் பேச்சு வார்த்தை பிற்பகல் 2.30மணிமுதல் 5.15வரையும் நடைபெற்றன. இப்பேச்சுவார்த்தையின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியற் றுறைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தலைமையில், யாழ் மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் திரு. க. டொமினிக், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. ஆ. ரவி ஆகியோர் கலந்துகொண்டனர்.

"விடைபெறும் லயனல் பெர்னாண்டோ"



நடாத்தப் புலிகளின் அனுமதியையும் இராணுவக் கைதிகளின் விடுவிப்பினையும் கோரினர். மேலும் சில பொருட்களின் தடை நீக்கம், கப்பல் கட்டணக்குறைப்பு, தாண்டிக்குள வாகனப்போக்குவரத்துத் தடைநீக்கம் அல்லது தடைக் குறைப்பு, மின்சார விநியோகம் , சாலைகள் புனரமைப்பு, பாடசாலைகள் திருத்தம் என்பனவும்(தொடர்ச்சி....3ம் பத்தி)

புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டவை

★ போர் நிறுத்தம்

★ போக்குவரத்துக்கான பாதை திறத்தல்

☐ தமிழர்களின் தாயகத்தினதும் தமிழ் மக்களினதும் சுய நிர்ணய உரிமையைப் பாதுகாக்கக் கூடிய மாற்றுத் தீர்வொன்றைப் பரிசீலிக்கத் தயார்நிலை.

☐ புனருத்தாரண வேலைத்திட்டத்தில் சிறீலங்கா அரசுடன் இணைந்து செயலாற்றச் சம்மதம்.

உலகின்பெரும் எதிர்பார்ப்புகட்கு மத்தியிற் பதவியேற்ற பிரதமர் சந்திரிகா தமிழர்கள் பிரச்சனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது யாவரும் அறிந்ததே. அதற்கேற்ப பதவியேற்ற சூட்டுடன் பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்கள் முடுக்கிவிடப்பட்டன. பிரதமரான சந்திரிகா ஜனாதிபதி சந்திரிகாவாகத் தான் தமிழர் பிரச்சனையென்றும் தாம் அதனைத் தலையைக் கொடுத்தேனும் தீர்த்துவைக்கத் தீர்மானித்தார் எனவும் அரசியல் நோக்காளர்களும் பத்திரிகைகளும் தெரிவித்தபோதும் தமிழ் மக்கள் நம்பிக்கையை இழக்கவில்லை.

அதன்படி 13,தை 1995 இல் சிறீலங்கா அரசதரப்பில் பிரதமரின்அந்தரங்கச் செயலாளர் திரு பலபத்த பென்டி தலைமையிலும், புலிகளின் தரப்பில் அரசியற்றுறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் தலைமையிலும் நடைபெற்றது.

புலிகள், எல்லாவற்றிற்கும் மேலாக எமது மக்கள் மேல் அநியாயமாகத் திணிக்கப்பட்ட யுத்தம் பொருளாதாரத் தடை எனும் இரண்டும் உடனடியாக நீக்கப்படவேண்டும் என வலியுறுத்தினர். சிறீலங்கா தரப்பினர் தொடர்ந்து நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் பகுதிகளில் தேர்தலை ....

(தொடர்ச்சி: முதற் பத்தி.......)

போர்நிறுத்தம் நோக்கி நகரச் சம்மதம் எனவும், இருதரப்பும் நம்பிக்கையுடன் கை குலுக்கிக்கொண்டனர்.மேலிடத்திற் புலிகளின் ஆலோசனைகளையுங் கருத்துக்களையும் தெரிவிப்பதாகக்கூறிச் சிங்கள அரசதூதுக் குழுவினர் தம் தலைநகர் நோக்கித் திரும்பினர்.

அரச தரப்பில் முன்மெழியப்பட்டவை

★ இராணுவக் கைதிகள் விடுவிப்பு

★ சனாதிபதித் தேர்தலில் வாக்கெடுப்பு நடாத்த புலிகளிடம் அனுமதி

☆ சில பொருட்களின் தடை நீக்கம்

☆ கப்பல் கட்டணக் குறைப்பு

☆ மின்சார விநியோகம்

☆ சாலைகள் புனரமைப்பு

☆ நீர்ப்பாசனப் புனரமைப்பு

☆ பாடசாலைகள் புனரமைப்பு

☆ போர்நிறுத்தம் நோக்கி நகரச் சம்மதம்

### இரண்டாங் கட்டம்

இடையில் நடந்த இழுபறிகளுக்கிடையில் ஒருவாறாக இரண்டாங்கட்ட பேச்சுவார்த்தைக்கு சிறீலங்கா அரசு தயாராகியது. லயனர்னல் லயனல் பெர்னாண்டோ தவிர்ந்த பலபத்தபெண்டி உட்பட்ட சிறீலங்கா பேச்சுவார்த்தைக் குழுவினரும் துணைப்பொறுப்பாளர் திரு.கரிகாலன், தமிழீழநிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு.ரவி, யாழ்மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி விடுதலைப்புலிகளின் அரசியற் றுறைப் பொறுப்பாளர் திரு சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் 03. 01. 95 அன்று யாழ்நகரில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. மேற்படி பேச்சுவார்த்தையில் தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு பொருளாதார நிலை மேம்பட்ட சகஜநிலை தோன்றியபின்னரே இனப்பிரச்சனை குறித்துப்பேசமுடியும் என விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர். மேலும் தாக்குதல் நிறுத்தம் மேற்கொள்ளப்படவும் அதுகுறித்து அதனைக் கடைப்பிடிப்பது சம்பந்தமான ஒழுங்குவிதிகள் குறித்தும் போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கான சமாதானக் குழுக்களை அமைப்பது குறித்தும் இருதரப்பிலும் இணக்கம் ஏற்பட்டது. ஆனாலும் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமானதாக அமைந்ததேயொழிய முடிவானதாக அமையவில்லை போர்நிறுத்தத்தை முழுதாக அமுற்படுத்துவதிலும் பூநகரிப்பாதையைத் திறப்பதிலும் முட்டுக்கட்டைகள் இருப்பதாய்த் தோன்றின. ஆனாலும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை தென்பட்டது. புலிகள் மக்கள் போக்குவரத்தைச் சிரமமின்றி மேற்கொள்ள வேண்டுமெனில் பூநகரி இராணுவமுகாம் அகற்றப் படவேண்டிதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர். அதே வேளை போர்நிறுத்த காலப்பகுதியில் ஏனைய தமிழ் விரோத சக்திகளின், குழுக்களின் அடாவடித்தனங்களும் அரசதரப்பினர்க்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேவேளை கிளாலி நீரேரியைக் கடப்பதற்கு ஏற்படும் சிரமங்களும் அபாயங்களும் யாழ் குடாநாட்டில் வாழும் அகதித் தமிழ் மக்களை மீளக்குடியேற்றுவதில் உள்ள சிரமங்களும், மீனவ சமூகத்தின் கஷ்டங்களும் அரசதரப்பினர்க்கு எடுத்துரைக்கப்பட்டது. புலிகள் சமாதான சமிக்ஞைகளைக் காட்டுமுகமாக நான்குபோர்க் கைதிகளை விடுதலை செய்திருந்தனர்.

1990ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் விடுதலைப்புலிகளினால் கைதுசெய்யப்பட்டிருந்த சிறீலங்காப் பொலிசாரில் கம்பளையைச் சேர்ந்த பி.எஸ்.பி பண்டார,(29) பவிலியவளையைச் சேர்ந்த ஜே.டி.தர்மசிறி(29)குளியாப்பிட்டியைச்சேர்ந்த டி. விமால் சந்திரசிறி (39) கொழும்பு பரராசகிரியைச் சேர்ந்த அத்துகொறள (25) ஆகிய நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர்.



விடுதலைப் புலிக
சிறீலங்காப் பொலிசா
மருத்துவ பரி

www.tamilarangam.net

# கிய கட்டாயம்

அரசதரப்பில் ஒரு சில பொருட்களுக்கான தடை நீக்கப்பட்டது. புலிகள் மக்களின் அன்றாட வாழ்க்கைச் சிரமங்களைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதில் முனைப்புடன் நின்றனர். இரண்டாம் கட்டப்பேச்சுவார்த்தையின் போது பத்திரிகையாளரின் கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்களை இவ்விடம் வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

கேள்வி:-மூன்றாங்கட்டப் பேச்சு எப்போது? எங்கு? நடைபெறும்

பதில்:- இவைபற்றி இன்றே (இரண்டாங்கட்ட பேச்சுவார்த்தைகளின்போது) முடிவுசெய்யப்படும். மேலதிகமான கருத்துக்களுக்காக கொழும்பு சென்று அதிகாரிகளுடன் கலந்துரையாடித் தகவல்களை அளிக்கவிருக்கின்றோம். கட்டங்களைப் பற்றி நாங்கள் கருதவில்லை. பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும்.

கேள்வி:- ஜனாதிபதியை கடைசியாக எப்போது சந்தித்தீர்கள்?

பதில்:- சனி இரவு, ஞாயிறு பகல், ஞாயிறு இரவு எனச் சந்திப்பு நடந்தது. கடைசியாக திங்கள் இரவு 10 மணிக்குச் சந்தித்தோம். நீண்ட நேரம் உரையாடியதால் களைப்பாகஇருப்பீர்கள் நாளை நீங்கள் பேச்சுக்களின்போது தூங்காமல் இருக்க வேண்டும். என்று வேடிக்கையாகக் கூறி அனுப்பினார். காலையிற் கொழும்பிலிருந்து புறப்படும்போது தொலைபேசியிற் தொடர்புகொண்டார்.



கேள்வி:- நீங்கள் சுகவீனமுற்றிருப்பதாகக் கேள்வியுற்றோம் தற்போது நலமாக இருக்கிறீர்களா?

பதில்:- நலமாகவே இருக்கிறேன். (சிரிப்பு)

கேள்வி:- சென்றமுறை உங்களுடன் வந்த லயனல் பெர்னாண்டோ இந்தமுறை ஏன் வரவில்லை?

பதில்:- தனது அமைச்சின் முக்கிய பொறுப்புக்களை அவர் ஏற்றுள்ளதால் வேலைப்பளு காரணமாக அவரால் வரமுடியவில்லை.



ல் விடுவிக்கப்பட்ட நான்கு
ாரன்பிட்டி பொலிஸ் ஆஸ்பத்திரியில்
தனையின் போது

கேள்வி:- அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது லயனல் வருவாரா?

பதில்:- அதைப்பற்றி இப்போது ஒன்றுங் கூற முடியாது.

கேள்வி:- கடந்த முறை தென்னிலங்கையிலிருந்து ஏராளமான செய்தியாளர்கள் வந்தனரே?, அவர்களை ஏன் இம்முறை அழைத்து வரவில்லை?

பதில்:- எங்களது விஜயம்கூட திடீரென எடுக்கப்பட்ட முடிவு. அதனால் செய்தியாளர்களை அழைத்து வர முடியாமற் போய்விட்டது. ஆனால் ஒன்று, அவர்கள் இங்கு வருவதற்கு ஆவலாகவே இருந்து வருகிறார்கள். உடனடி முடிவே அவர்களது ஆவலைப் பூர்த்திசெய்ய முடியாமற் போகக் காரணமாகிவிட்டது.



மூன்றாங் கட்டப்பேச்சுவார்த்தையில் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர் மத்தியில் திரு. தமிழ்ச்செல்வன்

மேற்படி உரையாடல் சிறீலங்கா அரசின் குழுத் தலைவர் திரு. பலபத்த பெண்டிக்கும் பத்திரிகையாளர்களுக்குமானது.

இரண்டாங்கட்ட பேச்சுவார்த்தைகள்பற்றி புலிகளின் குழுத்தலைவர் திரு. தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர்களின் வினாக்களுக்குப் பதிலளிக்கையில் தாக்குதல் நடவடிக்கைகளை இடைநிறுத்துவது குறித்தும், அதனைக் கடைப்பிடிப்பது குறித்தும், அதுகுறித்த ஒழுங்கு விதிகள் குறித்தும் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் எப்பொழுது தாக்குதல் இடைநிறுத்தம் ஏற்பட்டுள்ளது. என்பது குறித்து இருதரப்பும் அறிவிக்கும் எனவும், முதலில் அரசாங்கம் அறிவிக்குமெனவும் குறிப்பிட்டார்.

அரச பிரதிநிதிகள் குழுவில் ஏற்பட்ட மாற்றம் எல்லோரிடமும் கேள்விக்குறியாய் பிரதிபலித்தது. அதுபற்றி பத்திரிகையாளர் வினவியபோது, யாழ் வந்த சிங்களஅரசாங்கதரப்புக் குழுவில் இடம்பெற்ற கட்டடக்கலை நிபுணரான நவீன் குணரத்ன ஆராயப்படும் பிரச்சனைகளைப் பொறுத்து அரச பிரதிநிதிகள் பட்டியலில் மாற்றங்கள் ஏற்படத்தான் செய்யும் எனத் தெரிவித்தார்.

நீண்ட காலத்தின் பின் அதுவும் தமிழீழப் பிரதேசத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றமையும் அது கட்டங்கட்டமாகத் தொடரவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்படும் தீர்மானங்களை மேலிடத்தினருடன் கலந்துபேசி முடிவுக்கு வரக் கொழும்பு சென்று திரும்பவேண்டியதனாலும் கட்டங்கள் விரிவடைந்தன எனலாம்.



இரண்டாங்கட்ட பேச்சுவார்த்தைகளின் முடிவிற் சில விடயங்களில் இணக்கம் காணப்பட்டது. பொருளாதாரத் தடைத்தளர்வு, தடைசெய்யப்பட்டிருந்த மீன்பிடி வலயங்களின் பிரதேச விஸ்தரிப்பு, மோதல் தவிர்ப்பில் உடன்பாடு என்று மேற்குறித்த அம்சங்களில் இணக்கம் கண்டனர். ஆனாலும் போக்குவரத்துப் பாதைத் திறப்பில் பூநகரி முகாமானது எவ்வளவுக்கு சிரமங்களை ஏற்படுத்துகின்றது எனவும், அது அகற்றப்படவேண்டியது அவசியம் எனவும் புலிகள்தரப்பில் வற்புறுத்தி வலியுறுத்தப்பட்டபோதும் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்படாமல் அது அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கு நகர்த்தி வைக்கப்பட்டது.

## மூன்றாங் கட்டம்

15.1.1995 அன்று திரும்பவும் மூன்றாங்கட்டமான பேச்சுவார்த்தைகள் யாழ் நகரில் ஆரம்பமானது. இதில் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையிற் சில விடயங்களில் இணக்கம் ஏற்பட்ட அதேவேளை, சில விவகாரங்களிற் தீர்வு எவையும் எட்டப்படாமல் முடிவடைந்துள்ளது.

இதில், மோதற் தவிர்ப்பு நிலை நீடிப்பு, பொருளாதாரத் தடை நீக்குவதற்கான அரசதரப்பு வாக்குறுதி, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்திட்டம் போன்றவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டது.

இதேவேளை பூநகரி இராணுவ முகாமை அகற்ற அரசு முன்வராமையால் பாதைத்திறப்பு விவகாரத்தில் முன்னேற்றமெதுவுமேற்படவில்லை. இதைவிட, முக்கிமான விவகாரமாக யாழ் குடாநாட்டிற்கான பாதை திறப்புக்குறித்து ஆராயப்பட்டது. ஆனாலும் பூநகரியிலிருந்து இராணுவத்தை அரசு விலக்கத் தயாராக இல்லாததன் காரணத்தால் இவ்விவகாரத்தில் குறிப்பிடும்படியான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

அடுத்ததாக, முக்கியவிடயமாகப் பொருளாதாரத் தடையைத் தளர்த்துவது தொடர்பாக ஆராயப்பட்டது. அரசாங்கம் தடைசெய்யப்பட்ட பொருட்களின் ஒரு தொகுதிப் பொருட்கள் மீதான தடையை அகற்றத் தயாராக இருந்தது. ஆயினும் இராணுவப் பொருட்கள் தவிர்ந்த எனைய பொருட்களுக்கான தடையை நீக்கவேண்டும் எனப்புலிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேற்படி விடயங்களை ஆழ்ந்து நோக்கும்போது அரசானது தனது தீர்வெண்ணத்தைக் கட்டங்கட்டமாக நகர்த்துவது கண்கூடு. புலிகளுக்கு காலங்கடத்தவேண்டிய கட்டாயமோ அன்றி பேச்சுவார்த்தையினைப் பின்னிழுக்க வேண்டிய கட்டாயமோ இல்லை. ஆனால் சிறீலங்கா அரசோ தனது அரசியல் பொருளாதார நலன்களை முன்னிட்டு பேச்சுவார்த்தையின் கட்டங்களைக் கட்டாயப்படுத்தி அதிகரிக்கின்றார்களோ என ஐயுறவேண்டியுள்ளது.அவர்கள் அள்ளித் தராமல் கிள்ளித் தந்தே காரியத்தை முடிக்கப்பார்க்கிறார்களோ என்ற ஐயப்பாட்டுடன் மூன்றாங் கட்டப் பேச்சுவார்த்தையானது, எதிர்பார்த்த திருப்தியைத் தராமல் நான்காம் கட்டம் நோக்கி முடிவுற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அனர்த்தங்களும் அபிவிருத்தியும்......

தொழில்நுட்பவியலாளர், பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கான தட்டுப்பாடு.

05. தொடர்பு வசதிகளின்மையும், போக்குவரத்து வசதியின்மையும்.

06. நிர்வாகிகளுக்கும் ஆயுதப்படையினருக்குமிடையே ஏற்பட்ட சுமூகமற்ற தொடர்பு.

07. திருப்தியற்ற ஒருங்கிணைப்பும், மேற்பார்வையும்.

08. எல்லாத்தரத்திலும் தேவையான பயிற்றப்பட்ட தொழிலாளர் இல்லாமை.

09.திட்டங்கள் நெகிழ்வுத்தன்னையுடையனவாகவும், அப்பிரதேச தேவையை நிறைவேற்றுபவையாகவும் பூரணமாக இருக்கவில்லை.

10. திட்டங்களை நிறைவேற்றும் மாவட்ட நிலை உத்தியோகத்தருக்கு அடிப்படைத்தேவைகளை திட்டமிடலுக்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

11.அரசியல் சூழ்நிலை பொருளாதார அபிவிருத்திக்கான புனரமைப்பை செயற்படுத்துவதற்கானதாகவிருக்கவில்லை. இது,இத்திட்டம் வடக்கு கிழக்குமாகாணங்களில் பூரணமாக செயற்படுத்த முடியாமல் போவதற்கு காரணமாகவிருந்தது, உதாரணமாக யாழ்மாவட்டத்தில் பொதுக்கட்டடம், வீதிகள் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நிதியின் உபயோகத்தை அவதானிக்கலாம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் என்ற ஆய்வுப்பட்டறையில் கலந்து கொண்டு புனருத்தாரண அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் என்ற தலைப்பில் யாழ். செயலகத்தின் புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் **செ. பத்மநாதன்** ஆற்றிய தலைமையுரையை இங்கு தருகின்றோம்

| | செயற்படுத்தும் நிறுவனம் | ஒதுக்கிய நிதி | அங்கீகரிக்கப்பட்ட திட்டம் | செலவுத் தொகை | வீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | யாழ் மாநகர சபை | 85,000,000 | 61,009,260 | 33,278,155 | 39% |
| 2 | சாவகச்சேரி பட்டினசபை | 30,000,000 | 13,320,000 | 6,559,290 | 21% |
| 3 | பருத்தித்துறை | 45,000,000 | 5,455,000 | 629,211 | 1.4% |
| 4 | வல்வெட்டித்துறை | 45,000,000 | 8,337,475 | 1,858,966 | 4% |
| 5 | மற்றைய நகரம் | 30,000,000 | 12,645,000 | 7,297,907 | 24% |
| 6 | கல்வித்திணைக்களம் | --- | 181,829,216 | 65,166,161 | 35% |
| 7 | கடற்றொழில் | --- | 12,368,000 | 2,984,293 | 24% |
| 8 | கூட்டுறவு | --- | 31,285,000 | 5,730,385 | 18% |

இதிலிருந்து பெருந்தொகையான, ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்யமுடியாத நிலையில்இருந்தமை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

1990ஆம் ஆண்டு ஜூனின் பின்னர் அவசரகாலபுனரமைப்புத்திட்டத்தின் முதலாம் பகுதி திரும்ப செயற்படுத்தப்பட்டபோதும் இராணுவ கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிரதேசங்களில் மாத்திரம் அமுல் நடத்தப்பட்டது. இதற்காக 160மில்லியன்டொலர் செலவிடப்பட்டுள்ளது.

## தற்போதைய நிலை

01.தற்பொழுது மொத்தமாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் பல்வேறு மாவட்டங்களில் தற்பொழுது வாழ்பவர்கள் 130,000 (யாழ்ப்பாணம்–79,834)

02.முகாம்களில் வசிக்கும் குடும்பங்கள் 40,000 (யாழ்ப்பாணம்–8,968)

விவசாய, கால்நடைஉற்பத்தித்துறை பெரும் வீழ்ச்சியைக் காட்டிநிற்கின்றது ஒரு மதிப்பீட்டின்படி விவசாயத்துறையின் 1981ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் 303மில்லியன் ரூபாவாகவிருந்த உற்பத்திப் பெறுமதி 1990ஆம் ஆண்டில் 90மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது அதேநேரத்தில் உள்ளீடுகளுக்குள்ள பாரிய போக்குவரத்துச் செலவும், தடைகளும் விவசாயிகளது உற்பத்திச்செலவை அதிகரித்துள்ளது. இதில் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுறை கடற்றுறையாகும். 1983ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கில் உற்பத்தி 104,318மெ.தொன்னாகக் குறைந்துள்ளது. இது இத்தொழிலில் ஈடுபட்டுள்ள 58,582குடும்பங்களையும் எவ்வாறு பாதித்துள்ளதென்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

அத்தோடு நிரந்தர வருமானம் பெறும் அரசஊழியர்கள், கூட்டுறவு ஊழியர்கள் தவிர்ந்த சுயதொழில்களில் ஈடுபட்டிருந்த கட்டடத் தொழிலாளர், தச்சுத் தொழிலாளர், வாகனத்தொழிலாளர் ஆகிய பல தொழிலாளர்கள் இழந்த அவர்களது வாழ்க்கை நிலைமை பாதிக்கப்பட்டதோடு அல்லாமல் தொழிற்பயிற்சியும், தேர்ச்சியுங் கொண்ட இவர்களது தொழிற்றிறமை செயல் இழந்தும் போய் விட்டது.

மக்கள் இடம்பெயர்வு, இருப்பிட வசதியின்மை போன்ற காரணிகள் சமூகத்தின் கட்டமைப்பிற் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதோடு, சமூகக்கட்டுப்பாடுகள், பழக்கவழக்கங்களிற் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருட் தட்டுப்பாடு, மின்சாரமின்மை என்பன மாற்றுச்சக்திப் பயன்பாட்டினை ஊக்குவித்தது. இது கிராமப் புறத்தில் அமைந்த சிறு காடுகள், மரங்கள், கண்டல்காடுகள் என்பவற்றை அழித்து விறகுக்காக விற்பனை செய்யும் ஒரு புது தொழிலாளர்குழுவை உருவாக்கியுள்ளது. இது பாரிய சூழல் பாதிப்பை ஏற்படுத்தி எதிர்கால சந்ததியினருடையதும் எமது பிரதேசத்தினதும் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துள்ளது.

இவ்வாறானதோர் நிலையில்தான் இரண்டாங்கட்டப் புனரமைப்பு, புனர்வாழ்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியை புனரமைப்பு புனர்வாழ்வுஅமைச்சு மேற்கொண்டுள்ளது.அதற்கான நிபுணர்கள் குழு வடபிரதேசத்தின் மாகாணங்களுக்குச் சென்று நிலைமையை அவதானியாது மக்களோடு கலந்தாலோசிக்காது, தமது திட்டத்தை தயாரிக்கும் நோக்கத்தைக்கொண்டது. இச்சந்தர்ப்பத்தில் அவர்களது வருகையின் அவசியத்தையும், மக்களது இழப்புகள், தேவைகளை நேரடிஅவதானிப்பு மூலம் இனம்காண வேண்டியதன் அவசியத்தையும், இங்குள்ள திணைக்களத்தலைவர்கள், புத்திஜீவிகள் திட்டத்தை செயற்படுத்துபவர்கள் ஆகியோரது கருத்துகளைக் கேட்டறிவதன் அவசியம் அவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக எமது தேவைகளை இனம் கண்டு நாமே அதனை விவாதித்து நமக்குள் தெளிவு பெற்று இலக்கைத் தீர்மானித்தல் வேண்டும். இது இலகுவான படிமுறையான திட்ட செயற்பாட்டுக்கும் மக்கள் பங்குபற்றுதலுக்கும் வழிவகுப்பதோடு, நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கும் அபிவிருத்தி, புனரமைப்புத் திட்டமாகவும் மாற்றமடையும் என எண்ணுகின்றேன்.

இதன்அடிப்படையில்(1)விவசாயம், கால்நடை, சூழல், (2)கடல்வளம், (3)பொருளாதார உட்கட்டுமானங்கள்.(4)சமூக உட்கட்டுமானங்கள், (5)நகரத்திட்டமிடல்.(6)மக்கள் குடியிருப்புகள்,(7)கைத்தொழில்,(8)அரசசார்பற்ற நிறுவனங்கள்,(9)சந்தைப்படுத்தலும், விநியோகமும். நிதி நிறுவனங்களும் ஆகிய ஒன்பது துறைகளாகப் பிரிக்கப்பட்டு அரச சேவையாளர்களும், அவ்வத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களுமாக தமது துறை சார்ந்த புனரமைப்பு அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை உங்கள் முன்வைக்க இருக்கிறார்கள். இவ்விடயத்தில் தங்கள் கருத்துக்களை இந்தப் பிரதேசத்தின் நன்மை மக்களது நல்வாழ்க்கை கருதி தெரிவிக்கும்படியும், கலந்துரையாடல் குழுநிலை கலந்துரையாடலில் தங்களது பங்குபற்றலைப் பூரணமாக எதிர்பார்க்கின்றோம்

இந்நிலையில் இத்திட்ட முன்மொழிவுகள் நாம் முன்னர் குறிப்பிட்ட படி:

(அ) புனரமைப்பு

(ஆ)அபிவிருத்தி

(இ) ஒன்றிணைக்கப்பட்ட துறைசார் பிரதேச மாவட்ட அபிவிருத்தி

(ஈ) மாவட்டம் மாகாணம்சார் திட்டமிடல் என்பது முக்கியமான படிமுறையாகவுள்ளது இதில் குறிப்பிடக்கூடிய அம்சங்களாக

(அ) பிரதேச திட்டமிடலினது ஆரம்ப நடவடிக்கையாக இக்கலந்துரையாடல் மூலம் ஏற்படுத்தப்படும் அணுகுமுறை எதிர்காலத்தில் வலுப்பெறும் நடவடிக்கையாக அமையும்.

(ஆ) இதில் பங்குபற்றி மற்றும் அரச ஊழியர்கள் தமக்குள் தமக்கு தெரியாமலே இருந்துவந்த திறமையை வெளிக்கொண்டுவந்து எதிர்கால ஒளிமயமானதோர் சேவைக்கு எதிர்வு கூறி நிற்கின்ற நிலை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

(இ) மூன்றாவதாக கடந்த நான்கு வருடங்களாக அரச சார்பற்ற நிறுவனங்களும், அரச திணைக்களங்களும் இயங்கி வந்த முறை பாராட்டுக்குரியதும். மற்றைய மாவட்டங்கள், நாடுகளுக்கு முன்னுதாரணமாகவும் அமைந்துள்ளது இந்நிலை தொடர்புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகளில் இணைந்து பணியாற்றும் ஓர் நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது.

(ஈ) இறுதியாக அரசியல் ஸ்திரத்தன்மையும், அங்கீகாரமும், பங்குபற்றலும் இல்லாதுவிடின் எந்தத்திட்டமும் செயற்படுத்த முடியாதென்பது எமக்கு அனுபவம். அந்த நிலை மாற்றமடைந்து இந்த திட்டமுறை தயாரித்தல் இக்கருத்தாளர்களை ஒழுங்குபடுத்துதல், அதன் முன்னேற்றத்தை நாள்தோறும் மேற்பார்வையிட்டு நம்மை ஊக்குவித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளருக்கும் மற்றைய பொது முகாமையாளர்கள், பொருண்மிய மதியுரைக்குழு அங்கத்தவர்கள் ஆகியோரது பங்குபற்றல் எமக்கு புதுத்தென்பையளிக்கின்றது. இவற்றுக்கெல்லாம் உற்சாகமாக மூத்த தலைவர்கள் இன்று வந்து இதனை ஆரம்பித்து வைப்பது, கருத்துரை வழங்கவிருப்பது நாம் ஆரம்பித்துச் செல்லும் இம் முயற்சி வெற்றி பெறும். செயலாக்கம் பெறுமென எண்ணுகின்றேன்.

# வைகறைப் பூக்...

*இந்நேரம் ஆமிக்காரன் வெளிக்கிட்டிருப்பான். ஊரை விட்டே ஓடியிருப்பியள். இப்ப வீடு வாசலில் ஒழுங்கா இருக்கிறமெண்டால் அது அவையாலைதான் என்டதை மறந்திடாதேங்கோ..." என்றேன் சிறிது கோபத்துடன். படுத்திருந்த அம்மாவும் பதிலுக்குத் தன் கருத்தைக் கூறி முடித்தாள்.*

*"சும்மா சொல்லப்படாது ஒரு ஊரைக் கட்டி அவுக்கிறதெண்டால் இலேசான காரியமே....அந்தக் காலத்திலை... விதானைமார் செய்த வேலையளையெல்லாம் .... இப்ப இந்தச் சின்ன வயசில இந்தப் பிள்ளையள் எவ்வளவு விளக்கமாகச் செய்யுதுகள்..."*

*எங்களால எங்கட எங்கட வீட்டுப்பிரச்சினைகளையே சமாளிக்க முடியேலை. அவங்களும் எத்தனை எண்டு செய்யிறது" எல்லோர் கருத்தும் ஒரு பக்கமாக இருப்பதால் தானும் அவ்வழிக்கு வந்த சிதம்பரம் அண்ணை தன் கருத்தைக் கூறிச் சமாளித்தார். மறுநாட் காலையும் வழமை போலவே மலர் மாலைகளால் என் மனதில் நிறைந்தவர்களைத் தரிசித்து நான் அலுவலகம் புறப்படுமுன்,*

*"அம்மா இந்தாங்கோ... இந்தக் கடதாசியை இனியவன் வந்தா... குடுங்கோ"*

*என்று நான் எழுதி வைத்திருந்த பெயர்ப் பட்டியல் அடங்கிய காகிதத்தை மடித்து அம்மாவிட்ம் நீட்டினேன். படுக்கை நோயாளியான அம்மா படுத்திருந்தவாறே தன் இரு கைகளாலும் அதனை வாங்கித் தன் தலையணைக்கடியில் பத்திரப்படுத்திய விதம் இனியவனிடம் அவள் கொண்டிருந்த விசுவாசத்தையும் அதனூடு இந்த மண்ணின் தேவைகள் மீது அவள் கொண்டிருந்த அக்கறையையும் எனக்குத் தெளிவாக்கிய போது என்னுள் ஒருவிதமான நிறைவு ஏற்பட்டது. போராட்டத்தை -அதன் தேவையைப் புரிந்து கொண்டவர்களும் எம்மண்ணில் இருப்பதால் தானே குறுகிய காலத்தில் வெகு வேகமான வளர்ச்சியை கண்டிக்கிறது எம் போராட்டம் என்ற நினைப்பு என்னுள் நிறைந்து நின்றது. அலுவலகப் பணிகள் முடிந்து நண்பிகள் சகிதம் வீடு நோக்கி வந்து கொண்டிருந்த என்னை விலத்திச் சென்ற அந்த ஒலிபெருக்கி வாகனத்தின் செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது.*

*"எதிர்பாராத மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் இனியனது வித்துடலுக்கு இறுதி மரியாதை செலுத்த விரைந்து வாருங்கள்" என அழைத்துக் கொண்டிருந்தது அந்த ஒலி பெருக்கிச் செய்தி. என் காதுகளால் நம்ப முடியாத அந்தச் செய்தி என் கால்களின் வேகத்தைக் கூட்ட வித்துடல் வைக்கப்பட்டிருந்த அந்தச் சந்தை மைதானத்தை என் துவிச்சக்கரவண்டி எப்படி அடைந்ததோ எனக்குத் தெரியாது.*

*அங்கே "பூ அக்கா.... பூ அக்கா" என என்னை இனிமையாக அழைக்கும் அந்த இனிய தம்பி -இனியன் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பெட்டியினுள் ஆறுதலாகப் படுத்திருந்தான். கண்களில் முட்டி வழிந்த கண்ணீரை துடைத்து விட்டு அவன் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிய நான் கவலையுடன் வீட்டை அடைந்த போது,*

**தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கப்டன் லக்ஸ்மன்

## அவனில்லாமல் போனால் அடிப்பதற்கு வேறு வீரர்கள் தயாராய் இருந்தனர். ஆனால்...

வெடிவாயன் -

பொருத்தமான பெயர்.

கூப்பிட்டால் செல்லமாகக் கோபித்து, ஒற்றைக் காலில் கலைப்பான்.

தச்சன்காட்டில் - பலாலிப் பெருந்தளத்தின் ஒருபகுதிக் காவல் வியூகத்தை உடைத்தெறிய முனைந்த ஒரு தாக்குதலில் -

கை எலும்புகளையும் நொருக்கி, வாய்ப் பகுதியையும் பிய்த்துக்கொண்டு போய்விட்டன துப்பாக்கிச் சன்னங்கள்.

ஒரு துண்டு இல்லாமல்போய், ஒரு பக்கமாய் இழுபட்டு, நெளிந்துபோயிருந்த வாயால் அவன் பேசும்போது, பார்க்க அழகாய்த்தான் இருக்கும்.

அது மழலைக் குரல்.

பண்டத்தரிப்புக்குப் பகைவன் நகர்ந்த சண்டையில் காலை இழந்தவன், 'பலவேகய -2' சண்டை துவங்கிய போது பொய்க்கால் பொருத்திக்கொண்டு ஆனையிறவுக்கு ஓடினான்.

இயக்கச்சியில் வைத்து, அடிக்காத குறையாய் துரத்திக் கலைத்த தளபதியோடு சண்டை பிடித்துக்கொண்டுதான் அவன் திரும்பி வந்தான்.

'மணியந்தோட்டம் - 2' பயிற்சி முகாம், நான்காண்டுகளுக்கு முன்னர் லக்ஸ்மனை போரிற்குத் தயாராக்கியது.

யாழ்ப்பாணக் கோட்டைதான் அந்த வீரனின் முதற் களம்.

மாங்குளம், சிலாபத்துறை, ஆனையிறவு, மணலாறு, காரைநகர், பலாலி -

பகைவன் கூடாரமடித்த இடங்களிலெல்லாம் அந்த வீரன் போர் தொடுத்தான்.

**குடிமகனொருவன் தன் தாய் மண்ணுக்காகச் செய்யக்கூடிய அதியுயர் தியாகத்தை, தான் செய்ய வேண்டுமென்ற வேட்கையை, சுவாசப்பையில் சுமந்து கொண்டு திரிந்தான் அந்தக் கரும்புலி.**

அந்தச் சந்தர்ப்பத்திற்காக அவன் கடல் மடியில் தவம் கிடந்த நாட்கள் ஏராளம்.

சதுரங்கப் பலகையில் - தனது சேனையை மதிநுட்பத்தோடு வழி நடாத்தி, எதிராளிகளின் அரசர்களை முற்றுகையிட்டு, முறியடித்து, வீழ்த்துகிற அந்தச் சதுரங்க வீரன் -

கற்பிட்டிக் கடலில் ஒரு கரும்புலியாக, எதிரியின் 'கடல் அரசனைத்' தகர்த்து மூழ்கடித்தான்.

'ஆசீர்' கடற்பயிற்சிப் பாசறையில் தளபதி சாள்ஸ் வனைந்தெடுத்த கடற்புலி வீரர்களுள், லக்ஸ்மனும் ஒருவன்.

கிளாலிக் கடற்களத்தில் அந்த வீரத் தளபதி வீழ்ந்தபோது, அவனது கைகளில் வளர்ந்த இந்தக் கரும்புலிக் குழந்தைகள் வெகுண்டெழுந்தார்கள்.

சுட்டெரித்துச் சாம்பராக்க எங்கள் கடலெங்கும் பகைவனைத் தேடியலைந்தார்கள்.

பருத்தித்துறையில் 'சுப்ப ட்டோறா'வைத் தகர்த்தபோதும், இதயத்தில் விழுந்த அந்த ஆழமான காயம் ஆறவேயில்லை.

அந்தத் தளபதியின் நினைவோடு தொடங்கப்பட்ட பயிற்சிக் கல்லூரியில் பயின்று வெளியேறிய மாணவர்கள்தான் -

சிலாபத்துறையில் - பகைவனின் மடியில் நெருப்பு மூட்டினார்கள்;

'சாகரவர்த்தனா'வைச் சாகடித்துச் சாதனை படைத்தார்கள்.

லக்ஸ்மன் இயல்பாகவே கெட்டிக்காரன்.

விசயம் தெரிந்தவன்.

அநேகமாக - பொதுவான எல்லா விடயங்களைப் பற்றியும் அவனது மூளைக்குள் பதிவுகள் இருந்தன.

முகாமிற்குப் பொருள்கள் ஏற்றிவரும் உழவுப்பொறி ஐயாவைப் பார்த்து, "நடுப்பெரிய சில்லு ரெண்டுக்கும் எத்தினை கிலோ காத்து?" என்பான்.

ஐயா தலைசொறிந்து நிற்க, "பெரிய சில்லுகள் தானே, எப்படியும் 150, 200 கிலோ வரும்" என நாங்கள் நினைக்க -

"40 கிலோ தானய்யா.... கனக்க இல்ல" -மேதாவியாய் பதில் சொல்லுவான்.

பள்ளிக்கூட மைதானத்தில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் பையன்களைக் கைதட்டிக் கூப்பிட்டு -

"கிரிக்கற் பந்து எவ்வளவு நிறை இருக்க வேண்டும்?" என்பான்.

பதில் தெரியாமல் முழித்து, அப்பாவித்தனமாய்ச் சிரிக்கும் பையன்களைப் பார்த்து -"110 கிராம் தம்பி" - சொல்லிவிட்டு வருவான்.

அவனைப் பெரிய அறிவாளி என்று சொல்வதற்கில்லை; ஆனால், எவரோடும் எதைப் பற்றியும், கதைக்கக்கூடிய அளவுக்கு அவன் இருந்தான்.

**அது அவனது சிறப்பு இயல்புகளில் ஒன்று. வீட்டுக்கு வெளியில், நாட்டுக்கு வெளியில், பூமிக்கு வெளியில், எங்கள் ஞாயிற்றுத் தொகுதிக்கு வெளியில், எல்லையற்ற இந்தப் பிரபஞ்சத்தின் வெளியில் -மானிடன் கண்டுபிடித்த எல்லாவற்றையும் பற்றி, தானும் அறிந்திருக்க வேண்டும் என்ற முனைப்பும் முயற்சியும் கொண்டவன் லக்ஸ்மன்.**

அந்த ஆர்வத்தினால் -

எல்லாவற்றையும் பற்றித் துருவித் துருவி ஆராய்வான்.

'றாடர்' படிப்பிக்க வந்தவர் குழம்பியே போனார் - அவன் குடைந்த குடையலுக்கு பதில் சொல்ல முடியாத அளவுக்கு.

"பிரண்டவன்"

'பிரணவன்' என்ற அவனது இயற்பெயரை நாங்கள்தான் இப்படி மாற்றினோம்!

பிறந்தது 05. 07. 1974 இல்.

ஊர் நல்லூர்; சங்கிலி மன்னனின் பழைய இராசதானி.

படித்தது யாழ்ப்பாணம் 'ஸ்ரான்லி கல்லூரி'யில்

கிரிக்கற் பைத்தியம்.

உடலைச் சரித்து, 'ஸ்ரியறிங்கை' அவன் வளைத்துத் திருப்புகிற லாவகத்தில், படகு பக்கவாட்டில் சரிந்து வளையும் -தண்ணீர் அள்ளித் தெறிக்கும்.

இயந்திர இயக்கத்தை அவன் உச்சப் பயன்பாட்டுக்கு உயர்த்த, படகு அசுர வேகத்தைப் பெறும் -அலை கிழிந்து வழிவிடும்.

கடல் பிளக்கும்.

நெளிந்த வாயை இன்னும் நெளித்து அவன் ஆனந்தமாய்ச் சிரிப்பான்

அந்தி சாய்கிற செவ்வானப் பின்னணியில் ஆகா! அது கண்கொள்ளாக் காட்சிதான்.



**ஒரு கரும்புலி வீரன், வாழ்வில் எதற்குமே கவலைப்படமாட்டானாம்; ஒரே ஒரு விடயத்தைத் தவிர. தான் தாக்குகிற இலக்கு முக்கியத்துவம் குறைந்ததாக இருந்துவிடக்கூடாது என்பது மட்டும்தான், ஒரு கரும்புலி வீரனுக்குக் கவலையாக இருக்குமாம்.**

ஒரு கரும்புலி வீரனென்ற வகையில் தனக்குள்ளிருந்த அந்த மன ஏக்கத்தை அந்த நண்பன் எங்களுக்கு இடைக்கிடை சொல்வதுண்டு.

நெடுநாளாய் அவர்கள் தேடிய பெரிய இலக்கு, வசதியாய்க் கடலில் வருவதாக வேவு வீரர்கள் தகவல் தந்த ஒரு மாலைப் பொழுது.

வீட்டில் துடுப்போடும், பந்தோடும்தான் படுக்கைக்குப் போவானாம்.

லக்ஸ்மனுக்கு தச்சன்காட்டுச் சண்டையில் வெடிபட்டு, ஒரு கையில் இயக்கம் இல்லாமல் போய்விட்டது.

பண்டத்தரிப்பில் மிதிவெடி வெடித்து ஒரு காலின் பாதம் சிதைந்து போய்விட்டது.

இருந்தபோதும் -

கடலில் இறங்கி, தோழர்களின் தோள்களைப் பற்றி மெல்ல மெல்ல நீந்தப் பழகியவன் -கொஞ்சக்காலத்திற்குப் பிறகு, தன்னந்தனியாக நீந்திக் கடந்த தூரம் 5 கடல் மைல்கள்.

லக்ஸ்மன் நல்லதொரு படகோட்டி.

நீண்டகால அனுபவம் பெற்றிருந்தவர்களை விடவும் குறுகிய காலத்திற்குள் அவன் பெற்றிருந்த திறமை, எங்களை ஆச்சரியப்பட வைத்தது.

கடற்புலிகளின் சிறந்த படகோட்டிகளுள் ஒருவனென அவனைச் சொல்லமுடியும்.

இன்னதென்று இல்லாமல், என்னவிதமாக வடிவமைக்கப்பட்ட படகையும் தனது கைகளுக்குள் அவன் வசப்படுத்துவான். உருவாக்கப்படும் போது சமநிலை தவறிவிட்ட ஒரு படகை எல்லோரும் கைவிட்டுவிட, கிளாலியில் -அவன் தான் கையிலெடுத்துக் கடலில் இறக்கினான்.

தாக்குப்பிடிக்க முடியாமல் தலைதெறிக்க ஓடினான் பகைவன்.

லக்ஸ்மனின் படகு உறுமிக்கொண்டு தண்ணீரில் ஓடும் -'அக்சிலேற்றரை'க் கூட்டி அவன் வேகமூட்டும் போது, அணியம் குத்தி நிமிரும் -படகு தாவிக் கடந்து பாயும்.

தனது அன்புத் தங்கையின் 'சாமத்திய வீட்டுக்குப்' போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் அந்த அண்ணன்.

ஆசைத் தங்கை, அதிலும் ஒரு நல்லநாள்; அண்ணன் வருவான் என்று அவள் காத்துக்கொண்டேயிருப்பாள்; இனி ஒருபோதும் பார்க்கக் கிடைக்காமலும் போகலாம்.... அங்கேயும் போகவேண்டும்.

பெற்றெடுத்த தேசம்; பிணங்களாய் தினம் ஒதுங்கும் எமதினிய மக்கள்; பகைவனின் ஆளுகையில் எம் கடல்; தேடி அலைந்த இலக்கு; தவறவிட்டுவிடக்கூடாத ஒரு சந்தர்ப்பம்... இங்கேயும் நிற்க வேண்டும்.

அவனில்லாமல் போனாலும் அடிப்பதற்கு வேறு வீரர்கள் தயாராகவும் இருந்தார்கள்.

ஆனாலும் அந்தத் தர்மசங்கடமான நிலைக்கு அவன் சுலபமாக முடிவெடுத்தான்.

படகைத் தயார்செய்து கடலில் இறக்கினான்.

நல்லகாலம்.... பகைவனுக்கும், அவனது தங்கைக்கும் நல்லகாலம் -காலநிலை வாய்ப்பாக அமையாததாலும், வேறு காரணங்கள் தடையாக வந்ததாலும் பகைவன் தப்பிவிட்டான்.

மறுநாள்தான் தளபதிக்கு விசயம் தெரிந்தபோது - அவனைத் துரத்திக் கலைத்தார் வீட்டுக்கு.

இதேபோலவேதான் -

இன்னொரு நாள், இன்னொரு முனை, இன்னொரு இலக்கு, இன்னொரு தயார்ப்படுத்தல், இன்னொரு தங்கைக்குச் 'சாமத்தியவீடு'.மீளவும் ஒரு இக்கட்டான நிலை

புறப்படுவதற்கு முன்னாலிருந்த சின்ன இடைவெளிக்குள் -

ஓடோடி வீட்டுக்குச் சென்று, எல்லாரோடும் ஒன்றாயிருந்து, அன்புத் தங்கையை ஆரத் தழுவி முத்தமிட்டு விடைபெற்றுப் போனவன்.... போனதுதான்.

காத்துக்கொண்டிருந்தவர்களுக்கு -சிலாபத்துறையில் கப்பலடித்த அந்தச் செய்திதான் வந்தது! ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# 12,400 இரட்டை சூட்டடுப்புக்கள் வடக்கில் இதுவரை அமைப்பு

அன்றாட வாழ்க்கையில் மக்களுக்கு விறகின் விலையேற்றம் பெரும் சுமையாக இருக்கின்றது. தொடக்க காலங்களில் - அதாவது இரண்டாவது ஈழப் போர் தொடங்குமுன், யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான விறகு வன்னிப் பகுதியிலிருந்தே வந்துகொண்டிருந்தது. ஆனால் 1990 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து, ஆனையிறவுப் பாதை தடைப்பட்டதன் காரணமாக, வன்னிப் பகுதியிலிருந்து வந்த பிறகு யாழ். குடாநாட்டுக்கு வருவது தடைப்பட்டது. இதன் விறகு விற்பனையாளர்கள் யாழ். குடாநாட்டிலுள்ள பயன்தரு மரங்கள், வடமராட்சி கிழக்கு, தென்மராட்சிப் பகுதிகளிலுள்ள சிறுபற்றைக் காடுகளை வெட்டி, விற்பனை செய்யத்தொடங்கினர். இதன்காரணமாக இப்பகுதியில் விறகு விலையேற்றம் கூடிக்கொண்டே சென்றது. மேலும், இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய காலத்திலிருந்து வடதமிழீழத்தில் மின்சாரம் தடைப்பட்டதன்பின், அனைத்து தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் இயங்க முடியாமல் இருந்தன. இதனால் இங்கு வேலையில்லாப் பிரச்சினை தோன்றியது. பல கூலி வேலைசெய்யும் தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளானார்கள். இப்படியான இந்தநேரத்தில் - குறைந்த வருமானத்தில் வாழ்க்கை நடாத்தும் இவர்களுக்கு, விறகின் விலையேற்றம் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனைக் கருத்திற்கொண்டே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் (TEEDOR) சக்திப் பகுதியினர் 'இரட்டைச் சூட்டடுப்பு' பாவனை முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் இயற்கை வளங்களை அழித்து, அதிகளவில் விறகைச் செலவுசெய்ய வேண்டியதில்லை. இரட்டைச் சூட்டடுப்பை பாவித்தே வருமானத்தைச் சேமிக்கலாம். சக்திப் பகுதியின் இம்முயற்சியால் குறைந்த வருமானத்தில் வாழ்க்கை நடாத்தும் பல குடும்பங்கள் பெரும் ஆறுதலடையக் கூடியதாக இருக்கின்றது. இதன் மூலம் பல பயன்தரு மரங்கள் தறிக்கப்படுவது குறைக்கப்படும். இரட்டைச் சூட்டடுப்பு பயன்பாட்டால், எம் மக்கள் மிக இலகுவாகவும் எளிதாகவும் நன்மையடைந்து வாழக்கூடியதாக இருக்கின்றது. இந்த அடுப்பின் மூலம் மக்களின் தேவைகள் மிகச்சிக்கனமாகவே இருக்கின்றது. இந்த அடுப்பினைப் பாவிக்கும் மக்கள் சிக்கனமான முறையில் சமைக்கின்றனர். எரிபொருளும், விறகுகளும் மீதப்படுத்தப்படுகின்றன. இதனை மீதப்படுத்துவதன் மூலம் காடுகள் அழிப்பதைத் தவிர்த்துக்கொள்ளலாம். விறகுத் தேவையைக் குறைப்பதன் மூலம், நேரமும் மீதப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இந்த இரட்டைச் சூட்டடுப்பில் சமைக்கும்போது, அதிக விறகுகள் தேவையில்லை. குறைந்த விறகினைக்கொண்டே சமைக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரே நேரத்தில் இரண்டு அடுப்பில் சிரமமின்றி சமைக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனை சக்திப் பகுதியினர் நுணுக்கமான முறையில் அனுபவமுள்ளவர்களைக்கொண்டு, இந்த அடுப்பினை மக்களுக்கு கட்டிக்கொடுக்கின்றனர். இதுவரை சக்திப் பகுதியினர் வடதமிழீழத்தில் உள்ள மக்களுக்கு மொத்தம் பன்னீராயிரத்து நானூற்றி எண்பது இரட்டைச் சூட்டடுப்புக்களை கட்டிக்கொடுத்துள்ளனர். இவைதவிர, பல உணவுச் சாலைகளுக்கு பெரிய அளவிலான இரட்டைச் சூட்டடுப்புகள் ஐநூறுவரை கட்டிக்கொடுத்துள்ளனர்.

மேலும், சக்திப் பிரிவினர் கட்டிக்கொடுக்கும் இந்த இரட்டைச் சூட்டடுப்பை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் பயன்படுத்த முடியாதிருந்த



போது, அவர்களுக்கு கடன் அடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்பைக் கட்டிக்கொடுத்து நன்மை அடையவும் செய்கின்றனர். இந்தவகையில் தீவகம், வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து, அகதி முகாம்களில் தங்கிவாழும் மக்கள் இதன்மூலம் பெரிதும் நன்மையடைகின்றனர். அதனால் வடதமிழீழத்தில் வாழும் அனைத்து மக்களும் இரட்டைச்சூட்டடுப்பு மூலம் நன்மையடைய முடிகின்றது. இதேவேளையில் வேலையின்றி இருக்கின்ற மக்களுக்கு, வேலைவாய்ப்பினை அளிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. இப்படியான நன்மை கிடைக்கக் கூடிய அனைத்து ஊக்குவிப்பு வேலைகளையும் சக்திப் பகுதியினர் செய்துவருகின்றனர். எம் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொருண்மியத் தடைகளை உடைத்தெறிய, தற்சார்புப் பொருண்மியத்தில் உள்ளூர் உற்பத்தியினையும் சக்தியினையும் முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

சக்திப் பகுதியினர் மக்களுக்கு ஆற்றிவரும் நன்மைகள் ஏராளம். இத்தோடு மேலும் பல ஆய்வு முயற்சியிலும் சக்திப் பகுதியினர் ஈடுபட்டுவருகின்றனர். இதன் மூலம் புதிய, புதிய இலகுவான வழிமுறையினை செயற்படுத்திவருகின்றனர். இதன் நிமித்தம் மனிதன் தன் தேவைகளை சிரமமின்றி நிறைவேற்றும் இவ்வேளையில், பூரண நன்மையடைவதோடு மனத்திருப்தியும் அடைகின்றான்.

சக்திப் பகுதியினர் மக்களுக்குக் கட்டிக்கொடுக்கும் அடுப்புகளில், 'உயர் சமையல் இரட்டைச் சூட்டடுப்பும்' ஒன்றாகும். இதனை சிற்றுண்டிச்சாலைகள், விடுதிகள் ஆகியவற்றுக்கு கட்டிக்கொடுக்கின்றனர். இவ்வகையான இரட்டைச் சூட்டடுப்பிலும், இரண்டு அடுப்புக்களிலும் ஒரேநோக்கில் சமைக்கக் கூடியதாக இருக்கின்றது. பெருந்தொகையான உணவுகளை சமைப்பதற்கு இது பயன்படக் கூடியதாக இருக்கின்றது. அத்தோடு இதிலும் 50% விறகு மீதப் படுத்தப்படுகின்றது. தற்போது இந்தவகை இரட்டைச் சூட்டடுப்பை யாழ். குடாநாட்டில் பல இடங்களிலும் சக்திப் பகுதியினர் கட்டிக்கொடுத்துள்ளனர். குறைவான வெப்பத்துடன் சமைக்கும் சில பொருட்களுக்கும் இது முதன்மையானதாக பயன்படக்கூடியதாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக பாலினிப்பு (சொக்லட்) தொழிற்சாலையில் திரவப் பதார்த்தங்களை அடுப்பில்வைத்து எரிக்கும்போது, அதற்குக் குறைவான வெப்பமே தேவைப்படுகின்றது. எனவே அப்படியான தொழிற்சாலைகளுக்கு, இந்த இரட்டைச் சூட்டடுப்பில் திரவப் பதார்த்தங்களை வைத்து எரிக்கும்போது, இது பதமான தன்மையுடன் இறக்கக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் இந்தப் பதார்த்தத்தில் விறகின் மணம் ஏற்படாதவண்ணம், புகைபிடிக்காத முறையில் சமைக்கக் கூடியதாக இருக்கின்றது. இதேரீதியில்தான் சிற்றுண்டிச் சாலைகளிலும் உயர் சமையல் இரட்டைச் சூட்டடுப்பை விரும்பிப் பாவிக்கின்றனர். ஆனால் சிற்றுண்டிச்சாலைகளுக்கு பொதுவாக குறைந்த வெப்பம் தேவையில்லை. ஆதலால் கூடிய வெப்பத்தைப் பெறக்கூடிய முறையிலும் இதனைப் பாவிக்க முடிகிறது. சக்திப் பகுதியினரின் இப்படியான நன்மை பயக்கக்கூடிய செயற்பாடுகளால், நாம் ஒரு தன்னிறைவான பொருண்மியத்தைக் கட்டியெழுப்பலாம் என்பதில் எதுவித ஐயமுமில்லை. ■

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் -

# அல்ஜீரிய...

பல்வேறு அரசியல் நிகழ்வுகளும் காரணமாகின எனவும் பல ஆய்வாளர் கருதுகின்றனர். ஈராக் பணியவைக்கப்பட்டபோது, அரபுலகம் கைகட்டி நின்றமை -மேற்காசிய அமைதி உடன்பாட்டிற்கான எதிர்ப்பு -அதைத்தொடர்ந்து கெப்ரோன் மசூதிப் படுகொலையின் தாக்கம் -பொசுனிய முசுலிம்களுக்கு எதிரான கொடுமைகளை உலகம் கைகட்டிப் பார்த்து நிற்கின்றமை எனப் பல காரணிகள் இவர்கள், தன் மானத்தைத் தாக்குவதாகத் தெரிகின்றது. எனவே இத்தகைய நிலையிலே அல்ஜீரிய இராணுவம் எவ்வளவு தூரம் அரசுக்கு சாதகமாக செயற்படும் எனச்சொல்ல முடியாது எனக் கருதப்படுகின்றது. இத்தகைய நிலையிலே கடந்த மார்ச் மாதத்தின் இரண்டாம் வாரம் கிழக்கு அல்ஜீரியப் பகுதியில் நடைபெற்ற மிகப்பாரிய சிறையுடைப்பில் இராணுவத்தினர் சிலர் போராளிகளுக்கு உதவியதாகக் கூறப்படுகின்றது. இச்சிறையுடைப்பின்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட இசுலாமிய அடிப்படைவாதப் போராளிகள் என சந்தேகிக்கப்பட்டோர் தப்பியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆறு வாரம் நீடித்த அமைதி முயற்சி

இத்தகைய அதிகரிக்கும் நெருக்கடிகள் காரணமாகவே கடந்த செப்டம்பர் மாதமளவில் சனாதிபதி செறாபால், 3 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் பிரெஞ்சுப் பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்ற இருதலைவர்களான பெலடிக்சையும் மதானியையும் அணுகினார். போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கோரிய சனாதிபதி, 63 வயதான மதானியையும் 38 வயதான பெலடிக்சையும் கடுமையான சிறையிலிருந்து வீட்டுக்காவலுக்கு மாற்றினார். இச்செய்தி அல்ஜீரியாவில் மட்டுமன்றி, உலகெங்குமே பரபரப்பை ஏற்படுத்தியது. இவ்விரு தலைவர்களுக்கும் தமது குழுக்களோடு தொடர்புகொள்ள வேண்டி, தொலைத்தொடர்பு வசதிகள்கூட அரசால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன; ஆனால் ஆறு வாரமே நீடித்த அமைதி முயற்சி, இறுதியில் தோல்வியில் முடிவடைந்தது. இப்போது இருதலைவர்களும் மீண்டும் சிறைக்குக் கொண்டு போகப்பட்டுவிட்டனர். அல்ஜீரிய சனாதிபதியோ போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, போரைத் தொடருமாறு தூண்டியதாக இவர்கள் மீது பழிபோடுகின்றார். இவர்களோ தம்மை முற்றாக விடுவித்து, சுதந்திரமாக இயங்கவிட்டாலே, அமைதி முயற்சியில் தாம் ஈடுபடமுடியும் என அரசிடம் கூறியதாகத் தெரிவிக்கின்றனர். எது எப்படியிருந்தபோதும் இப்போது மீண்டும் வன்முறை அல்ஜீரியாவில் கொடிகட்டிப் பறக்கின்றது. வாராந்தம் 300 பேர்வரை கொல்லப்படுவதாகவும் **அங்கு இப்போது சடலங்கள் எண்ணப்படுவதில்லை என்பதாகவும் அனைத்துலக மன்னிப்புச்சபை கூறுகின்றது.** இதேவேளை இராணுவத்திற்குள்ளே உள்ள கடும்போக்காளர் அமைதி முயற்சிகளை விரும்பவில்லை என்றும் தெரிகின்றது. இராணுவ மேலாளரான ஜெனரல் லமாரி என்பவர், "என்ன விலை கொடுத்தேனும் இச்சக்திகளை அழிப்போம்" என அறைகூவல் விடுக்கின்றார். இப்போது இராணுவத் தீர்வே வேண்டும் என்போரின் கையே ஓங்கி இருப்பதாலே உள்நாட்டுப் போரால், அல்ஜீரியா இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது. **'முற்றாக அழித்தொழிப்போர்'** (Eradicaters) என அழைக்கப்படும் இந்த இராணுவ கடும்போக்காளரின் நடவடிக்கைகளுக்குத் தமது போராட்டத்தில் முதற் தடவையாகக் குண்டுகளை வெடிக்கவைத்து, தமது பதிலை G. I. A. அமைப்புத் தெரிவித்து வருகின்றது. இவ் விமானக் கடத்தலும் அதிகரித்த வன்முறையின் ஒரு வெளிப்பாடாகவே கருதப்படுகின்றது.

அல்ஜீரிய நெருக்கடியில் தவிர்க்கமுடியாத வகையில் பிரான்சு சம்பந்தப்பட்டு விட்டது. அல்ஜீரிய அரசை எவ்வாறேனும் காப்பாற்றவேண்டும் என்பதில், பிரான்சு காட்டும் தீவிரம் இப்போது புதிய நெருக்கடியொன்றையே அங்கு ஏற்படுத்திவிட்டது. இன்று பிரான்சில் தகுந்த பொருண்மிய மேம்பாடு இன்றி, நகர்ப்புறங்களில் வாழும் 50 இலட்சம் இசுலாமியரில் பெரும்பாலானோர் இசுலாமிய அடிப்படைவாத அமைப்புக்களுக்கு ஆதரவானவர் என பிரான்சு சந்தேகிக்கின்றது. குறிப்பாக இரண்டாவது தலைமுறை தமது சொந்த அடையாளங்களைத் தேடி, இசுலாமியவாதத்தை சார்வதாகக் கருதப்படுகின்றது. இப்போது பிரான்சியப் பொலிசார் இத்தகைய புறநகர்ப் பகுதிகளிலேயே அடிக்கடி தேடுதல் நடத்தி, இவர்களில் பலரைக் கைது செய்கின்றனர். அண்மையில் G. I. A. அமைப்பிற்கு அனுப்பப்படவிருந்த பெருமளவு ஆயுதங்களைத் தாம் கண்டெடுத்ததாக இவர்கள் கூறுகின்றனர். இவை காரணமாக முசுலிம்களுக்கு எதிரான ஒருவகை இனவாதப்போக்கு பிரான்சில் வளர, பிரான்சிய அரசே காரணமாக இருப்பதாக இப்போது பலரும் குற்றம் சாட்டுகின்றனர். பிரான்சிய சமூகம் தம்மை ஒதுக்குவதாக, வேலைவாய்ப்புக்களில் வேறுபாடு காட்டப்படுவதாக இம்முசுலிம்கள் கருதுகின்றனர். Giles Kepd என்னும் அரசறிவியல் ஆய்வாளர் இதுபற்றி எழுதிய Islam's Suburs, To the West of Allah என்கின்ற இருநூல்களுமே, இத்தகைய மக்களிடையே தீவிர இசுலாமியவாதம் வளர்வதையும் ஏனைய சிறுபான்மை மக்களில் பலரும் மேற்கில் இசுலாமோடு தம்மை அடையாளம்காட்டி, தற்காப்பு உணர்வுபெறுவதையும் விளக்குகின்றன.

**எனவே அல்ஜீரியச் சிக்கல் என்பது, இத்தகைய பன்முகப் பண்பாட்டுச் சிக்கலின் ஒரு வெளிப்பாடாகி விட்டது.** இசுலாமியவாதத்தின் அடிப்படையில் -இசுலாமியத் தீர்வொன்றை முன்வைக்க முயலும் அல்ஜீரியப் போராட்டம், இசுலாமிய உலகிலே மதச்சார்பற்றவை எனக் கூறிக்கொள்ளும் மேற்குலகம் முண்டுகொடுக்கும் அரசுகளின் இயலாத் தன்மையை -இங்கெல்லாம் இடதுசாரி அமைப்புக்கள் இல்லாமற்போனதன் பின்னான வெற்றிடம் நிரப்பப்படும் வகையை விளக்குகின்றது. ஏற்றத்தாழ்வுகளும் ஏமாற்றுக்களும் இருக்கும் வரையில் முரண்பாடுகள் முற்றி, போராட்டங்கள் வெடித்து அவை வரலாற்றை நகர்த்தும் விதிகளாகி விடுகின்றன. ■

நன்றி: ஈழநாதம்

# கணிதத்தில்...

மற்றைய பாடங்களைப் போல் அல்லாது முன் கூட்டியே வினாக்களை தெரிந்து கொள்கிறோம். அதனை திரும்பத் திரும்ப செய்து பயிற்சி எடுப்பதில்லை. மாணவர்களின் அசட்டையீனமே கணித பெறுபேறு குறைவிற்குக் காரணம் என ஆணித்தரமாக கூற முடியும். சில வேளைகளில் கவனயீனப் பிழைகளும் ஏற்படுவதுண்டு.

"தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வினை வரவேற்கிறேன்; சிறீலங்கா அரசு திட்டமிட்ட முறையில் எமது கல்வியை பாழடிக்க முனைந்தவேளை, மாணவர் கல்வி என்றும் அழியக் கூடாது என்ற ஒரே குறிக்கோளுடன் எமது தேசியத் தலைவர் தமிழீழக் கல்விக் கழகத்தை ஆரம்பித்து அதனூடாக எமது கல்விக்கு வழிகாட்டி நிற்கிறார். முன்னைய காலங்களில் தேர்வு நடக்குமா? என்ற சந்தேகத்துடன் புத்தகத்தை புரட்ட வேண்டிய நிலையை மாற்றி, திட்டமிட்டபடி தேர்வு நடக்கும் என்ற

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



**ஈழநாதம் (வன்னிப்பதிப்பு) முதலாண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற சிறுகதை**

**சிறு கதை**




காலை நேரத்து மஞ்சள் வெய்யில் மண்மீது பரவத் தொடங்கியிருந்தது. கடிகார முள்ளை அடிக்கடி சந்தித்துத் திரும்பின என் கண்கள். என் மனத்தின் வேகத்தாலோ என்னவோ கடிகார முள் வெகுவேகமாக நகர்வது போன்றிருந்தது எனக்கு.

அதற்கேற்ப என் கரங்களும் வெகு வேகமாக தட்டிலிருந்த பூக்களை எடுத்து மாலையாக்கிக் கொண்டிருந்தன.

காலத்தின் நகர்வில் எத்தனையோ பேர் மறைந்து விடுகிறார்கள், என்பது உண்மைதான். இயற்கையின் நியதி தான். ஆனால் எமது கிராமத்து மண்ணிலே பிறந்து வளர்ந்து ஓட்டி உறவாடிய அந்த மைந்தர்கள் காலத்தின் தேவைக் காய்த் தம்மை ஈந்து மாவீரர்கள் ஆன செய்தியை அனைவராலும் ஜீரணிக்க முடியாமற்தானிருந்தது. அதனால் மறைந்தும் மறையாத அந்த மாவீரர்களைக் கிராமத்தின் மத்தியிலே சிலை வடிவில் அமைத்துத் திருப்தி செய்து கொண்டது அந்தக் கிராமம்.

ஆம், எங்கள் வீட்டின் முன்னால் அமைந்துள்ள பிரதான வீதியில் பன்னிரு வேங்கைகளும் சிலை வடிவில் சிரித்துக் கொண்டிருந்து தம் கொள்கையின் உறுதிப்பாட்டை உணர்த்திக் கொண்டிருந்தனர்.

தினமும் அலுவலகம் செல்வதன் முன் அந்த மறவர்களுக்கு மலர் மாலை அணிந்து பூசிப்பதையும் என் காலைக் கடமைகளில் ஒன்றாக்கியிருந்தேன். அலுவலகம் புறப்படு முன் மாலைகளைப் புனைந்து அவர்களுக்குச் சூட்டிச் சென்றால்த்தான் எனது

**"காலத்தின் நகர்வில் எத்தனையோ பேர் மறைந்து விடுகிறார்கள் என்பது உண்மைதான்; இது இயற்கையின் நியதி. ஆனால் எமது கிராமத்து மண்ணிலே பிறந்து வளர்ந்து ஓட்டி உறவாடிய அந்த மைந்தர்கள், காலத்தின் தேவைக்காய் தம்மை ஈந்து மாவீரர்கள் ஆன செய்தியை அனைவராலுமே ஜீரணிக்க முடியவில்லை"**

காலைக் கடமைகள் நிறைவுற்ற திருப்தி எனக்கு. அந்தத் திருப்தி தரும் மகிழ்ச்சியில் அன்றைய அலுவலகப் பணிகளை என்னால் இன்பமாக ஆற்ற முடியும்.

வீட்டை அலங்கரிக்கப் பூக்களை நாடியகாலம் போய் இன்று நாட்டைக் காத்த நல்லவர்களுக்காய் அதன் தேவை மாறியிருந்தது. வீட்டில் எனது உடமைகள் எதை யார் எடுத்தாலும் எனக்கு வராத கோபம் பூமரங்களில் பூக்களைப் பறித்தால் வந்துவிடுகிறது. யாராவது தேவைக்கு பூக் கேட்டு வந்தால் கூட என் குணம் அறிந்த அம்மா;

"அவளைக் கேட்டுப் பிடுங்குங்கள்" என்று எச்சரிக்கையாகவே கூறி வைத்துவிடுவா.

அன்றும் கடிகார முள் மணி எட்டைத் தாண்ட முன் நான் அலுவலகத்தை அடைவதற்காய் அவசரமாக மாலைகளைக் கட்டிக் கொண்டிருந்தேன்.

**"சும்மா சொல்லப்படாது; ஒரு ஊரைக் கட்டி அவுக்கிறதெண்டால் இலேசான காரியமே.... அந்தக் காலத்திலை... விதானைமார் செய்த வேலைகளையெல்லாம்... இப்ப இந்தச் சின்ன வயசில இந்தப் பிள்ளையள் எவ்வளவு விளக்கமாச் செய்யுதுகள்..."**

"அம்மா.... பூ அக்கா இல்லையோ"... என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். இனியன் என் எதிரே வந்து நின்றான்.

அவன் பெயர் மாத்திரமல்ல, முகமும் எப்போதும் இனிமையாகத் தானிருக்கும்.

"பொருத்தமாகத் தான் பேர் வைச்சிருக்கினம்" என்று நான் அவனுக்குச் சொன்ன சந்தர்ப்பங்களிலெல்லாம் அவன் முகத்தில் பிரகாசம் தெரிந்தது.

எமது கிராமத்தின் காவற் தெய்வங்களாக சிலையில் அமர்ந்து சிரித்துக் கொண்டிருக்கும் அந்த வீரர்களுக்கு நான் தினமும் பூமாலை சூட்டுவதால் அவன் எனக்கு வைத்த பெயர் "பூ அக்கா".

வழமையை விட அன்று அவசரமாக வந்த இனியன் என்னிடம்,

"அக்கா... சண்டை தொடங்கினால் காயப்படுகிறவைக்கு முன் நின்று உதவி செய்யிறதுக்கு ஊர்ச் சனங்களிலை விரும்பிறவைக்கு முதலுதவி வகுப்பு வைக்கப் போறம். அதால... விரும்புறவையின்ரை பேரை எடுத்துத் தாங்கோ..."

என்றவாறே என்னை நோக்கினான். "ஓம் இனியன்" என்ற பதில் கிடைத்ததும் வந்த வேகத்துடனேயே திரும்பினான் அவன்.

"என்ன... தம்பி அவசரமாய்ப் போறியள்?" என்று வெளிவாங்கில் படுத்தபடி இருந்த நோயாளியான எனது அம்மா இனியனிடம் பேசுவது என் காதில் விழுந்தது.

"ஓம் அம்மா... நிறைய வேலையிருக்கு" பதில் சொல்லியவாறே இனியன் சைக்கிளை வேகமாக நகர்த்திக் கொண்டிருந்தான்.

அலுவலகத்திற்குப் புறப்படும் அவசரம் எனக்கு. என்னைவிட அவசரம் தெரிந்தது எமது கிராமத்துப் பொறுப்பாளனான இனியனிடம்.

அவன் எமது கிராமத்துப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டதிலிருந்து எமது கிராமத்தின் தேவைகள், மக்களின் பங்களிப்புக்கள், விழிப்புணர்வுகள் பற்றி எமது வீட்டில் அனைவருடனுமே அடிக்கடி வந்து கதைத்துச் செல்வது அவனது வழக்கம். அதற்கேற்ப அவனது சிந்தனைகள் செயல் வடிவம் பெறுவதால் வயது வேறுபாடின்றி கிராமத்திலுள்ள அனைவருமே ஒத்தாசையாயிருந்தனர். வயதில் இளையவனும் குணத்தில் இனியவனுமான அவனுக்கு எமது வீட்டில் மாத்திரமல்ல, எமது கிராமத்திலேயே ஒரு தனி மதிப்பு.

தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு வேலைப்பளு காரணமாக இனியன் எமது வீட்டுக்கு வரவில்லையென்றால்,

"எங்கே... அந்தத் தம்பி ... இனியனைக் காணேல்ல" என்றபடியிருப்பா அம்மா.

"உங்களை மாதிரி ஒன்றிரண்டு வேலையளே, இனியனுக்கு. எத்தினை... வேலையள்... இயக்க வேலையளோடை... எங்கட கிராமத்தின்ர தேவைகள்... முழுப் பொறுப்பும்..."

நான் விமர்சித்துக் கொண்டிருப்பேன். அம்மா கேட்டுக் கொண்டிருப்பா - உன்னிப்பாக.

இந்தச் சின்ன வயதிலை எத்தனை பெரிய பொறுப்புணர்வு அவனிடம், எண்ணிப் பார்க்கவே எனக்குள் ஒரு வித மகிழ்வுடன் கூடிய வியப்பாக இருந்தது. "எங்கடை மண்ணின்ரை தேவை. எத்தனை வேகமாக எங்கடை பிள்ளையளை வளர்த்து விட்டிருக்குது" எனது உள்மனம் எனக்கு இப்படிச் சொல்லிற்று.

அலுவலக வேலைகள் முடிந்து வீட்டிற்கு வந்த நான் இனியனின் வேண்டுகோளையிட்டு தங்கை வித்தியாவுடனும் கதைத்து ஒரு முடிவுக்கு வந்தேன். இணைந்து நின்று போராட்ட சூழலை உணர்ந்து செயற்படக் கூடியவர்கள் என என் மனதில் பட்ட கிராமத்தவர்கள் சிலரை நேரில் சென்று சந்தித்துக் கதைத்தேன். முதலுதவி வகுப்பிற் பயிற்சி பெறுபவர்களுக்கான பட்டியல் ஒன்று தயாரித்தாயிற்று என்ற நிறைவுடன் இருள் கவிந்த அந்தப் பொழுதில் கேற்றைத் திறந்து கொண்டு வீட்டினுள் வந்தேன். தங்கை வித்தியா விளக்கேற்றிக் கொண்டிருந்தாள்.

முற்றத்தில் போடப்பட்டிருந்த வாங்கில் இருந்தவாறே அப்பாவும் பக்கத்து வீட்டுச் சிதம்பரம் அண்ணரும் கதைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அப்பாவின் குரல் அருகில் வந்த எனக்குத் தெளிவாகக் கேட்டது.

"என்ன அண்ணை.... விழிப்புக் குழுவிற்குப் போற எல்லோருக்கும் காலமை ஆறு மணிக்குக் கூட்டம் எண்டு வரச் சொல்லிச்சினம்..... வேலை வில்லட்டி எல்லாத்தையும் விட்டுப்போட்டு.... அங்க போனால் எத்தினை மணிக்குக் கூட்டம் தொடங்கிச்சினம்".

அப்பாவின் கருத்தை ஆமோதிப்பது போல,

"ஓம் அண்ணை... எட்டு மணிக்குப் பிறகு தானே இனியன் தம்பி வந்திது.... அவைக்கென்ன" என்றார் சிதம்பரம் அண்ணை.

தங்கை வித்தியா குறுக்கிட்டாள்.



"அப்பா... இனியனுக்கு எத்தினை வேலை இருக்கும். நாட்டில என்னென்னவோ நடக்கிறது. உங்களுக்கு உங்கட கூட்டம் தான் முக்கியம் அப்படி என்ன அவசரம் உங்களுக்கு".

காட்டு மிராண்டிப் படைகள் செய்த அட்டூழியங்களிலிருந்து எங்களை விடுவித்து, மானம், கௌரவத்தோடை வாழ வழிகாட்டிய இன்றைய பரம்பரையினரின் இனிய கொள்கைகளை மறந்து வயோதிபங்கள் தம் வாய்க்கு வந்தபடி பேசிக் கொள்வது எனக்குள் எரிச்சலை மூட்ட,

"இனியன் ஆக்கள் இல்லாட்டாத் தெரியும் உங்கட அவசரங்கள்....

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆரம்பம் முதலே சில...

அரசும் அதில் உள்ளவர்களும் தமிழ் மக்களுக்கு எதிராக மிக மோசமாக இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருந்தனர் எனப் பதிலளித்தார்.

கொழும்புச் செய்தித்தாள்கள், விடுதலைப் புலிகள் மீண்டும் பதுங்கு குழிகள் அமைக்கத் தொடங்கி விட்டார்கள் என செய்தி எழுதுகின்றனவே? எனச் செய்தியாளர் கேட்டதற்கு,

ஆரம்பத்திலிருந்தே தமிழரின் பிரச்சினையை தீர்க்கக்கூடாது என சில இனவாதச் சக்திகள் செயல்பட்டு வருகின்றன. இவர்கள் சமாதானமும் செய்ய விடமாட்டார்கள்... சண்டையும் செய்யவிடமாட்டார்கள் எனச் சிரித்தபடி தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தான் தயாராக இருப்பதாக இன்றைய சனாதிபதி பிரதமராக இருந்த காலத்தில் அறிக்கை மூலமும், எமக்கு அனுப்பி வைத்த கடிதங்கள் மூலமும் தெளிவுபடுத்தியுள்ளார். இதை நன்கு வலியுறுத்திக் கூறியுள்ளார். ஏனைய இதர மக்கள் அனுபவிக்கும் வசதிகளுடன் தமிழ் மக்களும் வாழ வேண்டுமென அவர் விரும்புவது தெரிகிறது.

இதனால் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என எதிர்பார்க்கின்றோமென திரு. தமிழ்ச்செல்வன் இன்னொரு கேள்விக்கு பதிலளிக்கும் போது குறிப்பிட்டார்.

இதேவேளை திரு. தமிழ்ச்செல்வன் அவர்களை இலண்டன் ஐ. ரி. என் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த செய்தியாளர்களும் செவ்வி கண்டனர்.

விடுதலைப் புலிகள் இன்னொரு குழுவுடன் சேர்ந்து இயங்கும் சாத்தியமுண்டா? என்ற அவர்களின் கேள்விக்கு சுமுக நிலை ஏற்பட்டால் அது பற்றி சிந்திக்கலாம் எனத் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

வடக்கும் - கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக பிரிக்கப்படுவது சம்மந்தமான பேச்சைப் பற்றி என்ன கருதுகின்றீர்கள் என்ற கேள்விக்கு -

எண்ணிப்பார்க்க முடியாத விடயம் என அவர் பதிலளித்தார். ■

## தமிழர்களுக்காக...

மேலும் அவர் தெரிவிக்கையில்,

சிறீலங்காவின் தற்போதைய அரசு தமிழர் பிரச்சினை குறித்து, பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால், அது விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மட்டுமே பேசக் கூடியதாக உள்ளது. அவ்வாறு விடுதலைப் புலிகளுடன் பேசுவதால் மட்டுமே தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என்றார். ■

## சுவிசில் நடைபெற்ற 'எழுச்சிக்கான மாலைப் பொழுது'

சுவிசில் சூரிச் மாநிலத்தில் Limmathaus மண்டபத்தில் 12.02.1995 இரவு 7 மணிக்கு 'காந்தருபன் அறிவுச்சோலை' சிறுவர்களின் நிதிக்காக முதன் முதலாக முழுநீள 'எழுச்சிக்கான மாலைப்பொழுது' (4 மணிநேரம்) எனும் இசை நிகழ்ச்சியை 'சுவிஸ் தமிழ்க் கலைஞர் ஒன்றியம்' நடாத்தியது. இந்த இசை நிகழ்ச்சிக்கு சுவிசின் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த மண்டபம் நிறைந்த தமிழ் மக்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் அவர்கள் மங்கள விளக்கினை ஏற்றியதைத் தொடர்ந்து, இசை நிகழ்ச்சி தொடங்கியது. இந்நிகழ்வில் 30 இற்கும் மேற்பட்ட தமிழீழ எழுச்சிப்பாடல்கள் பாடப்பட்டன. பல கலைஞர்களிற்கு இது முதல் மேடை நிகழ்ச்சி எனினும் பல நிறைவுகளிற்கும் பாராட்டுதல்களிற்கும் மத்தியில் சில குறைகளும் தென்பட்டன.

தற்பொழுது சுவிற்சர்லாந்தில் உள்ள பல இசைக் குழுக்கள், எழுச்சிப் பாடல்களைப் பரவலாகப் பாடிவருவதும் இதற்கு விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையினர் கலை, பண்பாட்டுக் கழகத்திற்கு மட்டுமல்லாமல், மற்றைய இசைக் குழுவினருக்கும் வளரும் கலைஞர்களுக்கும் தமது உதவியையும் ஆதரவையும் நல்கி வருகின்றனர். இந்த வரிசையில் சுவிசின் 'வோ' மாநிலத் தமிழ்ச் சபையின் ஆதரவில் காந்தருபன் அறிவுச்சோலை சிறுவர்களின் வளர்ச்சி நிதிக்காக 'சங்கமம்' இசைக் குழுவினரின் 'இன்னிசை இரவு' எனும் இசை நிகழ்ச்சி 11.03.1995 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடாத்த ஏற்பாடாகி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ■



சுவிஸ் தமிழ் கலைஞர் ஒன்றியம் - சுவிஸ் -

## நான்கு ஒலி, ஒளி...

'விடுதலைப் போர் முரசு' பாடல் ஒலிப்பதிவு நாடாவும், விடுதலைப் புலிகள் (நோர்வே கிளை) கலை, பண்பாட்டுக் கழகத்தால் உருவாக்கப்பட்ட 'சுதந்திர தாகம்' ஒலிப்பதிவு நாடாவுமே ஒரே மேடையில் வெளியிடப்பட்டன.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளையவனின் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில், மங்கள விளக்கை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான், விடுதலைப். புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையை கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. ம. அன்பரசனும், வெளியீட்டுரையை கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்தினர். கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை இவற்றை வெளியிட்டுவைக்க, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி பெற்றுக்கொண்டார். தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவித்தார். திருமதி நாச்சியார் செல்வநாயகம், திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும் வண்ணப்பட ஒளிப்பேழை இயக்குநர்கள் திரு. பொ. தாசன், திரு. ச. யேசுதாசன் ஆகியோர் பதிலுரைகளையும், திரைப்படப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பகலவன் நன்றியுரையையும் நிகழ்த்தினர். ■

## யாழ். மருத்துவ...

நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டுவந்தமை, இதனால் சில மகப்பேறுகள் வரும் வழியில்கூட நடைபெற்றமை இதனால் குழந்தைகள் பிறப்பு மிகவும் கஸ்டங்களை எதிர்நோக்கியதாலும் சிசுக்களின் இறப்பு அதிகமாக ஏற்பட்டது எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ■

## சந்திரிகா அரசை...

ஆகும். அத்தோடு 'போர் நிறுத்தம்' தொடர்பாக இராணுவம் அரசின் நிலைப்பாட்டிற்கு உடன்படுவதுபோன்று காட்டிக்கொண்டிருப்பினும், அதன் கோரிக்கைகள் சில, போர் நிறுத்தத்திற்கு நிபந்தனைகள் விதிப்பது போன்றே உள்ளது.

இவ்வகையில் சந்திரிகா அரசை, மக்கள் அளித்த தீர்ப்பிற்கு எதிரான வழியில் இராணுவம் திருப்பியுள்ளது எனலாம். சந்திரிகா அரசும் அதனை விளங்கியோ அன்றி விளங்காமலோ ஏற்றுக்கொண்டுள்ளது. இது சந்திரிகா அரசில் பொதுவாகக் காணப்படும் தடுமாற்றத்தினதும் முன்னுக்குப்பின் முரண்பாடான செயற்பாட்டின் அடிப்படையிலானதாகவும் இருக்கலாம்.

ஆனால் காரணம் எதுவாக இருப்பினும், முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைக்குப்பின் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நடக்குமா? நடக்காதா? என ஐயப்படக்கூடிய அளவிற்கு இழுத்தடிக்கப்பட்டமைக்கும் - மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தை வெற்றிபெறாமல் போனமைக்கும் -நான்காம்கட்டப் பேச்சுவார்த்தையின் கால இழுத்தடிப்பிற்கும், முதலாம் கட்டப் பேச்சுக்களின்பின் அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமையே காரணமாகும். அதாவது முதலாம் கட்டப் பேச்சுக்களின்பின் இராணுவ அழுத்தத்திற்கு இடம்கொடுத்து, புதிய அரசியற் தளத்தில் நின்று அரசு பேச முனைந்ததன் விளைவே இதற்குக் காரணமாகும். ஆகவே இனி சமாதானப் பேச்சுவார்த்தை என்பது, அரசு தனது நிலையை மறுபரிசீலனை செய்வதிலேயே தங்கியுள்ளது. ■

## உடன்பாடுகள்...

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடனும் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடனும் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இச்சந்திப்பின்போது, சிறீலங்கா அரசுக்கும் தங்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை மிகவிரிவான முறையில் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களும் திரு. தமிழ்ச்செல்வன் அவர்களும் எடுத்துக் கூறினர்.

பேச்சுவார்த்தையின்போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் பல, இன்னமும் பூரணமாக நிறைவேற்றப்படவில்லை என்றும், பல பொருட்களுக்கான தடை நீக்கப்பட்டபோதிலும் சீரானமுறையில் அவை இன்னும் யாழ். குடாநாட்டை வந்தடையவில்லை என்றும் புள்ளிவிபரங்களுடன், கண்காணிப்புக் குழுத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கப்பட்டது.

"சிறீலங்கா அரசு உடன்பாடு தெரிவிக்கின்றது; ஆனால் சிறீலங்கா இராணுவத்தினர் அதற்கு மாறாகச் செயற்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது" என, அனைத்துலக சமூகத்தைச் சேர்ந்த மோதல் மேற்பார்வைக் குழுத் தலைவர்களுக்கு விடுதலைப் புலிகள் விளக்கினர். ■

## இலங்கை இன்டர்...

இருப்பதாலேயே அவர்களைக் கைதுசெய்து விசாரணை நடத்த முடியாதிருப்பதாகக் காரணமும் கூறியுள்ளது. ஆயினும் பிரபாகரனையும், பொட்டம்மானையும் கைது செய்வதற்குத் தேவையான உசார் நிலையிலேயே சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் வைக்கப்பட்டுள்ளதாக அப்பதிலில் மேலும் விளக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முதலாவது உத்தியோகபூர்வமான இன்டர்போல் தொடர்பானது, இந்திய மத்திய அரசு விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையே கசப்புணர்வை உருவாக்குவதற்கு மேற்கொள்ளும் தந்திரோபாயமென சிறீலங்காச் செய்தித்தாள்களே கருத்து வெளியிட்டுள்ளன. "சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தவரையிலும் இந்த நாடுகடத்தல் விவகாரம் கசப்புணர்வுக்குரியதாக அமையக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது" என அவை எழுதியுள்ளன. இதன் மூலம் சிறீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே காணப்படவேண்டிய 'சர்ச்சைக்குரிய' விவகாரங்களில் ஒன்றாக இதனை மாற்றி, பேச்சுவார்த்தையை முறிவடையச் செய்வதே 'இந்தியாவின் உட்சதி' என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ■

## வாசுதேவ நாணயக்காரா...

சமாதானம் தொடர்பான செய்தியை தங்களிடம் ஒப்படைப்பதற்காக, தங்களைச் சந்திப்பதற்கு வாய்ப்புத் தருமாறு, தாம் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அனுப்பிய கடிதத்தினை தலைவர் பிரபாகரன் ஏற்று, தமக்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும், அக்கடிதத்தில் பெருந்தொகையான சமாதான விரும்பிகள் கையொப்பமிட்டிருந்ததாகவும் யாழ். நகர் செல்வதற்கு முதல் திரு. வாசுதேவ நாணயக்காரா தெரிவித்திருந்தார்.

யாழ். நகரில் அவரைச் சந்தித்த செய்தியாளர்களுக்குச் செவ்வியளித்த திரு. வாசுதேவ நாணயக்காரா, "பாதையொன்று இல்லாமல், புனர்நிர்மாணம் என்பது முடியாத செயல் எனவும் எரிபொருட்களுக்குத் தடைவிதித்துவிட்டு, வடக்கில் அபிவிருத்தி வேலை செய்வதென்பது கனவில் மட்டுமே நடக்கக்கூடியது என்றும், அரசு சமாதான வழியில் தாமதம் ஆகின்றது" எனத் தான் கருதுவதாகவும், அது மக்களிடமிருந்து விலகிச்செல்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பு திரும்பிய பின்னர், அவர் நடாத்திய மாநாடொன்றில், "சமாதானத்தை ஏற்படுத்த இதுவே நல்ல சந்தர்ப்பம், அதற்கு அரசின் காலதாமதம் தடையாக அமைந்துவிடக்கூடாது" எனக்கூறிய அவர், யாழ்ப்பாணத்தில் 50,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட பேரணியிலும் பின்னர் 20,000 மக்கள் கலந்துகொண்ட பேரணியிலும் தான் கலந்துகொண்டு உரையாற்றியதாகவும் கூறினார். ■

## கணிதத்தில் முதல்......

உறுதியை மாணவர் மனதில் உருவாக்கிவிட்டுள்ளது இக்கல்விப் பேரவை."

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு நடத்தப்பட்டதும் நாம் அதன் முடிவிற்காக காத்திருந்தோம். சாதாரண தரத் தேர்வு நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக இதன் பெறுபேறு வெளியிடப்படல் விரும்பத்தக்கதாகும். அப்படி வெளியிடப்பட்டால் நாம் எந்தப் பாடத்தில் குறைவாக இருக்கிறோம் -எதில் கூடிய ஊக்கம் எடுக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள இலகுவாக இருக்கும்.

உயர் கல்வியைக் கணிதத் துறையிலேயே மேற்கொள்ளவுள்ளேன். தேர்வு முடிவு வெளியானதால் சனவரி முதலே அதனைத் தொடர எண்ணியுள்ளேன் என்றார் செந்தூரன். ■

நன்றி: ஈழநாதம்

# அல்ஜீரிய விமானக் கடத்தலும் அரபுலக - மேற்குலக பண்பாட்டு மோதலும்

உலகஉலா

செச்சென்யா மீதான ருஸ்யப் படையெடுப்பு, பொசுனியாவில் போர் நிறுத்தம் போன்ற பரபரப்பான செய்திகட்கு மத்தியிலும் அல்ஜீரிய விமானக் கடத்தல் சம்பவம் மிக முதன்மையான இடத்தைப்பெறுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அல்ஜீரியாவில் நடந்துவரும் மிகமோசமான உள்நாட்டுப் போரின் பக்கம், இது உலகின் கவனத்தை மீண்டும் நகர்த்தியுள்ளது. 1993 ஆம் ஆண்டுவரையுள்ள இரண்டு ஆண்டுகளிலுமே மொத்தமாகப் பத்தாயிரம் பேர் கொல்லப்பட்டு விட்டதாக அந்நாட்டின் இராணுவ ஆட்சியின் சனாதிபதியாகவுள்ள லிமின் செறாபால் (Liamine zeroual) இப்போது ஒப்புக்கொள்கின்றார். 1994 இல் மட்டும் இன்னொரு எண்ணாயிரம் பேர்வரை பலியானதாகக் கூறப்படுகின்றது. இதுவரை 70 வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டு விட்டனர். இதில் அல்ஜீரியாவின் முன்னைய குடியேற்றவாத ஆட்சியாளரான பிரான்சைச் சேர்ந்தவர்கள் இருபது பேர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய அல்ஜீரியாவின் நிலைமையென்பது, **"மோசமான பயங்கரமான ஒரு கனவு"** என்கின்றது 'மத்திய கிழக்கு மனித உரிமைக்காப்பு அமைப்பு'. அல்ஜீரியாவில் நாளுக்குநாள் வேகமாக முனைப்படைந்துவரும் இசுலாமிய அடிப்படைவாதிகளின் தீவிர வளர்ச்சியானது **வடஆபிரிக்க, மேற்காசிய பகுதிகளிலேயே புதியதொரு அரசியல் பரிமாணத்தை விரைவில் தோற்றுவிக்கும் என நம்பப்படுகின்றது.**

## விமானக்கடத்தல் நாடகம்

எனவேதான், இத்தகைய பின்னணியிலேயே அண்மையில் பரிசுக்குச் செல்வதற்காக அல்ஜீயர்ஸ் விமான நிலையத்திலே தரித்துநின்ற ஏர் பிரான்சின் ஏர்பஸ் விமானக்கடத்தல் சம்பவம் முறியடிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டாலும், இதன் விளைவுகள் பிரான்சில் எதிரொலிக்கும் என்றே கருதப்படுகின்றது. அல்ஜீரிய இராணுவ அரசுக்கு ஆயுத, நிதி உதவிகளை மிகத்தாராளமாக வழங்கிவரும் பிரான்சை ஒரு இக்கட்டான நிலைக்கு இச்சம்பவம் இப்போது தள்ளிவிட்டது. பிரான்சிய விமானத்தைக் கடத்தி, இப்போது கொல்லப்பட்ட நான்கு இசுலாமியப் போராளிகளும் அல்ஜீரியாவின் மிகத்தீவிரமான இசுலாமிய அடிப்படைவாத அமைப்பான ஆயுதம் தாங்கிய இசுலாமியக் குழுவைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படுகின்றது. G. I. A. (Armed Islamic Group) எனச்சுருக்கி அழைக்கப்படும் இவர்களே அல்ஜீரியாவிலுள்ள வெளிநாட்டோரை 1993 ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து கொன்று வருபவர்களாவர். வெளிநாட்டோரைக் கொல்வதற்கு இவர்கள் கூறும் பிரதான காரணம், தற்போதைய அடக்குமுறை இராணுவ அரசு வெளிநாட்டவர் உதவி இல்லாவிட்டால், **இரண்டு வாரங்கள்கூட தாக்குப்பிடிக்காது** என்பதேயாகும். அத்தோடு இவ்விமானக் கடத்தல் சம்பவம், இசுலாமியப் போராளிகளுக்கு எதிராக முனைப்பாகப் பல இராணுவ நடவடிக்கைகளை அண்மைக்காலமாக மேற்கொள்ளும் அல்ஜீரிய அரசின் இயலாத்தன்மையையும் புலப்படுத்திவிட்டது. அத்தோடு 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றியீட்டும் நிலையில் இருந்த இசுலாமிய அடிப்படைவாத அமைப்புக்களின் முன்னணியான இசுலாமிய மீட்பு முன்னணி (FIS -Islamic Salvation Front) தடைசெய்யப்பட்டதும் தேர்தல் முடிவுகளை இடைநிறுத்தி, இராணுவம் சட்டவிரோதமாக ஆட்சியைக் கைப்பற்றியதன் நினைவு நாளையும் குறித்து நிற்கின்றது. 40 மணித்தியாலத்திற்கு மேலாக இவ்விமானத்தைச் சுற்றிவளைத்த 'நிஞ்ஜா' (Ninjas) எனப்படும் அல்ஜீரியாவின் சிறப்புக் காவல்துறை படையணியால் கடத்தலை முறியடிக்க முடியவில்லை. (கறுப்புநிற சீருடையையும் கறுப்புநிற முகமூடியையும் கழுத்துவரை அணிந்த, பலம்வாய்ந்த நிஞ்ஜா படையணி இசுலாமிய அடிப்படைவாதப் போராளிகளுக்கு எதிராகப் போராட சிறப்பாக உருவாக்கப்பட்டது.) விமானத்திலிருந்த, அல்ஜீரியாவில் உள்ள பிரான்சிய தூதரக ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டு வெளியில் வீசப்பட்டபின் -பிரான்சின் அழுத்தத்தின்பின் -அல்ஜீரிய அரசு வேண்டாவெறுப்பாக விமானத்தைக் கிளம்பிச்செல்ல அனுமதித்தது. தென்பிரான்சின் ஒதுக்குப்புறமான விமான நிலையமொன்றில் தரையிறங்கிய இவ்விமானத்தை, திடீரென மறைவாக நெருங்கிய பிரான்சின் சிறப்புக் காவற்றுறை அணி, விமானத்தின் முன்கதவையும் பின்கதவையும் ஒரேநேரத்தில் தாக்கித்திறந்து -விமானத்தின் முன்பக்கம் இசுலாமியப் போராளிகளின் கவனத்தைத் திருப்ப, போலி வெடிகுண்டுகளை வீசி -விமானத்தைக் கடத்திய நால்வரையும் கொன்று, 15 நிமிடத்துக்குள் கடத்தல் நாடகத்தை முடிவிற்குக் கொண்டு வந்தது. மாபெரும் வெற்றி என பிரான்சிய அரசு கூறியபோதும், வெற்றிகரமாக விமானக்கடத்தல் சம்பவம் முறியடிக்கப்பட்டபோதும் இசுலாமியப் போராளிகள் விரும்பியது எதுவோ, அது நிறைவேறிவிட்டது. அல்ஜீரிய அரசின் நீதி பிழைத்தபோக்கிற்கு துணை நிற்கும் பிரான்சின் நிலைப்பாடு, இன்று உலக அரங்கிலே இப்போது அம்பலப்படுத்தப்பட்டு, கேள்விக்குறியாக்கப்பட்டும் விட்டது.




## இசுலாமியவாதிகளின் வளர்ச்சி

132 ஆண்டுகால பிரான்சின் கொடிய குடியேற்றவாத ஆட்சியின்போது, மூன்று இலட்சம்பேர் கொல்லப்பட்டபின், 1962 ஆம் ஆண்டு விடிவுபெற்ற அல்ஜீரியாவில் தொடக்கத்தில் இடதுசாரிப்போக்குள்ள விடுதலை அமைப்பு ஆட்சி நடத்தியதும் பின் அது வீழ்ச்சியடைய, **தமது தேசியப் பண்பினைச் சிதைத்த, மேற்கத்தைய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான முன்னைய தமது விடுதலைப் போரின் தொடர்ச்சியாக -தற்போதைய மேற்குலக ஆதரவு பெற்ற அரசை எதிர்த்து, இரண்டாவது போரை நடாத்துவதாக இசுலாமிய அமைப்புக்கள் கூறிக்கொள்கின்றன.** இப்போதைய மிகமோசமான இழுபறி நிலைக்கு அல்ஜீரிய இராணுவமும் மேற்குலகும் இணைந்து மேற்கொண்ட சனநாயக விரோத சதி நடவடிக்கையே காரணம் என்பது இங்கே குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். பற்பல சிக்கல்களின் பின் புதிய ஆட்சியொன்றை அமைக்க, 1991 ஆம் ஆண்டு டிசம்பரில் நடாத்தப்பட்ட பொதுத்தேர்தலில் FIS எனப்படும் இசுலாமிய மீட்பு முன்னணி பெருவெற்றி பெற்று, ஆட்சியமைக்கும் நிலைதோன்றியபோதே இச்சதி முடுக்கிவிடப்பட்டது. இதன் பயனாக தேர்தல் முடிவுகள் இடைநிறுத்தப்பட்டு, 1992 ஆம் ஆண்டு சனவரியில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி, சனநாயகம் என்னும் முறைமையைக் கேலிக்கூத்தாக்கியது. **அப்போது அமெரிக்கா, ஐரோப்பா போன்றவை மெலிதாக எதிர்ப்புக்குரலை எழுப்பின. ஆனால் உள்ளுக்குள் மகிழ்ந்தன; நிம்மதிப் பெருமூச்சுவிட்டன. அன்று தொட்டு அல்ஜீரியாவின் வரலாறு மாற்றி எழுதப்படத் தொடங்கப்பட்டது.** மக்களிடையே மிகச்செல்வாக்குப் பெற்ற இசுலாமிய மீட்பு முன்னணி தடைசெய்யப்பட்டது. அதன் தலைவர்கள், இளையவரான அலி பெலடி (Ali Belhadi) என்பரும் முதியவரான அபாசி மதானியும் (Abbasi Madani) சிறையிலிடப்பட்டனர். கொடுங்கோன்மை கட்டவிழ்த்து விடப்பட்டது. எனவே இசுலாமிய தற்காப்பு உணர்வு இதற்குப் பதிலாக வளர்ந்து, மேற்குலக வெறுப்பு கொழுந்துவிட்டு எரிந்தது. இன்று அல்ஜீரிய அரசின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விட்டது.

இப்போது இசுலாமிய மீட்பு முன்னணியின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கது என மேற்குலகே ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை. அல்ஜீரியாவைப் பகலில் இராணுவ அரசும் இரவில் இசுலாமிய மீட்பு முன்னணியுமே ஆள்வதாகக் கூறப்படுகின்றது. பகலில்கூட அல்ஜியர்ஸ் போன்ற முதன்மையான நகர் எல்லைக்கப்பால், அரசின் ஆணையென்பது செல்லாக்காசாகி விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வறுமையிலும் ஏழ்மையிலும் வாடும் ஏழை மக்களின் நம்பிக்கை ஒளியாக -இசுலாத்தின் அடிப்படையிலே தீர்வொன்றைக் காணமுடியும் என்ற நம்பிக்கையூட்டும் சக்தியாக FIS வளர்கின்றது. இப்போது அடிமட்ட இராணுவத்தில் இவர்களின் ஊடுருவல் நிரம்பிவிட்டதாகக் கூறப்படுகின்றது. முதன்முறையாக இப்போராளிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் அல்ஜீரியாவின் உள்நாட்டுப் பகுதிகளுக்குச் சென்றுவந்த பி. பி. சித் தயாரிப்பாளர் பில்றீஸ் (Philrees) கூறும் கதைகள் வியப்புக்குரியவை. தீவிரத்தன்மை வாய்ந்த GIA அமைப்புத்தவிர, இசுலாமிய மீட்பு முன்னணியின் இன்னொரு இராணுவப் பிரிவான இசுலாமிய மீட்பிற்கான இராணுவம் (A. I. S. -Army of Islamic Salvation) எனப்படும் அமைப்பின் போராளிகளை முதல் தடவையாகச் சந்தித்த இவர், அண்மையில் 'அல்ஜீரியாவின் இரகசியப் போர்' என்கின்ற தலைப்பில் தயாரித்து அளித்த நிகழ்வில், மேற்குலகின் கட்டுக்கதைகளுக்கு மாறாக ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த இராணுவ அமைப்புக்களாக இசுலாமிய போராளி அமைப்புக்களை வருணிக்கின்றார். மிகப்பரந்த நிலப்பகுதி இவர்கள் கட்டுப்பாட்டிலிருப்பதும் நவீன தொலைத்தொடர்பு மையங்கள், கள வைத்திய நிலையங்கள், சீருடை, சுடுகலன், உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் என்பவற்றை 'போராளிகள்' இயக்குவதும் இவரது தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. அத்தோடு கணனிகள், பக்ஸ் (Fax) பொறிகள், வரைபடங்கள், வெடிமருந்துகள் வெடிக்கவைக்கும் கருவிகள் என்பவற்றைக் கொண்ட நவீனமயப்படுத்தப்பட்ட அமைப்பாக இக்குழுக்கள் தோற்றம் பெறுவதாக இவர் குறிப்பிடுகின்றார். **132 ஆண்டுகால பிரான்சிய குடியேற்றவாதத்தின் விளைவுகள், 1954 -1962 ஆண்டிற்கு இடையில் நடைபெற்ற விடுதலைப் போரின் தாக்கங்கள் எல்லாமே இப்போது மேற்குலக பிரெஞ்சு -அரபுலக இசுலாமிய பண்பாட்டு மோதலாகத் தவிர்க்க முடியாமல் உருவெடுத்து விட்டதால்,** இனி இதற்கு இடைநிலை என்பதே கிடையாது என முத்தாய்ப்பு வைக்கின்றார்.



**அலிபெலடிச்சும் அபாசிமதானியும் இப்பொழுது சிறையிலிருக்கும் அல்ஜீரியாவின் அடுத்த ஆட்சியாளர்?**

> "வெற்றிகரமாக விமானக் கடத்தல் சம்பவம் முறியடிக்கப்பட்ட போதும், இசுலாமியப் போராளிகள் விரும்பியது எதுவோ அது நிறைவேறிவிட்டது; அல்ஜீரிய அரசின் நீதி பிழைத்த போக்கிற்குத் துணை நிற்கும் பிரான்சின் நிலைப்பாடு இப்போது உலக அரங்கிலே அம்பலப்படுத்தப்பட்டுக் கேள்விக் குறியாக்கப்பட்டும் விட்டது"

## இசுலாமியத் தீர்வு

அத்தோடு இன்னொரு பிரதான காரணியும் இவர்கள் வளர்ச்சிக்குத் தூண்டுதலாக அமைந்துவிட்டது. 1989 ஆம் ஆண்டின்பின் -ஆப்கான் போர் முடிவடைந்தபின் எகிப்து, அல்ஜீரியா போன்ற இடங்களுக்குத் திரும்பிய பல நூற்றுக்கணக்கான முஜாகுதீன் இளம் இசுலாமியப் போராளிகளின் பங்களிப்பே அது. இங்குள்ள வியப்பு என்னவென்றால், சோவியத்தின் வல்லாண்மைக்கு எதிராகப் போராடிய இவர்களுக்கு, அமெரிக்க சி. ஐ. ஏ. அமைப்பும் பாக்கித்தானின் ISI உளவு அமைப்பும் புகட்டிய இராணுவ, தொழில்நுட்ப அறிவு இப்போது இங்கே பயன்படுத்தப்படுவதுதான். அது மட்டுமன்றி, ஆப்கான் போராட்டத்திற்கு என வழங்கப்பட்ட பெருமளவு நிதியும் இத்தகைய இசுலாமியப் போராளிகளுக்கு திசை திருப்பப்பட்டதாகவும் இப்போது தெரியவந்துள்ளது. இவற்றோடு இசுலாமிய உணர்வென்பது தீவிரமடைவது, **இசுலாமியத் தீர்வொன்றை** இவர்கள் நாட, உலக அரசியல் அரங்கின்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

தமிழீழத்திலிருந்து பாலகுமாரன்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேற்குலகில் ஈழத்தமிழர்கள்

# மறையும் பண்பாடும், தொடரும் அடிமைக் கோலமும்

வெளிநாடுகளில் தங்கியுள்ள தமிழர்கள் ஆடம்பரமாக வாழ்கிறார்கள் என்பதைவிட, அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் கூற முடியும். உயிரை வெறுத்துச் சம்பாதிக்கும் பணத்தைத் தமது அந்தஸ்தை உயர்த்திக் காட்டும் வரட்டுக் கௌரவத்திற்காக செலவிட்டு வருகின்றனர் என்கிறார், யாழ். கத்தோலிக்க திருச்சபையின் குரு முதல்வர் அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல் அவர்கள். ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்குச் சென்று திரும்பிய அவரிடம் ஐரோப்பிய நாடுகளில் நமது தமிழீழ மக்களின் நிலைப்பாடு குறித்து நடந்த சந்திப்பின் போது அவர் வழங்கிய செவ்வியை இங்கு தருகின்றோம்.

**கேள்வி:-** அண்மையில் சில ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ளீர்கள். எந்தெந்த நாடுகளுக்கு என்ன நோக்கத்திற்காகச் சென்றீர்கள் என்று கூறமுடியுமா?

**பதில்:-** கனடா, பிரான்ஸ், சுவிஸ், பிரிட்டன், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு மூன்று மாதகால சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். ஜேர்மனியில் உள்ள மிசியோ (Missio) எனும் கத்தோலிக்க சமய ஸ்தாபனத்தின் அழைப்பின் பேரிலேயே இங்கிருந்து சென்றேன். எமது நாட்டின் பிரச்சினை குறித்து ஜேர்மனி நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு ஜேர்மன் மொழியில் பேசுவதற்காக அழைத்திருந்தனர். அங்கே என்னுடன் இரு இந்தியர்களும் 7 ஆபிரிக்கர்களும் வந்திருந்தனர். இவர்கள் ஆயர்களும் பேராசிரியர்களுமாவர். எமது தமிழ் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களது நிலைமைகளை அறிந்து கொள்வதற்காகவே மற்றைய நாடுகளுக்குச் சென்றிருந்தேன்.

**கேள்வி:-** தமிழ் மக்கள் அங்கே எமது கலாச்சாரங்களைப் பின்பற்றுகிறார்களா?

**பதில்:-** இவர்கள் நம் நாட்டிலே எமது கலாச்சாரங்களைப் பின்பற்றுவது போல வாழும் நாடுகளில் பின்பற்ற முடியாது. இருந்தும் சில சில ஸ்தாபனங்களும், இளைஞர்களும் ஒழுங்கு செய்து சில சில விழாக்களைக் கொண்டாடுகின்றார்கள். இவர்கள் மேற்குலகில் பரந்துபட்டே வாழ்கின்றனர். ஒன்றிணைந்து வாழ்வதில் சிக்கல்கள் உள்ளன. அதனால் பண்பாடுகளைப் பேணுவது கடினமாகவேயுள்ளது. இவர்களில் கனடாவில் மட்டும் ரொறன்ரோ நகரில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்கின்

**சந்திப்பு:சசீகரன்**

றனர். இவர்கள் ஓரளவு தமிழ்ப் பண்பாடுகளைக் காப்பாற்றி வருகின்றனர். இவர்கள் பத்து ஆண்டுகளுக்குள்ளேயே அங்கு சென்றுள்ளனர். அதிலும் வயது முதிர்ந்தவர்கள், நடுத்தரப் பெற்றோர், இளைஞர்கள் எனப் பல பிரிவினராகவுள்ளனர். இளைஞர்கள் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். அங்கே விசேட தமிழ் வகுப்புக்கள் நடக்கின்றன. பெற்றோர் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ப சிறு சிறு அளவுகளில் திருமண வைபவம், பிறந்த தினம் போன்றனவற்றை நடத்துகின்றனர். வயது முதிர்ந்தவர்கள் மாலை வேளைகளில் சந்தித்துத் தமக்குள் கலந்துரையாடுவர். இவை கோடை காலத்தில் மட்டுமே சாத்தியமாகின்றன. குளிர் காலத்தில் ஒதுங்கி விடுகின்றனர். பிரான்ஸ், இங்கிலாந்திலும் இது ஓரளவு கடைப்பிடிக்கப்படுகிறது. ஜேர்மனி, சுவிஸ் ஆகியவற்றில் கடைப்பிடிக்க முடியாதளவிற்கு அனைவருமே சிதறி வாழ்கின்றனர்.

**கேள்வி:-** எப்படியான ஓர் சூழ்நிலையில் இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்?

**பதில்:-** பல தரப்பட்ட சமூகங்களிடையே பின் தள்ளப்பட்ட, கொத்தடிமைகள் போன்ற ஓர் நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு மொழிப் பிரச்சினையே பெரிய பிரச்சினையாகவுள்ளது. இவர்கள் ஆங்கிலம் பேசுவது தமது அந்தஸ்தை உயர்த்தும் என்ற ஓர் போலிச் சிந்தனையுடையவர்

> "பத்து ஏக்கர்
> காணியிலே பலவித நவீன
> வசதிகளுடனும், இங்கே வீடுகளைக்
> கட்டி உல்லாசமாக வாழ்ந்தவர்கள்
> அந்நிய மோகத்தில் அள்ளுண்டு
> மேலைத்தேய நாடுகளிலே
> பதினைந்தாம் மாடியிலே,பத்தாவது
> அறையிலே முடங்கிக்
> கிடக்கின்றனர்;சிறகொடிந்த பறவைகள்
> போல் சிக்குண்டிருக்கும் இவர்கள்
> மனவலைகளை வெறும்
> வார்த்தைகளில் வடித்துவிட முடியாது"

களாகவுள்ளனர். இதனால் தமது பிள்ளைகளுக்கு வேற்று மொழிகளை கற்பிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழ் மொழி பேசுவதை ஓர் கௌரவக் குறைவாகக் கருதுகின்றனர். தமக்கு மொழி புரியா விட்டாலும் பெரும் சிரமப்பட்டுப் பிள்ளைகளுடன் மேற்கத்தேய மொழிகளிலேயே பேச விரும்புகின்றனர். ஏனெனில் பிள்ளைகள் தமிழைக் கற்று விடுவார்கள் என்ற பயம் அவர்களிடம் குடிகொண்டுள்ளது. இந்நிலை மாற வேண்டும். அவர்கள் வீடுகளிலாவது தமது பிள்ளைகளுடன் தமிழில் பேச வேண்டும் என நான் நேரடியாகவே அவர்களுக்கு அறிவுறுத்தினேன்.

**கேள்வி:-** கல்வியில் பாரபட்சம் காட்டப்படுகின்றார்களா?

**பதில்:-** அப்படிப் பாரபட்சம் காட்டப்படுவதாக நான் அறியவில்லை. பல இளைஞர்கள் கல்வி கற்பதை கண்டிருக்கிறேன். நோர்வே போன்ற நாடுகளில் இவர்கள் கற்க வேண்டும் என வற்புறுத்தப்படுகிறது. ஆனால் மற்றைய நாடுகளுக்குச் செல்வோர் பணம் சம்பாதிப்பதில் முக்கிய குறியாக இருப்பதால் அவர்கள் தாமாகவே கற்பதிலிருந்து ஒதுங்கி விடுவதாக அறிகிறேன்.

**கேள்வி:-** இங்கு வாழும் தமிழர்களுடன் அவர்களை ஒப்பிட்டுக் கூற முடியுமா?

**பதில்:-** இங்குள்ளவர்கள் ஒரே சமூகப் பின்னணியைக் கொண்டு அதற்குள் தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் சிறந்த ஒரு கட்டுக் கோப்புக்குள் நின்று வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அங்குள்ளவர்கள் "காய்ந்த மாடு கம்பிலே விழுந்த நிலை"யில் பெற்றோரின் பிடியிலிருந்து விடுபட்டதும் சுதந்திரம் கிடைத்துவிட்டதாகக் கருதிக் கொள்கின்றனர். கட்டுப்பாடு எதுவுமற்ற நிலையில் அந்தந்த நாட்டின் சுதந்திரங்களை தமக்குச் சாதமாக்கிக் கொண்டு தீய வழியிலே சென்று கொண்டிருக்கின்றனர். எமது சமூகக் கட்டுக் கோப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

**கேள்வி:-** இவர்களுக்குச் சகல துறைகளிலும் சம அந்தஸ்து வழங்கப்படுகின்றதா?

**பதில்:-** எமது மக்கள் அந்நிய நாட்டிலே தொழிலுக்காக, ஊழியத்திற்காக கூலிப்படைகளாகவே வாழுகின்றனர். சமூகம் அவர்களைத் தமக்குத் தேவை என்று கருதுகிறது. ஏனெனில் எவருமே செய்ய முடியாத மூன்றாம் மட்டத் தொழில்களை எல்லாம் இவர்கள் பணத்துக்காகச் செய்யத் தயாராக இருக்கின்றனர்.

அந்த நாட்டு மக்கள் சிலர் இவர்கள் வெளியேற வேண்டும் என கடும் எதிர்ப்புக் காட்டி வருகின்ற போதிலும், ஒரு பகுதியினர் இவர்கள் இல்லாது தம்மால் சீவிக்க முடியாது என வெளிப்படையாகவே கூறிவருகின்றனர். ஏனெனில் இவர்கள் செய்யும் வேலையைச் செய்ய ஏனைய வெளிநாட்டவர்கள் தயாராக இல்லை என்கின்றனர்.

> "இவர்கள், ஆங்கிலம் பேசுவது தமது அந்தஸ்தை உயர்த்தும் என்ற ஓர் போலிச் சிந்தனையுடையவர்களாகவுள்ளனர்; இதனால் தமது பிள்ளைகளுக்கு வேற்று மொழிகளை கற்பிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழ் மொழி பேசுவதை ஓர் கௌரவக் குறைவாகக் கருதுகின்றனர். தமக்கு மொழி புரியாவிட்டாலும் பெரும் சிரமப்பட்டு பிள்ளைகளுடன் மேற்கத்தேய மொழிகளிலேயே பேச விரும்புகின்றனர். ஏனெனில், பிள்ளைகள் தமிழைக் கற்று விடுவார்கள் என்ற பயம் அவர்களிடம் குடி கொண்டுள்ளது. இந்நிலை மாறவேண்டும். வீடுகளிலாவது தமது பிள்ளைகளுடன் தமிழில் பேசவேண்டும் என நர்ன் நேரடியாகவே அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

**கேள்வி:-** எப்படியான வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன?

**பதில்:-** தமிழர்கள் எவ்வளவு தான் படித்தாலும் அவர்களுக்கு வழங்கப்படும் அதி உயர் வேலை வாகனம் செலுத்துவதாகவே உள்ளது. இரண்டாம் மூன்றாம் தர கூலி வேலைகள் தான். எந்த சந்தர்ப்பத்திலும் உயர்பதவிகளை வழங்க அவர்கள் தயாராக இல்லை. அந்நியர் அந்நியராகவே கணிக்கப்படுகின்றனர். பணத்துக்காக இவர்கள் இயந்திரங்களைக் கொண்டு செய்யும் வேலைகளைத் தமது உடல்வலுவைக் கொண்டு செய்து முடிக்கிறார்கள். இதனால் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே இவர்கள் நோய் வாய்ப்பட நேரிடுவதுடன், ஆயுள் குறைந்தவர்களாக மாறவும் வாய்ப்புண்டு.

**கேள்வி:-** இவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் எவ்வாறு உள்ளன?

**பதில்:-** மேற்குலக நாடுகள் சில ஒன்றிணைந்து தமக்கென வொரு மொழி, கடவுச்சீட்டு போன்றவற்றைப் பயன்படுத்தவும் பொருண்மிய ரீதியில் உயரவும் தீர்மானித்துள்ளன.

இதனால் தமக்குள் வேலை வாய்ப்பு அற்றிருப்போருக்கு முன்னுரிமைகளையும் சலுகைகளையும் வழங்கி வருகின்றனர். இவர்கள் இத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடிப்பதால் மூன்றாம் உலக நாடுகளில் இருந்து சென்றோருக்கான வேலை வாய்ப்புக்கள் குறைந்து கொண்டே வருகின்றன. இதனாலேயே இவர்கள் மிகவும் கடினமான வேலைகளைக்கூட விரும்பியோ விரும்பாமலோ செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

**கேள்வி:-** வெளிநாடுகளில் வாழும் இவர்கள் அங்கு தாம் சென்றதன் நோக்கை அடைந்து விட்டார்களா?

**பதில்:-** பணம் சம்பாதிப்பது தான் இவர்களது அடிப்படை நோக்கமாக இருக்கிறது. ஆனால் எதிர்பார்ப்பது போல் பெருமளவில் உழைக்கின்ற போதிலும் இவர்களால் சேமிக்க முடிவதில்லை. அந்தந்த நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ப, இவர்கள் தமது தகுதியையும் மறந்து அங்கு சென்ற நோக்கையும் மறந்து பகட்டு வாழ்க்கை வாழ முற்படுகின்றனர். இதனால் இவர்கள் கார், தொலைக்காட்சி என பலதரப்பட்ட வசதிகளைக் கொண்டுள்ள போதிலும் கடனாளிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இரவு பகல் பாராது உழைத்தால்தான் ஓரளவு மீதப்படுத்த இவர்களால் முடிகிறது. இவ்வாறு மீதப்படுத்தும் பணத்தைக் கொண்டு சீட்டுப் பிடித்தே வீட்டுக்கு சிறு தொகையை இவர்களால் அனுப்ப முடிகிறது. இதைப் புரிந்து கொள்ளாத பெற்றோர் இங்கிருந்தபடி பெருமளவு பணத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். அவர்கள் அங்கு கிடைக்கும் அகதிப் பணம் மற்றும் மகப்பேற்றுக்கான உதவிகளை மீதப்படுத்தியே சம்பாதிக்கின்றனர். சிலர் சூதாட்டம் மற்றும் கேளிக்கைகளில் கூட பெருமளவு பணத்தை இழந்து வருகின்றனர். இதிலிருந்து விடுபட்டுச் சம்பாதிப்பவர்கள் ஒரு சிலரேயுள்ளனர். இப்படியெல்லாம் அவர்கள் உயிரை வெறுத்து உழைப்பதை இங்குள்ளவர்கள் உணர்ந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர்.

**கேள்வி:-** இவர்கள் தற்போது எப்படியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்?

**பதில்:-** பெரும்பாலானவர்களுக்கு இயந்திர வாழ்க்கை அலுத்துவிட்டது. அவர்கள் நாட்டில் நல்ல சூழ்நிலை உருவானால் திரும்பி வரவே விரும்புகின்றனர். இவர்கள் வெறும் கையுடன் வருவதில் எதுவித பயனும் கிடைக்கப் போவதில்லை. ஏதாவது தமது எதிர்காலத்திற்குரிய மூலதனத்துடன்



தான் இங்கு வர வேண்டும். அப்படி வந்தாலே சிறு தொழில்களையாவது செய்து கொண்டு வாழ்க்கையை ஓட்டக் கூடியதாக இருக்கும். இதை நான் அவர்களுக்கு நன்கு உணர்த்தியுள்ளேன். அவர்களும் உணர்ந்துள்ளனர். சிலர் மேலைத்தேய வாழ்க்கை முறையுடன் ஒன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் இங்கு வருவதை விரும்பாதவர்களாகவேயுள்ளனர்.

**இங்குவர விரும்புவதாகக் கூறி இங்குள்ள நிலைமை பற்றி கேட்டவர்களுக்கு, தற்போது இங்குள்ள புதிய தலைமைத்துவத்தை ஏற்று, அதற்குக் கட்டுப்பட்டு வாழும் மன நிலையிருத்தல் வேண்டும் என்பதை நான் வலியுறுத்தியுள்ளேன்.**

**கேள்வி:-** மேலை நாடுகளில் வாழும் தமிழ்ப் பெண்களை அங்குள்ள எமது இளைஞர்கள் விரும்பாதன் காரணம் என்ன?

**பதில்:-** நீண்டகாலம் அங்கு வாழும் தமிழ்ப் பெண்கள் மேலைத்தேய நாடுகளின் கலாச்சாரங்களுடன் ஒன்றி, அந்த நாட்டு சட்டங்களைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றனர். இதனால் பெருமளவு பெண்கள் விவாகரத்துச் செய்து வருகின்றனர். இதை நோக்காகக் கொண்டு இங்கிருந்து மணமகளைத் தேர்ந்தெடுத்தால், தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளலாம் என அவர்கள் நினைக்கின்றார்கள் போல் தெரிகிறது.

**கேள்வி:-** மேற்குலகில் வாழும் தமிழர்களுக்கு இறுதியாக என்ன கூறி வந்தீர்கள்?

**பதில்:-** "எங்கள் நாட்டிலிருந்து மேற்குலக நாடுகளுக்கு வந்துள்ள நீங்கள் மேலைத்தேய

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழப் பொதுக் கல்வித்தேர்வு - '94

## கணிதத்தில் முதல் மாணவன்

"புலமைப்பரிசில் தேர்வில் தேறாதபோது ஏற்பட்ட மன விரக்தியைத் தொடர்ந்து, நான் எடுத்துக் கொண்ட சபதமும் தேசியத் தலைவரின் பரிசு பெற வேண்டும் என்ற இலட்சியமும் கணித பாடத்தில் அதிகூடிய புள்ளியை தேசிய மட்டத்தில் பெற வழிசமைத்துத் தந்தது" என்கிறார் யாழ். இந்துக் கல்லூரி மாணவனான சிவசோதி செந்தூரன்.



செந்தூரன்

விடுதலைப் புலிகளின், 'தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை'யால் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடாத்தப்பட்ட தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில், கணித பாடத்தில் தேசிய மட்டத்தில் 99 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் முதலிடத்தையும், பொதுவாகத் தேசிய மட்டத்தில் ஆறாவது இடத்தையும் தட்டிக் கொண்ட செந்தூரனை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

ஆரம்பக்கல்வியை மட்டுவில் சரஸ்வதி கனிஸ்ட வித்தியாலயத்தில் பயின்றேன். ஆண்டு ஐந்தில் நடந்த புலமைப் பரிசில் தேர்வில் எதிர்பாராதவிதமாக சித்தி பெறவில்லை. இதனால் மனநிலை பாதிப்படைந்தது. இருந்தும் யாழ். இந்துக் கல்லூரியில் ஆண்டு ஆறில் அனுமதிப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டித் தேர்வில் தேறினேன்.

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் நாற்பது மாணவர்களை தேர்தெடுத்து 'ஏ' பிரிவில் அனுமதித்தனர். இதன்போது நானும் அந்தப் பிரிவிற்குள் அகப்பட்டுக் கொண்டேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களைக் கொண்ட வகுப்பாக அமைந்து விட்டதால் கடும்போட்டி நிலவியது.

புலமைப்பரிசில் தேர்வில் கணித பாடத்தில் கிடைத்த பின்னடைவை அடுத்து, மனதில் எழுந்த வைராக்கியத்தால் அதில் கூடுதலான கவனம் செலுத்தினேன். ஆண்டு ஒன்பது வரை வகுப்பில் பத்தாவது இடத்திலிருந்து முன்னேற முடியவில்லை. அதனால் முன்னேறிவிட வேண்டும் என்ற ஒரே நோக்குடன் விடாது முயன்றேன். ஆண்டு பத்தில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறி விட்டேன். ஆண்டு பத்தில் கற்கும் போதே தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களிற்குள் நானும் ஒருவனாகி, தேசியத் தலைவரின் பரிசினை பெற்றுவிட வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தேன்.

> "விடுதலைப் போராட்ட உச்சக் கட்டத்தின் மத்தியிலும் தமிழீழ மாணவர்களின் கல்வி அழிந்துவிடக்கூடாது என்பதற்காக "தமிழீழக் கல்விக் கழகத்தினை" உருவாக்கி கல்வியை வளர்த்திட தேசியத் தலைவர் எடுத்த முயற்சிகளை கல்விச் சமூகம் என்றுமே மறந்திட முடியாது"

எனது வீட்டிலிருந்து தினமும் பதினாறு மைல்தூரம் சைக்கிள் ஓடியே பாடசாலைக்கு சென்று வர வேண்டியிருந்தது. இதனால் இரவிலோ, பகலிலோ கல்வி கற்கக்கூடிய வாய்ப்பு இருக்கவில்லை. எனினும், கற்றவற்றை மீட்பதற்கு பாடசாலையில் கிடைக்கும் ஒய்வு நேரங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வேன். பாடசாலை முடிந்ததும் தனியார் கல்வி நிறுவனத்திற்குச் செல்வதற்கிடையில் இருமணிநேர இடைவெளி இருக்கும். அந்த நேரத்தில் வீட்டுவேலைகளை (Home Work) செய்து முடித்து விடுவேன்.

வகுப்பில் உள்ளவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை ஒவ்வொரு தேர்விலும் நிருபிப்போம். கணிதத்தில் 95 முதல் 100 புள்ளிகளுக்கிடையில் சகலரும் பெறுவோம். குறைந்தது பத்து பேர் வரையில் 100 புள்ளிகளை பெறுவார்கள். ஏனைய பாடங்களிலும் இது போலவே போட்டியிருக்கும். போட்டி இருந்தாலே எதிலும்

நேர்காணல்
சசிகரன்

முன்னேறமுடியும் என்பதற்கு எமது வகுப்பு நல்லதொரு எடுத்துக்காட்டாகவுள்ளது.

பாடசாலையில் தவராஜா ஆசிரியர் கணிதபாடத்தில் மிகவும் ஊக்கமளித்தார். ஏனைய பாடசாலைகளில் நடக்கும் தேர்வு வினாத்தாள்களிலிருந்து வித்தியாசமான, கடினமான கணக்குகளை திரட்டித் தருவார். நாமும் போட்டி போட்டு செய்து முடிப்போம். இதே போலவே தனியார் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த வேலாயுதம் ஆசிரியரையும் மறக்க முடியாது. அவரும் ஒவ்வொரு அலகினையும் பூர்த்தி செய்தவுடன், அதில் அச்சடித்த குறிப்புகளாக நூறு வரையான கணக்குகளைத் தருவார். இவை எமக்கு கணிதத்தில் ஓர் ஆர்வத்தை தந்ததுடன் நிறைவையும் தந்தது. தனித்து கணிதத்தில் மட்டும் கவனம் செலுத்தவில்லை. ஏனைய பாடங்களுக்கு செலவிடும் நேரத்தைவிட இதற்கு கூடுதலான நேரம் தேவைப்பட்டது. இம்முறை தேர்வில் ஏழு பாடங்களில் அதி விசேட சித்தியும் (7D), ஒரு பாடத்தில் சிறப்புச் சித்தியும் (C) கிடைத்தது.

பொதுக்கல்வித் தேர்வு பெறுபேற்றில் தமிழ்ப் பாடத்திற்கான முடிவு எனக்கு மட்டுமல்ல, பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமே பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. ஆங்கில இலக்கியத்தில்கூட, அதிவிசேட சித்தியை பெற முடிந்த எம்மால் தமிழில் பெறமுடியாது போய்விட்டது.

தமிழில் எந்தப் பகுதியில் எமக்கு புள்ளிகள் கிடைக்காது போனது என்பதை ஊகித்துக் கொள்ள முடியாதுள்ளதால், அதனை அறிந்து கொள்வதில் மிகவும் விருப்புடையவனாக இருக்கிறேன். விட்டதவறை தெரிந்து கெண்டாலே எதிர் காலத்தில் என்னை வளர்த்துக் கொள்ளமுடியும் என எண்ணுகிறேன்.


கணிதத்தை பொறுத்தவரையில் ஒரு புள்ளியை எந்தப் பகுதியில் இழந்தேன் என தெரியாதுள்ளது. சகல கணக்குகளும் திருப்திகரமாகவே செய்து முடித்தேன்.

கணிதபாடம் கடினமானது என மற்றவர்கள் கூறுவது வேடிக்கையானது.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

## விஞ்ஞானத்தில் முதல் மாணவன்

"விஞ்ஞான பாடத்தில் தேசியரீதியாக 'முதன்மைப் புள்ளி' கிடைக்குமென நான் எதிர்பார்க்கவில்லை; ஆங்கில பாடத்தில் மட்டும் அதி விசேட சித்தி கிடைக்குமென மட்டுமே எதிர்பார்த்தேன்" என்றார், தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் விஞ்ஞான பாடத்தில் அதிவிசேட சித்திபெற்று அதிகூடிய புள்ளியைப் பெற்ற காட்லிக் கல்லூரி மாணவன் சிவராசா சுதர்சன்.



சுதர்சன்

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் விஞ்ஞான பாடத்தில் அதிகூடிய புள்ளியைப் பெற்றதன் மூலம், விஞ்ஞான பாடத்தில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவன் என்ற வகையில் அவரைச் சந்தித்து உரையாடினோம்.

இதன்போது அவர் தன்னைப் பற்றி தெரிவிக்கையில்; "ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் நான் சித்தி பெறவில்லை; 1989 ஆம் ஆண்டு காட்லிக் கல்லூரியில் சேர்ந்து ஆண்டு ஆறு தொடக்கம் கல்வி கற்று வருகிறேன்.

கணித பாடத்தில் முதலில் அவ்வளவாகப் புள்ளிகள் கிடைப்பதில்லை. அதனாலேயே புலமைப் பரிசில் தேர்வில் சித்திபெற முடியவில்லை. ஆனால் பின்னர் படிக்கப் படிக்க அது தானாகவே இலகுவான பாடமாக எனக்கு வந்துவிட்டது. அண்மையில் நடந்த பொதுக்கல்வி தேர்வில் எனக்கு அதிவிசேட சித்தி கிடைத்ததுடன் 94 புள்ளிகளும் கிடைத்துள்ளன.

புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடையவில்லை என்ற கவலை எனக்கும்

> "புலமைப் பரிசில் பரீட்சையில் பின்னடைவுகளைச் சந்தித்தாலும் மனம் தளராது முயற்சிப்பின் மேல் வகுப்புகளில் விசேட சித்திகளுடன் சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடியும் என்பதை உணருகின்றேன்"

ஏற்பட்டதுதான். ஆனால் இன்று தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் ஐந்து பாடங்களில் அதிவிசேட சித்தியும் (5D) 3 பாடங்களில் திறமைச்சித்தியும் (3C) பெற்றது மட்டுமல்லாது, விஞ்ஞானத்தில் தேசிய மட்டத்தில் அதிகூடிய புள்ளி கிடைத்ததன் மூலம், புலமைப்பரிசில் தேர்வில் தேறியவர்கள் மட்டும் தான் படிக்கக் கூடியவர்கள் என்றில்லை. அதில் சித்தியடையா விட்டாலும் முயற்சியிருந்தால் ஏனைய உயர்வகுப்புகளிலும் அதிவிசேட சித்தியுடன் சிறந்த பெறுபேற்றைப்பெறமுடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. படிப்பைப் பொறுத்தமட்டில் அம்மாதான் ஊக்கப்படுத்துவார். அப்பா சொல்வார் யாரையும் யாரும் படி என்று வற்புறுத்தவோ திணிக்கவோ கூடாது, தானாக உணர்ந்து படிப்பதே படிப்பு என்று. என்னைப் பொறுத்தவரையும் நான் படிப்பது தேர்விற்கு ஒரு வாரத்திற்கு முன்புதான். சமூகக்கல்வியினையே கூடுதலான நேரம் படிக்க வேண்டியிருக்கும். மற்றைய பாடங்களைப் பொறுத்து பாடசாலையிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் படித்ததை வைத்தே தேர்வு எழுதினேன்.

தமிழீழ பொதுக் கல்வித்தேர்வு முதலில் நடாத்தப்படுவதால் இறுதித் தேர்வுக்கு முன்னரே எங்களை தயார்படுத்தக் கூடியதாகவுள்ளது. இதேவேளை பொதுக்கல்வித் தேர்வில் சித்தி அடைவோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுவதுடன், தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படுவதால், மாணவர்கள் தமிழீழ பொதுக் கல்வித் தேர்விற்கு தம்மை பெரியளவில் தயார்படுத்துகிறார்கள்.

உங்களுக்கும் தேசியத் தலைவரின் பரிசு கிடைத்துள்ளதே என்று கேட்ட போது, எனக்கு மிகவும் சந்தோசமாக இருக்கிறது. இது நான் எதிர்பார்க்காத ஒன்று. ஏனெனில் நான் முதலில் உங்களுக்குக் கூறினேன், ஆங்கில பாடத்தில் தான் அதிவிசேட சித்தி கிடைக்குமென எதிர்பார்த்தேன் என்று. ஆனால் விஞ்ஞான பாடத்தில் அதிகூடிய புள்ளிகள் கிடைத்து, அதற்காகத் தேசியத் தலைவரின் பரிசு பெறும் வாய்ப்புக் கிடைக்குமென நான் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராத ஒன்று, அதுவும் தேசியத் தலைவரின் பரிசும் கிடைப்பதென்பது மகிழ்ச்சிக்குரியதே" என்றார்.

"விஞ்ஞான பாடத்தில் தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் 94 புள்ளிகள் கிடைத்தன; பாடசாலை இறுதித் தவணைத் தேர்விலும் 94 புள்ளிகளே கிடைத்தன. விஞ்ஞானத்துறையில் மேற்படிப்பைத் தொடர வேண்டுமென்பதே எனது விருப்பாக ஆரம்பம் முதல் இருந்து வருகிறது. அதேவேளை, இத்தேர்வு முடிவும் விஞ்ஞானத்துறையில் எனது ஆர்வத்தை மேலும் தூண்டியுள்ளது. எனவே எனது விருப்பம் போல் உயர்கல்வியை விஞ்ஞானத் துறையிலேயே தொடர உள்ளேன்".

பாடசாலையில் உங்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், பட்டதாரி ஆசிரியர்களும் கல்வி கற்பிக்கும்போது, ஏன் தனியார் கல்வி நிலையங்களை நாடுகின்றீர்கள் எனக் கேட்டபோது,

"எல்லோரும் தனியார் கல்வி நிலையங்களுக்கு போகிறார்கள் என்பதால்

நேர்காணல்
சிவகுணபாலன்

நானும் அங்கு போனேன்; அது ஏன் என்பது எனக்கு தெரியவில்லை. இருந்தும் பாடசாலையில் கற்பதைவிட தனியார் கல்வி நிலையங்களில் கற்பதிலேயே ஆர்வமாக இருந்தது. பாடசாலையிலும் பின்னர் தனியார் கல்லி நிலையத்திலும் கற்பதால் வீட்டில் படிக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. தனியார் கல்விநிலையத்தில் இருந்து வந்தவுடன், சாப்பிட்டு விட்டு நித்திரைக்கு சென்று விடுவேன்.

மற்ற மாணவர்கள் எப்படியோ எனக்கு தெரியாது. என்னைப் பொறுத்தவரை நான் படிக்க வேண்டும் என்று நினைத்துப் படிக்கும் போது யாரும் குழப்பினால், தொடர்ந்து படிக்கமுடியாமல் படுத்துவிடுவேன். படிக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றினால் படிப்பேன். மற்றும்படி நித்திரை செய்வதே எனக்கு விருப்பமானதும் நான் செய்வதும்" என்றார் சுதர்சன். ■

நன்றி: ஈழநாதம்

www.tamilarangam.net

# விடுதலைப் புலிகளுக்கும்
## சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்கும்
## இடையிலான
இரண்டாம் கட்ட





## பேச்சு வார்த்தையின் போது...

சிறீ லங்கா அரசுப் பிரதிநிதிகளுடன் உணவு அருந்தும் யுத்தக் கைதிகளான "சாகரவர்த்தனா" கப்டன் பொயா கொடவும், அவரது உதவி அதிகாரியும்.

விடு தலைப் புலி வீரன் பாதுகாப்பு வழங்கி நிற்க பேச்சுவார்த்தை மண்டபத்திலிருந்து வெளியேறும் சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகள்.



பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் தலைமையில், சிறீலங்கா இராணுவப் பிரிகேடியர் எ.எஸ்.பீரிசை கைலாகு கொடுத்து இன்முகத்துடன் வரவேற்கின்றனர்.





பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட சிறீலங்கா இராணுவப்பிரிகேடியர் எ.எஸ். பீரிஸ் (இடது புறம்) கடற்படைக் கப்டன் பிரசன்னா ராஜரட்னா (வலது புறம்).

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F 091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்